# நடப்பு நிகழ்வுகள், ஜனவரி - 2020

## தமிழ்நாடு

❖ **காவலன் கைபேசிச் செயலி மாநிலத்தில் ஒரு மில்லியன் நபர்கள் பதிவிறக்கம் செய்துள்ளன.**

- சமீபத்தில் தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் ஜே.கே.திரிபாதி மக்களிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க SOS அழைப்பிற்கு இந்த செயலியை பதிவிறக்கம் செய்தோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
- காவல்த்துறைக்கிணங்க, குறைந்தது 9.4 லட்சம் ஆன்ராய்டு ஸ்மார்ட் போன் பயன்படுத்துவோர் இந்த செயலியை பதிவிறக்கம் செய்துள்ளனர். மேலும், கிட்டத்தட்ட 60,000 ஐ போன் பயன்படுத்துவோர்கள் இதை பதிவிறக்கம் செய்துள்ளனர்.
- காவல்துறையின் தகவலின்படி, கிட்டத்தட்ட 1.60 லட்சம் நபர்கள் இந்த செயலியைப் பதிவிறக்கம் செய்து சென்னை முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- அதைத்தொடர்ந்து கோயம்பத்தூர் (45,000 பேர்), காஞ்சிபுரம் (40,000) மற்றும் திருவள்ளூர் (35,000 பேர்) இடம் பெற்றுள்ளன.

❖ **தமிழ்நாட்டின் பெருநகரங்கள் மற்றும் சிறுநகரங்கள்** Swachh Survekshan League **2020 தரப்படுத்துதலில் இரண்டு கால்பகுதிகளிலும் முதல் 20 இடத்திற்குள் வரவில்லை.**

- 10 லட்சம் மக்கள்தொகைக்கு மேல் பெற்றுள்ள நகரங்கள் வரிசையில் முதல் கால்பகுதியில் 27வது இடத்தைப் பெற்று மதுரை நகரம் சிறந்ததாக தரப்படுத்தப்பட்டுள்ளது.
- இருப்பினும், அந்நகரம் இரண்டாவது கால்பகுதியில் 32வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.
- அதே 10 லட்சம் மக்களுக்கு அதிகமான பிரிவில் முதல் கால்பகுதியில் மதுரைக்கு அடுத்தாற்போல் கோயம்புத்தூர் மற்றும் சென்னை நகரங்கள் முறையே 31வது மற்றும் 38வது இடங்களைப் பெற்றுள்ளன.
- ஆனால், இவ்விரு நகரங்களும் இரண்டாவது கால்பகுதியில் முறையே 34வது மற்றும் 43வது தரத்தைப் பெற்றுள்ளன.
- 1 லட்சம் மற்றும் 10 லட்சம் இடைப்பட்ட மக்கள்தொகைக் கொண்ட நகரங்களின் பிரிவில் முதல் கால்பகுதியில் திருச்சி 38வது தரத்தைப் பெற்றுள்ளது. அதுவே இரண்டாவது கால்பகுதியில் 56 இடத்திற்கு சென்றது.
- 100 இடங்களுக்குள் முதல் கால்பகுதியில் அடங்கியுள்ள நகரங்கள் கும்பகோணம் (48), சேலம் (77), வேலூர் (83), தாம்பரம் (84) மற்றும் பல்லாவரம் (91) போன்றவைகளாகும்.
- அதேபோல, நாட்டிலுள்ள 60 இராணுவ வாரியங்களில் முதல் கால்பகுதியில் பரங்கிமலை இராணுவ வாரியம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. ஆனால், அது இரண்டாவது கால்பகுதியில் 24வது இடத்தைப் பெற்றுள்ளது.
- அதேபோல வெல்லிங்டன் இராணுவ வாரியம் முதல் கால்பகுதியில் நான்காவது இடத்தையும் மற்றும் இரண்டாவது கால்பகுதியில் 10வது இடத்தையும் பெற்றுள்ளது.

- இந்த Swachh Survekshan League 2020 என்பது ஏப்ரல்-ஜூன், ஜூலை-செப்டம்பர் மற்றும் அக்டோபர்-டிசம்பர் 2019 ஆகிய மூன்று வேறுபட்ட கால்பகுதிகளில் ஒவ்வொன்றும் 2000 மதிப்பெண்ணுடன் நடத்தப்படுகிறது.

❖ **தமிழ்நாடு அரசாங்கம், கடற்கரை பகுதிகள், முகத்துவாரங்கள் மற்றும் ஏரிகளில் நுண்ணிய நெகிழிகளால் ஏற்பட்டிருக்கும் மாசுவை கணக்கிடும் ஓர் ஆய்வை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.**

- தமிழ்நாடு, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அதற்குரிய நிதியளிக்கும்.
- இந்த ஆய்வு, 2019-2020 மற்றும் 2021-2022 இடையேயான மூன்றுவருட காலத்தில் தூத்துக்குடியிலுள்ள சுகந்தி தேவதாசன் கடல்சார் ஆராய்ச்சி நிறுவனத்தின் (Suganthi Devadason Marine Research Institute) மூலமாக தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமையால் (Environment Management Agency of Tamil Nadu) நடத்தப்படும்.
- இந்த ஆய்விற்காக, ரூ.81.20 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

❖ **தமிழ்நாடு அரசாங்கம், ரூ.3000 கோடிக்கு வெள்ளத்தடுப்பு மற்றும் தண்ணீர் பாதுகாப்பு திட்டத்தை தொடங்குவதற்கு திட்டமிட்டுள்ளது.**

- இத்திட்டம், 4.76 tmcft (thousand million cubic feet) மழைநீரை சேமிக்கவும் மற்றும் சென்னை மற்றும் கடலோர மாவட்டங்களின் வெள்ள அபாயத் தாக்கங்கலை குறைக்கவும் நோக்கம் கொண்டுள்ளது.
- இந்த ஒட்டுமொத்த வெள்ளத்தடுப்பு மற்றும் மேலாண்மை திட்டம், மாநிலத்தின் கடற்கரை மாவட்டங்களிலுள்ள மற்ற பாதிப்புக்குள்ள பகுதிகளின் இலக்கையடுத்து, சென்னை மற்றும் அதன் அருகிலுள்ள செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அதிக கவனம் செலுத்தப்படும்.
- இதற்காக, உலக வங்கியிலிருந்து நிதிபெறுவதற்கு மத்திய அரசின் ஒப்புதலையும் ஏற்கனவே மாநில அரசாங்கம் பெற்றிருந்தது. மேலும், அது மத்திய நீர் ஆணையத்தால் (Central Water Commission) ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் முக்கிய முகமையாக வருவாய் நிர்வாகம் மற்றும் மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையகம் செயல்படும்.
- இத்திட்டத்தை அமுல்படுத்தும் பொறுப்பு பொதுப்பணித்துறையின் நீர் ஆதாரங்கள் பிரிவிடம் உள்ளது.
- இத்திட்டம், 93 பிரிவுகளாக்கப்பட்டுள்ள 620 பணிகளுக்குமேல் உள்ளடக்குகிறது.
- இத்திட்டம், பாலாறு, அடையாறு. கோவலம் மற்றும் கொசஸ்தலையார் போன்றவைகளின் குறுக்கே ரூ.396 கோடிக்கான 14 தடுப்பணைகள் கட்டுவதையும் உள்ளடக்கும்.
- இத்திட்டத்தின் ஒரு பகுதியாக செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள 400-க்கும் அதிகமான நீர்நிலைய அமைப்புகள் தூர் வாரப்பட்டு அதன் கொள்ளளவை அதிகப்படுத்த ரூ.750 கோடி செலவிடப்படும்.

❖ **தமிழ்நாடு அரசாங்கம், மிகநீண்டகாலம் நிழுவையிலுள்ள சென்னை-கன்னியாகுமரி தொழில் வழித்தட திட்டத்தின் பகுதியாக 15 மாநில**

**நெடுஞ்சாலைகளில் 6 நெடுஞ்சாலைகளை மேம்படுத்துவதற்கான ஏலங்களை விடுவிக்கவுள்ளது.**

- இத்திட்டத்திற்கான வெளிப்புற நிதியளிக்கும் முகமையாக ஆசிய வளர்ச்சி வங்கி இருக்கும்.
- இத்திட்டத்திற்கான $484 மில்லியனை நிதியுதவியாக ஆசிய வளர்ச்சி வங்கி வழங்கும்.
- இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் வர்த்தகத்தை மேம்படுத்துவது மற்றும் இவ்வழித்தடத்தில் அதிக முதலீடுகளை ஈர்த்துப் போட்டியை அதிகப்படுத்துவதாகும்.
- இந்த வழித்தடம், தூத்துக்குடி, திருநெல்வேலி, மதுரை, திருச்சி, கடலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, மணப்பாறை, பெரம்பலூர் மற்றும் காரைக்குடி ஆகியவற்றை முக்கிய நகரங்களாக கண்டறிந்துள்ளது.

❖ **நாமக்கல் மாவட்டத்திலுள்ள திருச்சங்கோடு ஊராட்சி ஒன்றியத்தின் ஏ.ரியா என்பவர் மாநிலத்தில் முதலாவது மூன்றாம் பாலின ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினராக வந்துள்ளார்.**

- ரியா 2701 வாக்குகளையும் மற்றும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சி.காந்தம்மாள் 1751 வாக்குகளையும் பெற்றனர்.
- அவர், கருவேப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் இரண்டாவது வார்டு உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட்டார்.

❖ **21 வயதுடைய ஜே.சந்தியா ராணி மாநிலத்தில் மிகவும் இளமையான பெண் கிராம ஊராட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.**

- அவர், கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள கட்டிநாயக்கன்தொட்டி கிராம ஊராட்சியில் 210 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றுள்ளார்.
- அவர், சுயேட்சையாகப் போட்டியிட்டார். அவர் கர்நாடகாவிலுள்ள ஒரு கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பி.பி.ஏ படித்துக் கொண்டிருந்தார்.
- அவருடைய தகப்பனார் ஜெயசாரதி ஒரு விவசாயி மற்றும் அவர் அந்த கிராம ஊராட்சியின் முன்னாள் தலைவராவார்.

❖ **கீழடி அகழாய்வுகளின் ஆறாவது கட்டம் ஜனவரி 3 ஆம் வாரத்தில் தொடங்கவுள்ளது.**

- அது, கீழடி அகழாய்வு இடங்களான கொந்தகை புதைகுழி தளம், அகரம் மற்றும் மணலூர் வாழ்விடங்களில் மேற்கொள்ளப்படும்.
- இந்த செயல்பாட்டை மேற்கொள்வதற்காக மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்துடன் தமிழ்நாடு தொல்லியல் துறை (TamilNadu Archaeology Department – TNAD) இணைந்துள்ளது.
- குரோம்பேட்டையிலுள்ள மெட்ராஸ் தொழில்நுட்ப நிறுவனம் (Madras Institute of Technology) அதற்கு உதவியாக இருக்கும்.
- அதைத்தொடர்ந்து, ஈரோடு மாவட்டத்திலுள்ள கொடுமணல் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள சிவக்கலை மற்றும் ஆதிச்சநல்லூர் ஆகிய இடங்களில் அகழாய்வுகளை தமிழ்நாடு தொல்லியல்துறை தொடங்கும்.

❖ **பெருநகர சென்னை மாநகராட்சி ஜனவரி 6-ல் பெசன்ட் நகரிலுள்ள எலியட் கடற்கரையை ஒரு குப்பையில்லா மண்டலமாக** (Litter – free Zone) **அறிவித்துள்ளது.**

- மாநகராட்சி, ஆங்காங்கே குப்பைகளை சேகரிக்க பல வண்ணங்களில் குப்பைத் தொட்டிகளை வைத்துள்ளது.
- சேகரிக்கப்பட்ட குப்பைகள் மறுசெயல்பாட்டிற்காக அனுப்பப்படுகிறது.
- மாநகராட்சி, நெகிழிகள், பாட்டில்கள் மற்றும் குப்பைகளை சேகரிப்பதற்கு ஒரு பூதாகர அமைப்பான மீனை உருவாக்கியுள்ளது.

❖ **தமிழ்நாடு அரசாங்கம், மின்சாரம், சிவில் பணி, காவலன், போக்குவரத்து காவல், FIR தொடர்பு மற்றும் இழந்த ஆவண அறிக்கை உள்ளடங்க அணைத்து அரசாங்கப் பணிகளுக்காக வெகுவிரைவில் ஒரு பொதுவான இணையதளத்தை தொடங்குவதற்கு திட்டமிட்டுள்ளது.**

- இந்த இணையதளத்தை தொடங்குவதற்காக ஏலங்களை வெகுவிரைவில் அரசாங்கம் அறிவிக்கும்.
- இத்திட்டம் மின்னணு ஆளுகை ஆணையத்தால் நடத்தப்படும். இத்திட்டம், மூன்று மாதங்களுக்குள் முடிக்கப்படும்.

❖ **பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்ககம்** (Directorate of Public Health and Preventive Medicine), **ஜனவரி 19-ல் துரிதப்படுத்தப்பட்ட போலியோ நோய்த்தடுப்பு இயக்கத்தின் முதலாவது சுற்றில் ஐந்து வருடங்களுக்குட்பட்ட கிட்டத்தட்ட 70.50 லட்சம் குழந்தைகளின் தடுப்பூசிக்கு இலக்கு நிர்ணயித்துள்ளது.**

- இந்த வருடம், தமிழ்நாடு 16வது போலியோ இல்லாத வருடத்திற்குள் நுழைந்துள்ளது.
- ஜனவரி 19-ல், 43,051 சாவடிகள் மூலமாக குழந்தைகளுக்கு போலியோ சொட்டுமருந்துவிடும் நிர்வாகத்தை இயக்ககம் மேற்கொள்ளும்.
- இந்த நோய்த்தடுப்பு இயக்கப்பணிகள் சாவடிகள் மூலமாக காலை 7 மணியிலிருந்து மாலை 5 மணிவரை செயல்படும்.

❖ **முதலமைச்சர் எடப்பாடி.கே.பழனிச்சாமி, தெற்கு பகுதிக்கு உபரிநீரை திருப்புவதற்கு காவேரி-குண்டாறு இணைப்புத் திட்டத்திற்கான அடிக்கல் வெகுவிரைவில் நாட்டப்படும் என்று அறிவித்துள்ளார்.**

- முதலமைச்சர் அத்திட்டத்திற்கான செலவு மதிப்பீடு ரூ.20000 கோடியையும் அறிவித்தார்.
- மாநில அரசாங்கம், மத்திய அரசாங்கத்தின் உதவியுடன் இத்திட்டத்தை இணைந்து செயல்படுத்துவதற்கு ஒரு விரிவான திட்ட அறிக்கையை தயாரித்துக் கொண்டுள்ளது.
- பொதுப்பணித்துறை கரூர் மாவட்டத்திலுள்ள மாயனூர் தடுப்பணை அருகிலுள்ள ஒரு இணைப்பு கால்வாயுடன் இத்திட்டத்தை தொடங்குவதற்கு திட்டமிட்டுள்ளது.
- இத்திட்டத்தின் முதல் கட்ட மதிப்பீட்டுச் செலவு ரூ.7677 கோடியாகும்.
- இத்திட்டம், திருச்சி, கரூர், புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் நீர்பாசனத் தேவை பயன்பாட்டிற்காக மேற்கொள்ளப்படுகிறது.

- முதலமைச்சர், 35,000 கிலோமீட்டர் நீள கால்வாய்கள் பயன்பெறும் மிகப்பெரிய அணைக்கட்டு திட்டத்தை (Grand Anicut Scheme) உருவாக்குவதற்கு மத்திய அரசின் ஆதரவை வேண்டியிருப்பதாகவும் அறிவித்துள்ளார்.
- இத்திட்டத்தின் மூன்றாவது கட்டம் கரூர் மாவட்டத்திலுள்ள மாயனூர் தடுப்பணையையும் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள தெற்கு வெள்ளாரையும் இணைக்கும்.

❖ **தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், 2022 வரை மேலும் நான்கு வருடங்களுக்கு ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கான சுகாதாரக் காப்பீட்டை மாநில அரசாங்கம் நீட்டித்துள்ளது என்று ஜனவரி 8-ல் சட்டசபையில் அறிவித்தார்.**

- 988 மருத்துவ மனைகள் இணைப்புடன் ஒவ்வொருவருக்கும் ரூ.350 பிரிமியத்துடன் 7.30 லட்சம் ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களை இத்திட்டம் உள்ளடக்குகிறது.
- இத்திட்டம், அவர்களுக்கு ரூ.4 லட்சம் வரையான மருத்துவ செலவிற்கு வழங்கப்படுகிறது.
- இத்திட்டம், மேலும் 7.5 லட்சம் பேருக்கு வழங்கப்படும்.

❖ **தமிழ்நாடு அரசாங்கம், ஜனவரி 8-ல் சட்டசபையில் மூன்று மசோதாக்களை அறிமுகப்படுத்தியுள்ளது.**

- முதல் மசோதா விவசாய சந்தை குழுக்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள சிறப்பு அலுவலர்களின் பணிக்காலத்தை நீட்டிப்பதாகும்.
- இரண்டாவது மசோதா தமிழ்நாடு மீன்வளங்கள் பல்கலைக்கழகத்தை தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வள பல்கலைக்கழகம் என்று பெயர் மாற்றம் செய்வதாகும்.
- மூன்றாவது மசோதா பதியப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் தலைவர் மற்றும் துணைத்தலைவரை தற்காலிகப் பதவிநீக்கம் செய்வதற்கு மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்குதல்.
- தற்போது, 1983 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டபடி, ஒரு சங்கத்தின் தலைவர் அல்லது துணைத்தலைவரை அரசாங்கம் தற்காலிக பணிநீக்கம் செய்யமுடியாது.
- கூட்டுறவுத்துறை அமைச்சர், செல்லூர் ராஜு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (திருத்தம்) மசோதா 2020 ஐ அறிமுகப்படுத்தினார்.
- மீன்வளத்துறை அமைச்சர், டி.ஜெயக்குமார் தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம் (திருத்தம்) மசோதா 2020 ஐ அறிமுகப்படுத்தினார்.
- விவசாயத்துறை அமைச்சர் ஆர்.துரைக்கண்ணு தமிழ்நாடு விவசாய பொருள் சந்தை (முறைப்படுத்துதல்) திருத்தமசோதா 2020 ஐ அறிமுகப்படுத்தினார்.

❖ **பெய்ஜிங் - ஐ அடிப்படையாகக் கொண்ட ஆசிய கட்டமைப்பு முதலீட்டு வங்கி,** (Asian Infrastructure Investment Bank-AIIB) **சென்னையில் கோடம்பாக்கத்திலுள்ள மீனாட்சி கல்லூரி மற்றும் பூவிருந்தவல்லி புறவழிச்சாலை இடையே கிட்டத்தட்ட 18 கிலோமீட்டர் நீளத்தின் கட்டுமானத்திற்கு நிதியளிக்கவுள்ளது.**

- இது, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் (CMRL) 118.9 கிலோ மீட்டர் இரண்டாவது மட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- அதைக்கட்டுவதற்காக, AIIB கிட்டத்தட்ட ரூ.2306 கோடி ($320 மில்லியன்) நிதியளிக்கவுள்ளது.
- ஆசிய வளர்ச்சி வங்கி ADB, கலங்கரை விளக்கம் மற்றும் மீனாட்சி கல்லூரி இடையே 8கிலோ மீட்டர் அளவிற்கு கட்டப்படும் அந்த வழித்தடத்திற்கு நிதியளிக்கவுள்ளது.
- மாதாவரம் - சோழிங்கநல்லூர் மற்றும் மாதாவரம் - CMBT இடையேயான 52 கிலோமீட்டர் வழித்தட நீட்டிப்பிற்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (Japan International Cooperation Agency – JICA) நிதியளிக்கவுள்ளது.

❖ **தமிழ்நாடு சட்டசபை, குத்தகை சட்டத்தின்கீழ் பதிவுகளுக்கான காலம் நீட்டிக்கப்படுவதற்கான ஒரு இடைக்கால சட்டத்தை மாற்றுவதற்கு ஜனவரி 9-ல் ஒரு மசோதாவை இயற்றியுள்ளது.**

- தற்போது, இந்தவருட பிப்ரவரி மூன்றாவது வாரம் வரை இச்சட்டத்தின்கீழ், நிலப்பிரபுக்கள் மற்றும் குத்தகையாளர்கள் பதிவு செய்ய முடியும்.
- இந்த மசோதா துணை முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1960 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) சட்டம் எடுக்கப்பட்டு, 2017 ஆம் ஆண்டு நிலப்பிரபுக்கள் மற்றும் குத்தகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் தமிழ்நாடு முறைப்படுத்தும் சட்டம் (Tamil Nadu Regulation of Rights and Responsibilities of Landlords and Tenants Act, 2017) இயற்றப்பட்டு அது பிப்ரவரி 22, 2019-ல் நடைமுறைக்கு வந்தது.
- இந்த மசோதா ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இடைக்கால சட்டத்தை எடுத்துவிடுவதற்கு முற்படுகிறது.

❖ **தமிழ்நாடு அரசாங்கம், ஜல்லிக்கட்டு நிகழ்வுகளில் பங்கேற்கும் வீரர்கள் 21 வயதிலிருந்து 45 வயது வரை இருக்க வேண்டும் என்றும் மற்றும் அவர்கள் குறைந்தது 55 கிலோ எடையைப் பெற்றிருக்க வேண்டுமென்றும் அறிவித்துள்ளது.**

- சென்றவருடம், ஜல்லிக்கட்டு வீரர்களின் வயதுவரம்பு 20 மற்றும் 40 இடையே நிர்ணயிக்கப்பட்டது.
- ஜல்லிக்கட்டு வீரர்கள் மருத்துவரால் பரிசோதித்து வழங்கப்பட்ட தகுதி சான்றிதழ்களைப் பெற்றிருக்க வேண்டும்.
- வருடாந்திர ஜல்லிக்கட்டு இந்த வருடம் பாலமேடு மற்றும் அலங்காநல்லூரில் முறையே ஜனவரி 16 மற்றும் 17-ல் நடைபெறும்.

❖ **தமிழ்நாடு சட்டசபை ஜனவரி 9-ல் சமீபத்திய சட்டசபை கூட்டத்தொடரில் 15 மசோதாக்களை இயற்றியுள்ளது.**

- அந்த மசோதாக்களில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் தேர்தல்களை மறைமுகமாக்குவது ஒன்றாகும்.
- சட்டசபை, மக்களவை மற்றும் சட்டசபைகளில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர்களுக்கான இடஒதுக்கீட்டை அடுத்த 10 ஆண்டுகளுக்கு

நீட்டிப்பதற்கு மற்றும் ஆங்கிலோ-இந்தியர்களின் இடஒதுக்கீட்டை முடிவுக்கு கொண்டுவருவதற்கும் முன்மொழியப்பட்ட அரசியலமைப்பு திருத்த தீர்மானத்தை ஒரு மனதாக ஏற்றுக்கொண்டது.

- தற்போது, மாநில சட்டசபை ஒரு ஆங்கிலோ-இந்திய உறுப்பினர் நியமிக்கப்படுகிறார். ஆனால், அவருக்கு வாக்குரிமை இல்லை.
- தமிழ்நாட்டில் சட்டசபையிலுள்ள ஆங்கிலோ-இந்திய உறுப்பினர் நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் ஆவார்.
- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தம்) மசோதா 2020, தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (திருத்தம்) மசோதா 2020 மற்றும் தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (இரண்டாவது திருத்தம்) மசோதா 2020 போன்றவை தமிழ்நாடு சட்டசபையால் இயற்றப்பட்ட மசோதாக்களுக்குள் அடங்கும்.

❖ **சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக்கிளை, சென்றவருடத்தைப் போலவே ஒரு ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதியால் தலைமை வகிக்கப்படும் ஒரு குழுவின் மேற்பார்வையின்கீழ் இந்தவருடம் அவணியாபுரம் ஜல்லிக்கட்டை நடத்துவதற்கு ஆணையிட்டுள்ளது.**

- நீதிபதிகள் எம்.துரைசாமி மற்றும் டி.ரவீந்திரன் ஆகிய இருவரை உள்ளடக்கிய அமர்வு இந்ததீர்பை கூறியது.
- மாநில அரசாங்கம், ஜனவரி 15லிருந்து 31 வரை அவணியாபுரத்தில் ஜல்லிக்கட்டு நடத்துவதை அனுமதிக்கும் ஓர் ஆணையை வழங்கியிருந்தது.
- இந்த ஆணைக்கு கால்நடை பராமரிப்புத்துறை, பால்வளத்துறை மற்றும் மீன்வளத்துறை போன்றவைகளாலும் ஒப்புதலளிக்கப்பட்டது.
- 2019-ல் ஜல்லிக்கட்டை நடத்துவதற்கு ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதியைத் தலைவராகக் கொண்ட குழு அமைப்பதற்கு ஒரு ஆணையை நீதிமன்றம் வழங்கியிருந்தது.
- சென்றவருடம், அந்தக்குழுவில் ஒரு ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி, தேங்கல்பாசன விவசாயிகள் சங்கத்தின் 8 உறுப்பினர்கள், 16 கிராமத்தினர்கள் மற்றும் 3 வழக்கறிஞர்கள் உறுப்பினர்களாக இருந்தனர்.

❖ **பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை முழுவதும் சில திட்டங்களை தொடங்குவதற்கு உலக வங்கியிடமிருந்து ரூ.53000 கோடியை வேண்டும் ஒரு முன்மொழிவை சமர்பித்துள்ளது.**

❖ **சென்னை மாநகராட்சி நகரத்தின் பல்வேறு பகுதிகளில் ஸ்மார்ட் கம்பங்களை** (Smart Poles) **பொருத்திக் கொண்டிருக்கிறது.**

- இது, கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு முறையின் முக்கிய பகுதிகளில் சிறந்த ஒருங்கிணைப்பை வசதிப்படுத்தும்.
- சென்னை மாநகராட்சி 50 இடங்களில் இவ்வித ஸ்மார்ட் கம்பங்களைத் தொடங்கியுள்ளது.
- இவ்வித ஸ்மார்ட் கம்பங்கள், மழை அளக்கும் கருவி, பொது முகவரி அமைப்பு, கேமரா மற்றும் மாசு அளவிடும்கருவி போன்றவற்றைப் பெற்றுள்ளன.
- அவை, முக்கியமான சாலைகளில் போக்குவரத்தின் மீதான தகவல் சேகரிப்பதிலும் ஈடுபடுகின்றன.

- ரிப்பன் கட்டிடத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள ஸ்மார்ட் கம்பம், பொதுமுகவரி அமைப்பு, கேமரா, மழை அளவிடும் கருவி, மாசு அளவிடும் கருவி மற்றும் ஒளி விளக்குகள் போன்றவற்றை பெற்றுள்ளது.

❖ **மாவட்ட பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத்தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்கள் பதவிகளுக்கு மறைமுகத் தேர்தல்கள் ஜனவரி 11-ல் மாநிலம் முழுவதும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் நடத்தப்பட்டன.**

- ஆளுங்கட்சியான அ.தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சியான பா.ம.க ஆகிய கட்சிகள் இணைந்து 14 மாவட்ட பஞ்சாயத்து தலைவர் பதவியையும் மற்றும் 13 துணைத்தலைவர் பதவியையும் வென்றுள்ளனர்.
- எதிர்கட்சியான தி.மு.க 12 மாவட்ட பஞ்சாயத்து தலைவர் பதவியையும் மற்றும் 13 துணைத்தலைவர் பதவியையும் வென்றுள்ளது.
- 314 ஊராட்சி ஒன்றியத்தலைவர் பதவிகள் உள்ள இந்த மாநிலத்தில் அ.தி.மு.க கூட்டணி 150 பதவிகளையும் மற்றும் தி.மு.க கூட்டணி 133 பதவிகளையும் வென்றுள்ளன.
- அதேபோல, 314 ஊராட்சிஒன்றிய துணைத்தலைவர் பதவிகளில் அ.தி.மு.க கூட்டணி 124 பதவிகளையும் மற்றும் தி.மு.க கூட்டணி 118 பதவிகளையும் வென்றுள்ளன.
- மொத்தம் 5090 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவிகளில் தி.மு.க கூட்டணி 2325 பதவிகளையும் மற்றும் அ.தி.மு.க கூட்டணி 1966 இடங்களையும் வென்றுள்ளன.
- மேலும், மொத்தம் 515 மாவட்ட கவுன்சிலர் பதவிகளில் 268 பதவிகளை தி.மு.க கூட்டணி வென்றுள்ளது.
- நேரடி தேர்தல்கள் டிசம்பர் 27 மற்றும் 30-ல் இரண்டு கட்டங்களாக நடைபெற்றன மற்றும் ஜனவரி 2 மற்றும் 4-க்கிடையே முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

❖ **பெருநகர சென்னை மாநகராட்சி 5 வயதுவரையுள்ள குழந்தைகளுக்கு தடுப்பூசிக்காக ஜனவரி 19-ல் ஒரு போலியோ தடுப்பூசி இயக்கத்தை நடத்தவுள்ளது.**

- சென்னையில் 5 வயதிற்கு குறைவான குழந்தைகள் கிட்டத்தட்ட 7.03 லட்சம் என மதிப்பிடப்படுகிறது.

❖ **மெட்ரோ வாட்டர் அமைப்பு, கோயம்பேடு மற்றும் கொடுங்கையூரிலுள்ள அதன் இரண்டு** tertiary treatment reverse osmosis **களில்** 45MLD (Million Litres a Day) **லிருந்து** 60MLD **வரை சாம்பல் நீரை மறுசுழற்சி செய்வதற்கு அதன் திறனை வளர்த்துள்ளது.**

❖ **மதுரை மாவட்ட காவல்துறை, "மதுரைக் காவலன்"** (Madurai Kavalan) **கைபேசி பயன்பாடு மூலமாக ஜனவரி 16 மற்றும் 17-ல் முறையே பாலமேடு மற்றும் அலங்காநல்லூரில் நடப்பதற்கு திட்டமிட்டுள்ள ஜல்லிக்கட்டு நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பு செய்வதற்கு திட்டமிட்டுள்ளது.**

- மதுரைக் காவலன் செயலி 2017-ல் அறிமுகப்படுத்தப்பட்டது.

❖ **வடகிழக்கு பருவமழை மாநிலத்திற்கு எவ்வித புயல் மற்றும் பிரதான முறைகளை ஏற்படுத்தாமல் ஜனவரி 10-ல் அதிகாரப்பூர்வமாக நிறைவடைந்தது.**

❖ **துணை ஜனாதிபதி எம்.வெங்கையா நாயுடு ஜனவரி 11-ல் திருவையாறிலுள்ள ஜானியில் சமாதியில் 173 வது வருடாந்தர தியாகராஜ ஆராதனையை தொடக்கி வைத்தார்.**

- இத்திருவிழா, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஐந்து ஆறுகள் சந்திக்கும் இடமான திருவையாறிலுள்ள காவேரி கரையில் ஐந்து நாட்கள் நடத்தப்படும்.
- இந்த இசைத்திருவிழா, ஜானி தியாகராஜரால் ஏற்படுத்தப்பட்ட பக்தி பாடல்களைப் பாடக்கூடிய ஒரு பிரபலமான திருவிழாவாகும்.
- இத்திருவிழாவின் முக்கியமான நிகழ்வு தியாகராஜர் உருவாக்கிய ஐந்து ஞானராகங்களை ஒரு குழு பாடுவதாகும். அதற்கு பஞ்சரத்ன கீர்த்தனா (Five jewels of Saint's Composition) என்று பெயர்.
- இத்திருவிழா வழக்கமாக புஷ்யா பாகுலா பஞ்சமி தினத்தில் நடத்தப்படுகிறது. அதாவது, தியாகராஜர் ஜனவரி 6, 1847-ல் தனது 79வது வயதில் காலமான நினைவு தினத்தில் இது நடத்தப்படுகிறது.
- இந்த வருடம் அந்த நாள் ஜனவரி 15-ல் வருகிறது.
- ஜனவரி 15-ல், புனிதர் மற்றும் ஞானி தியாகராஜருக்கு மரியாதை செலுத்தக்கூடிய வகையில் பஞ்சரத்ன கீர்த்தனைகள் பாடும் குழுவில் பங்கேற்பதற்கு 1000 க்கும் அதிகமான இசைக்கலைஞர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.
- கர்நாடக இசையின் மும்மூர்த்திகள் 1. தியாகராஜ சுவாமி (1767-1847), 2. முத்துச்சுவாமி தீட்சிதர் (1775-1835) மற்றும் 3. சியாமா சாஸ்திரி (1762-1827)

❖ **மத்திய அரசாங்கம், VIP கள் பாதுகாப்பு பணியிலிருந்து தேசிய பாதுகாப்பு குழு (NSG – National Security Guard) படைகளை முழுவதுமாக விளக்கிக் கொள்வதற்கு தீர்மானித்துள்ளது.**

- 1984-ல் கருப்பு பூனை படைகள் முக்கியஸ்தர்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டது.
- இது, மேல்மட்ட 'Z+' பிரிவில் அதிக அபாயமுள்ள 13 முக்கியஸ்தரர்களுக்கு கொடுக்கப்படுகிறது. ஒவ்வொன்றிலும் கிட்டத்தட்ட 2 டசன் பணியாளர்கள் அடங்குவர்.
- பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் உத்திரபிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யாநத் போன்றோருக்கு கொடுக்கப்படும் இவ்வித பாதுகாப்பு வெகுவிரைவில் துணை இராணுவப் படைகளுக்கு மாற்றப்படவுள்ளது.
- மற்ற NSG பாதுகாப்பு பெற்றவர்கள் முன்னாள் முதல்வர்கள் மாயாவதி, முலாயம் சிங், சந்திரபாபு நாயுடு, பிரகாஷ் சிங் பாதல் மற்றும் ∴பரூக் அப்துல்லா, அஸ்ஸாம் முதலமைச்சர் சர்பானந்த சோனோவால் மற்றும் முன்னாள் துணைபிரதமர் எல்.கே.அத்துவாணி போன்றவராவர்.

❖ **பிரதமர் நரேந்திர மோடி, ஜனவரி 12-ல் கொல்கத்தா துறைமுகப் பொறுப்பு கழகத்திற்கு சியாமா பிரசாத் முக்கர்ஜி துறைமுகப் பொறுப்பு கழகம் என்று மறுபெயரிட்டார்.**

- கொல்கத்தா துறைமுகப் பொறுப்பு கழகத்தின் 150 வது ஆண்டு நிறைவு விழாவில் பிரதமர் உரையாற்றி தபால்தலை வெளியிட்டார்.
- அந்நிகழ்வின்போது, பிரதமர் ரூ.600 கோடிக்கான துறைமுக மேம்பாட்டு செயல்பாடுகளையும் தொடங்கிவைத்தார்.
- சியாமா பிரசாத் முக்கர்ஜி என்பவர் பாரதிய ஜனசங்கத்தின் நிறுவனராவார்.
- அவர், சித்தரஞ்சன் லோகோமோட்டிவ் தொழிற்சாலை, தாமோதர் வேலி கழகம் மற்றும் இந்துஸ்தான் போர்விமான தொழிற்சாலை போன்றவற்றின் மேம்பாட்டிற்காக அடிக்கல் நாட்டினார்.

❖ **தமிழ்நாடு, சாலைப் பாதுகாப்பில் சிறந்த செயல்பாட்டிற்காக மத்திய அரசிடமிருந்து ஒரு விருதைப் பெற்றுள்ளது.**

- பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் ஜனவரி 13-ல் மாநில போக்குவரத்து அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கருக்கு இவ்விருதை வழங்கினார்.
- 2017 உடன் ஒப்பிடும்போது, 2018-ல் சாலை விபத்து இறப்புகளில் 32 சதவீத குறைவை மாநிலம் பதிவுசெய்துள்ளது.
- மேலும், தமிழ்நாடு 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிலும் சாலை பாதுகாப்பில் முதலிடம் வகித்தது.

❖ **சென்னை உயர்நீதிமன்றம், இந்தவருடம் மதுரை மாவட்டத்திலுள்ள அவணியாபுரம் மற்றும் அழங்காநல்லூரில் ஜல்லிக்கட்டை நடத்துவதற்கு ஒரு ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதியால் தலைமை வகிக்கப்படும் ஒரு குழுவை அமைத்துள்ளது.**

- இந்தக்குழு, பாலமேட்டில் நடைபெறும் ஜல்லிக்கட்டு நிகழ்வுகளையும் மதிப்பீடு செய்வதற்கு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.
- நீதிபதிகள் எம்.துரைசாமி மற்றும் டி.ரவீந்திரன் ஆகிய இருவர் அடங்கிய அமர்வு, ஜனவரி 15-ல் அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டை நடத்துவதற்கு உள்ள குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற முதன்மை மாவட்ட நீதிபதி சி.மாணிக்கத்தை நியமித்தது.
- மேலும், அந்த அமர்வு, ஜனவரி 15-ல் அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டை நடத்துவதற்கு உள்ள அந்த குழுவின் உறுப்பினர்களாக மதுரை மாவட்ட ஆட்சியர் T.G வினை, மதுரை மாநகர காவல்துறை ஆணையர் எஸ்.டேவிட்சன் தேவாசிர்வாதம் மற்றும் மாநகராட்சி ஆணையர் எஸ்.விசாகன் கமிட்டி ஆகியோர்களை நியமித்துள்ளது.
- ஓய்வுபெற்ற நீதிபதி, மாவட்ட ஆட்சியர், தெற்கு மண்டல IG கே.பி.சண்முகராஜேஷ்வரன் மற்றும் நகரப்பஞ்சாயத்தின் உதவி இயக்குநர் போன்றோரை ஜனவரி 17-ல் அழங்காநல்லூரில் நடைபெறும் ஜல்லிக்கட்டை நடத்துவதற்கு ஏற்பாட்டுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

❖ **தமிழ்நாடு அரசாங்கம், 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான திருவள்ளுவர் தின விருதுகள் மற்றும் சித்திரை தமிழ் புதுவருட விருதுகளின் வெற்றியாளர்களை அறிவித்துள்ளது.**

- தனிப்பட்ட வெற்றியாளர்கள் ரூ.1 லட்சம் ரொக்க பணத்தையும் மற்றும் கூட்டு வெற்றியாளர்கள் ரூ.5 லட்சத்தையும் பெறுவார்கள்.
- முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி என்.இராமசந்திரன், என்.நித்தியநாதபாரதி, பேராசிரியர்கள் கே.அர்ஜுணன், கே.சமரசம்,

எஸ்.சுந்திரராஜன் மற்றும் எழுத்தாளர் லியாகத் அலிகான் ஆகியோர் இவ்விருதுகளின் வெற்றியாளர்கள் ஆவர்.

- முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிச்சாமி ஜனவரி 20-ல் சென்னையில் நடக்கவுள்ள ஒரு விழாவில் இவ்விருதுகளை வழங்குவார்.
- இவ்வித வருடாந்திர விருதுகள், அம்பேத்கர், முன்னாள் முதலமைச்சர்கள் சி.என்.அண்ணாதுரை, கே.காமராஜ், பிரபலமான கவிஞர்கள் பாரதியார் மற்றும் பாரதிதாசன் போன்ற சிறந்த தலைவர்களின் பெயரில் வழங்கப்படுகின்றன.
- அந்நிகழ்வின் போது, மலேசியா, ஸ்ரீலங்கா, பிரான்சு மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து வரும் சிறந்த வெளிநாட்டு இலக்கியவாதிகளுக்கு தமிழ்அறிஞர்கள் விருதும் வழங்கப்படவுள்ளன.

❖ **தமிழ்நாடு அரசாங்கம், மாநிலத்தில் தனியார் விவசாய கல்லூரிகளுக்கான கட்டணம் நிர்ணயிக்கும் குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கே.சந்துருவை நியமித்துள்ளது.**

- இந்த கட்டணம் நிர்ணயிக்கும் குழு ஒரு உறுப்பினர் செயலர் மற்றும் 7 உறுப்பினர்களைப் பெற்றுள்ளது.

❖ **தமிழ்நாடு ஜனவரி 19, 2020-ல் வருடாந்தர இயல்பான போலியோ தடுப்பு மருந்து முகாமை நடத்துகிறது.**

- இந்த முகாம் தேசம் தழுவிய இயக்கத்தின் ஒரு பகுதியாக 5 வருடங்களுக்குட்பட்ட 70.5 லட்சம் குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து கொடுப்பதற்கு நோக்கம் கொண்டுள்ளது.
- இந்த முகாம் காலை 7 மணிமுதல் மாலை 5 மணிவரை ஜனவரி 19-ல் நடத்தப்படும்.
- இந்த வருடத்தை 16வது போலியோ இல்லாத வருடமாக்குவதற்கு தமிழ்நாடு அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.

❖ **திருவேற்காடு காவல்துறை அதன் எல்லைக்குள் சமீபத்தில் விரைவு பதிலளிப்பு (Quick Response – QR) குறியீடுகளின் முதலாவது தொகுப்பு பலகைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.**

- அப்பகுதியில், காவல்துறை 9 இடங்களில் QR குறியிடப்பட்ட பலகைகளை நட்டுள்ளது.
- இந்தப்பலகைகள், அருகிலுள்ள காவல்நிலையத்தை மக்கள் காண்பதற்கு உதவியாக உள்ளது.
- இந்த சேவையைப் பயன்படுத்த கைபேசியைப் பயன்படுத்தி QR குறியீட்டை ஸ்கேன் செய்து கொள்ள வேண்டும்.
- இந்த கைபேசி அருகிலுள்ள காவல்நிலையத்தை காண்பதற்கு அந்த நபருக்கு வழிகாட்டும்.
- காவல்துறையின் கருத்திற்கிணங்க, இவ்வித பலகைகள் பிரதான சாலைகள், தொழுமிடங்கள், பேருந்து நிறுத்தங்கள் மற்றும் முக்கியமான இடங்களில் வைக்கப்படும்.
- இந்தமுறை எவ்வித குழப்பமுமின்றி மக்களை வழிநடத்தும்.
- இந்த QR குறியீடு, வெப்பம் அல்லது மழையால் பாதிக்காது.
- இக்குறியீடு தகவல்களை சேகரிக்கும் ஒரு சதுர பார்கோடாகவும் உள்ளது.

❖ **தமிழக முதலமைச்சர் எடப்பாடி.கே.பழனிச்சாமி ஜனவரி 20-ல் சென்னையில் 2020 ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருதை என்.நித்தியானந்த பாரதிக்கும் மற்றும் 2019 ஆம் ஆண்டுக்கான தந்தைப் பெரியார் விருதை முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி என்.இராமசந்திரனுக்கும் வழங்கினார்.**

- விருதுகள் வென்ற வெற்றியாளர்கள்:
    1. அண்ணல் அம்பேத்கர் விருது – கே. அர்ஜுணன்
    2. பேரறிஞர் அண்ணா விருது - கே.சமரசம்
    3. பெருந்தலைவர் காமராஜர் விருது – எம். எஸ். மதிவாணன்
    4. மகாகவி பாரதியார் விருது – பி.சிவராஜி
    5. பாவேந்தர் பாரதிதாசன் விருது – தேனிசை செல்லப்பா
    6. தமிழ்தென்றல் விருது – எஸ். சுந்தரராஜன்
    7. முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ.விஸ்வநாதம் விருது – மணிமேகலை கண்ணன்
    8. 2019-க்கான தமிழ்தாய் விருது – சிகாகோ தமிழ்ச்சங்கம்
    9. கபிலர் விருது – கவிஞர் வெற்றியழகர்
    10. உ.வே.சா விருது – வி.மகாதேவர்
    11. கம்பர் விருது – சரசுவதி ராதநாதன்
    12. சொல்லின் செல்வர் விருது – கவிதாசன்
    13. உமறுபுலவர் விருது – லியாகத் அலிகான்
    14. ஜி.யு.போப் விருது – மரியஜோசப் சேவியர்
    15. இளங்கோவடிகள் விருது – ஞானசெல்வன் என்ற திருஞானசம்பந்தம்
    16. அம்மா இலக்கிய விருது – உமையாள் முத்து
    17. சிந்தனை சிற்பி சிங்காரவேலர் விருது – அசோக சுப்பிரமணியம் என்ற எஸ்.கே.சுப்பிரமணியம்
    18. மறைமலையடிகளார் விருது – பி.முத்துக்குமாரசுவாமி
    19. அயோத்திதாச - பண்டிதர் விருது – வி. பிரபாகர்
    20. சிறந்த மொழியாக்க விருதுகள் - எஸ்.முகமது யூசுப், கே.ஜே.மஸ்தான் அலி, சிவ முருகேசன், என்.கடிகாசலம், மரபின் மைந்தன், வட்சல்லா, முருகதுரை, மாலன் என்ற வீ.நாராயணன், கிருசங்கினி என்ற பிருந்தாநாகராஜன் மற்றும் ஏ.மதிவாணன்
    21. முதலமைச்சரின் 2018-க்கான தமிழ் கம்யூட்டிங் விருது – டி. நாகராஜன்
- ஒவ்வொரு விருது வெற்றியாளரும் ரூ. 1 லட்சம் ரொக்கம், சான்றிதழ் மற்றும் பொன்னாடையைப் பெற்றுள்ளார்கள்.
- தமிழ்தாய் விருது வென்ற நிறுவனம் ரூ. 5 லட்சம் ரொக்கத்தைப் பெற்றது.

❖ **முதலமைச்சரை தலைவராகக் கொண்ட தமிழக அமைச்சரவை, மாநில அரசின் ஈர்ப்பு முதலீட்டுத் திட்டங்களுக்கு ஜனவரி 20-ல் ரூ.50,000 கோடி மதிப்பிலான மூலதன முன்மொழிவுகளுக்கு ஒப்புதலளித்தது.**

❖ **மத்திய அரசாங்கம், இந்தி மற்றும் ஆங்கிலத்தைத் தவிர தமிழில் சென்னை விமானநிலையத்தில் அறிவிப்புக்களை ஏற்படுத்துவதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளது.**

- மத்திய விமானப் போக்குவரத்து இணையமைச்சர் ஹர்தீப் சிங் பூரி இதை அறிவித்தார்.
- சென்னை விமான நிலையம், மே 1, 2017 லிருந்து இந்திய விமான நிலைய ஆணையத்தால் (AAI) ஒரு "அமைதியான விமானநிலையம் (Silent Airport)" என அறிவிக்கப்பட்டுள்ளது.
- இருப்பினும், அவசரகாலங்களில் மட்டுமே இவ்வித அறிவிப்புகளை ஏற்படுத்த முடியும்.

❖ **சென்னை IIT யிலுள்ள ஆராய்ச்சியாளர்கள், பாலாரின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டுவதை வடிவமைத்து மேற்பார்வையிட்டுள்ளார்கள்.**

❖ **தமிழ்நாடு, "சமக்ரா சிக்ஷா"** (Samagra Shiksha) **பரிமாற்றத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஜம்மு மற்றும் காஷ்மீரிலுள்ள சினாப் பகுதி மாவட்டங்களின் பல்வேறு அரசுப்பள்ளிகளிடமிருந்து 110 மாணவர்கள் அடங்கிய ஒரு குழுவை வரவேற்கவுள்ளது.**

- இந்த "சமக்ரா சிக்ஷா" என்ற திட்டம் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் ஒரு விருப்பமான திட்டமாகும்.
- இத்திட்டம், 12 ஆம் வகுப்பு வரையுள்ள பள்ளி மாணவர்களுக்கு பொருந்துவதாகும்.
- இத்திட்டம், நாட்டிலுள்ள புதிய கல்விமுறைகள் மற்றும் வசதிகளை அறிவதற்கு மாணவர்களை ஊக்குவிக்கிறது.
- இப்படிப்பட்ட சுற்றுலாக்கள் மாணவர்கள் நாட்டைப் பற்றி அதிகமாக அறிவதற்கு உதவிபுரிகின்றன மற்றும் நாட்டின் வரலாறு மற்றும் கலாச்சாரத்தை தெரிந்துகொள்வதற்கும் வாய்ப்பளிக்கின்றன.

❖ **தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் வகுப்பு 5 மற்றும் வகுப்பு 8 மாணவர்கள் அவர்களுக்குரிய வாரியத் தேர்வுகளை எழுதுவார்கள் மற்றும் பொதுத்தேர்வு மையங்களில் தேர்வு எழுதத் தேவையில்லை என்று அறிவித்துள்ளார்.**

❖ **தமிழ்நாடு அரசாங்கம், அதன் வேகம் மீறுவதை கண்டுபிடிக்கும் முறைமை** (Speed Violation Detection System – SVDS) **திட்டத்தை பூந்தமல்லி – கிருஷ்ணகிரி மற்றும் உளுந்தூர்பேட்டை – சேலம் நெடுஞ்சாலைகளில் விரிவுபடுத்துவதற்கு முடிவுசெய்துள்ளது.**

- இது, ஜனவரி 20-ல் மாநிலம் முழுவதும் 31-வது சாலைப்பாதுகாப்பு விழாவை தொடங்கி வைக்கும்போது மாநிலப் போக்குவரத்துத்துறை அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கரால் அறிவிக்கப்பட்டது.
- இந்த வருடம் சாலைப்பாதுகாப்பு வாரம் ஜனவரி 20 முதல் ஜனவரி 27 வரை அனுசரிக்கப்படுகிறது.

❖ **பாலியல் ஊர்ஜிதப்படுத்தப்படாத குழந்தைகளை கண்டறிவதில் பள்ளி தலைவர்கள் உணர்வுபூர்வமாக இருப்பதற்கு மாநிலத்தில் முதல் மாவட்டமாக திருச்சி முன்வரவுள்ளது.**

- ஐந்து வயதிற்கு முன்பே சிறுவர்களின் பாலியல் எளிதாகக் கண்டறியப்படும்.

❖ **தமிழ்நாடு அரசாங்கம், ஊட்டியில் புதிதாக வரவுள்ள அரசாங்க மருத்துவக் கல்லூரிக்கான ஒரு புதிய ஹெலிப்பேடிற்கு** (Helipad) **ஒப்புதலளித்துள்ளது.**

❖ **தமிழ்நாடு அரசாங்கம், தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்திற்கிணங்க தஞ்சாவூர் பெரிய கோவிலின் கும்பாபிஷேகம் நடத்துவதற்கும் மற்றும் அந்நிகழ்வின் அனைத்து ஏற்பாடுகளையும் ஒருங்கிணைப்பதற்கும் 21 உறுப்பினர் கொண்ட ஒரு உயர்மட்ட குழுவை அமைத்துள்ளது.**

- அக்குழுவிற்கு மாநில தலைமைச் செயலர் கே.சண்முகம் தலைவராக இருப்பார்.
- பெரிய கோவிலின் எதிர் வருகின்ற கும்பாபிஷேகம் பிப்ரவரி 5-ல் நடத்துவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

❖ **தென்னக இரயில்வே, 200 இரயில் நிலையங்களில் கழிவறைகளை அமைப்பதற்கும் மற்றும் அவற்றில் குறிப்பாக சென்னை கோட்டத்திலுள்ள இரயில் நிலையங்களில் 33 கழிவறைகளை அமைப்பதற்கும் திட்டமிட்டுள்ளது.**

❖ **ஆஸ்கார் விருது வென்ற இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் நாகாலாந்திலிருந்து வரும் 20 குழந்தைகளுக்கு இசைப்பயிற்றுவிக்கவும் மற்றும் அவர்களை இசைத்தொழிலில் ஈடுபடுத்துவதற்கும் பயிற்சியளிக்கவுள்ளார்.**

- இந்த பிரபலமான இசையமைப்பாளர் K.M.Music Conservatory மற்றும் Sunshine Orchestra மூலமாக அவ்வித வசதியில்லாத குழந்தைகளுக்கு இலவச பயிற்சியளிக்கவுள்ளார்.

❖ **இந்த வருடத்தின் குடியரசுதின அணிவகுப்பில் தமிழ்நாட்டின் அட்டவணை கிராமங்களின் பாதுகாவல் தெய்வமான அய்யனார் சிலை காட்சிப்படுத்தப்படும்.**

- அந்த அணிவகுப்பின்போது, தமிழ்நாட்டின் கிராமப்புற நடனங்கள் மேற்கொள்ளப்படும்.
- அட்டவணையின் முதல் பக்கத்தில் குதிரையில் ஏறியமர்ந்துள்ள அய்யனார் தெய்வமும், பக்கவாட்டுகளில் சிலர் தொடரவும் உள்ளனர்.
- இரண்டாவது பகுதியாக பின்னல் கோலாட்டமும் மற்றும் மூன்றாவது பகுதியாக கொம்பு விளையாடுவதும் இடம்பெற்றிருக்கும்.
- நான்காவது பகுதியாக தப்பாட்டமும் மற்றும் ஐந்தாவது பகுதியாக ஒயிலாட்டமும் இடம்பெறும்.

❖ **தேசிய பசுமை தீர்ப்பாயத்தின்** (National Green Tribunal – NGT) **தெற்கத்திய அமர்வு, தாமிரபரணி ஆற்றில் கழிவுநீர் கலப்பதை மதிப்பீடு செய்ய ஒரு இணைக்குழுவை அமைப்பதற்கு வலியுறுத்தியுள்ளது.**

❖ **நிர்பையா நிதியின்கீழ் பாதுகாப்பு நகர திட்டத்தை** (Safe City Project) **அமுல்படுத்துவதற்கு ரூ.110.13 கோடி மதிப்பிலான கருவிகளை தமிழ்நாடு கொள்முதல் செய்யவுள்ளது.**

❖ **நீர் ஆதாரங்கள் துறை, ரூ.3000 கோடிக்கு வெள்ளத்தடுப்பு முதன்மை திட்டத்திற்காக ஆசிய கட்டுமான முதலீட்டு மேம்பாட்டு வங்கியுடன்** (Asian Infrastructure Investment Development Bank – AIIDB) **ஒத்துழைப்பு வைத்துக் கொள்வதற்கு முடிவு செய்துள்ளது.**

❖ **பிப்ரவரி 5-ல் தஞ்சாவூரில் பிரகதீஸ்வரர் கோவில் கும்பாபிஷேக நாளின்மீது சிவபிரானை புகழும் தமிழ் திருமுறைகள் பாடப்படும்.**

- கடந்த 40 வருடங்களில் மூன்றாவது முறையாக இந்தக் கோவிலுக்கு கும்பாபிஷேகம் செய்யப்படுகிறது.
- 177 வருடங்கள் கழித்து இந்த நிகழ்வு ஏப்ரல் 3, 1980-ல் முதன் முதலாக நடைபெற்றது.
- 1997 ஜூன் 7-ல் நடைபெறுவதாக இருந்த கும்பாபிஷேகம் யாகசாலையில் தீப்பற்றியதைத் தொடர்ந்து ஜூன் 8 அன்று நடத்தப்பட்டது.

❖ **தமிழ்நாடு அரசாங்கம், ஜூன் மற்றும் ஜூலை 2020-ல் 45 நாட்களுக்கான 2021 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் முதல்கட்டம் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது.**

- இரண்டாவது கட்டம் பிப்ரவரி 9, மற்றும் 28, 2021 இடையே நடத்தப்படும்.
- முதல்கட்டத்தில் 34 கேள்விகள் உள்ளடங்கும். அதாவது ஒவ்வொரு வீட்டையும் முழுமையாக கேட்டு விவரங்கள் தயாரிக்கப்படும்.

❖ **முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிச்சாமி, ஜனவரி 23-ல் தரமணியில்** DLF **ன்** 'Down Town IT Park' **கான அடிக்கல் நாட்டினார்.**

- அதற்கு ரூ.5000 கோடி செலவாகும் மற்றும் சென்னையில் அந்த தொழில்நுட்ப பூங்காவின் பரப்பளவு 6.8 மில்லியன் சதுர அடியாக இருக்கும்.

❖ **பெருநகர சென்னை மாநகராட்சி, ஏப்ரல் 2020 தொடக்கத்திலிருந்து வசிப்பிடங்களிலிருந்து கழிவுகளை அகற்றுவதற்காக கூடுதலான பணம் வசூலிப்பதற்கு முடிவுசெய்துள்ளது.**

❖ **மாநில அரசாங்கம், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் டெல்டா மாவட்டங்களில் நிலத்தடி நீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற்கு ஆறுகள் மற்றும் குளங்களில் செயற்கை ரீசார்ஜ் அமைப்புகளுக்கு ஆணையிட்டுள்ளது.**

❖ **தமிழ்நாடு அரசாங்கம், மாநிலத்தில் ரேஷன் அட்டைகளை மாநிலங்களுக்கிடையே எடுத்துச் சென்று அமுல்படுத்துவதற்கான நிர்வாக ஒப்புதலை வழங்கியுள்ளது.**

- மத்திய அரசின் விருப்பத் திட்டமான "ஒரு தேசம், ஒரு ரேஷன் அட்டை" என்ற திட்டம் நாடு முழுவதும் ஜூன் மாதத்தில் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்த திட்டம், ரேஷன் அட்டை வைத்திருப்பவர்கள் மாநிலத்திற்குள் எந்த நியாய விலைக்கடையிலும் உணவுத் தானியங்களை வாங்கிக் கொள்ளலாம்.

- தற்போது தமிழ்நாட்டில் முன்னோட்டமாக தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய இரு மாவட்டங்களில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப் படுகிறது. பின்னர், மாநிலம் முழுவதும் இது அமுல்படுத்தப்படும்.
- தற்போது, கூட்டுறவு சங்கங்கள், தமிழ்நாடு சிவில் விநியோக கழகம் மற்றும் பெண்கள் சுயஉதவிக்குழுக்கள் போன்ற பல்வேறு முகமைகளால் மாநிலத்தில் 35,233 நியாய விலைக்கடைகள் நடத்தப்படுகின்றன.
- ஒட்டுமொத்தமாக மாநிலத்தில் 2,05,03,379 குடும்பங்கள் ஸ்மார்ட் ரேஷன் அட்டைகளைப் பெற்றுள்ளன.

❖ **தமிழ்நாடு மற்றும் கேரளா அரசாங்கங்கள், கேரளாவின் கொடுங்கல்லூர் அருகிலுள்ள முசிரிஸ் மற்றும் தமிழ்நாட்டின் சிவங்கங்கை மாவட்டத்திலுள்ள கீழடி ஆகிய தொல்லியல் ஆய்வு தளங்களில் ஒரு கூட்டு ஆய்வை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளன.**

❖ **முதலமைச்சர் எடப்பாடி.கே.பழனிச்சாமி சென்னை அருகிலுள்ள காட்டுப்பாக்கத்தில் 300 ஏக்கர் மீதான மாநில அரசின் ஒரு விருப்பமான நிதித்தொழில்நுட்ப நகரத்தை மாநில அரசு அமைக்குமென்று அறிவித்துள்ளார்.**

❖ **தமிழ்நாட்டிலிருந்து 8 பிரபலமான மனிதர்கள் ஜனவரி 25-ல் குடியரசுதினத்தின் முதல் நாளில் பத்மா விருதுகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளன.**

- TVS குழு தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் வேனு சீனிவாசன், இலக்கியவாதி மனோஜ்தாஸ் மற்றும் சமூக பணியாளர் கிருஷ்ணம்மாள் ஜகநாதன் ஆகியோர் மூன்றாவது மிக உயர்ந்த சிவிலியன் விருதான பத்மபூஷன் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- நன்கு அறியப்பட்ட கர்நாடக இசைக்கலைஞர் மற்றும் சங்கீத கலாநிதி விருதுபெற்ற பாம்பே சகோதரிகளான சி.சரோஜா மற்றும் சி.லலிதா, கலைஞர் மனோகர் தேவதாஸ், அமர் சேவசங்க நிறுவனர் எஸ்.ராமகிருஷ்ணன் நாதஸ்வர வித்வான்கள் சாபி மகபூ மற்றும் செய்க் மகபூ மற்றும் IIT சென்னையின் வேதியல் பேராசிரியர் பிரதீப் தலப்பில் போன்றோர் பத்மஸ்ரீ விருதுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- கிருஷ்ணம்மாள் ஜெகநாதன் மற்றும் அவரது காலம்சென்ற கணவர் சங்கரலிங்கம் ஜெகநாதன் ஆகிய இருவரும் சமூகநீதியை மேம்படுத்துவதற்காக சிறந்த பங்களிப்புகளை வழங்கியதற்காக பிரபலமானவர்கள் ஆவர்.
- அவர்கள் இருவரும் "உழுபவர்களின் சுதந்திரம் நிலமே" (Land for the Tillers Freedom) என்ற அமைப்பை நாகப்பட்டினம் மாவட்டத்தில் தொடங்கி நிலப்பிரபுக்களிடமிருந்து நிலத்தை தானமாகப் பெற்று நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கினார்கள்.
- ஸ்ரீஅரபிந்தோவின் தத்துவத்தைப் பின்பற்றி பூமிதான இயக்கத்தில் அவர்கள் தங்களை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டனர்.

❖ **ஆளுநர் பன்வாரிலால் புரோகித் மாநிலத்தில் குடியரசு தின விழாக்களை தலைமை வகிப்பதற்கு சென்னையில் மெரினா கடற்கரை முன்பகுதியில் தேசிய கொடியை ஏற்றினார்.**

- முதலமைச்சர் எடப்பாடி.கே.பழனிச்சாமி, துணைமுதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், சட்டசபை சபாநாயகர் பி.தனபால் மற்றும் அமைச்சர்கள் அந்நிகழ்வின்போது உடனிருந்தனர்.

❖ **தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தெற்கத்திய அமர்வு, காமராஜர் துறைமுக நிறுவனம்** (Kamarajar Port Ltd – KPL) **மற்றும் வடசென்னை அனல்மின் நிலையம்** (North Chennai Thermal Power Station - NCTPS) **ஆகிய இரண்டு நிறுவனங்களும் எண்ணூர் சிற்றோடையில் அவைகளால் ஏற்பட்ட மாசை சுத்தப்படுத்த தவறியதற்காக குறைகூறியுள்ளது.**

- அந்த அமர்வு, சுற்றுச்சூழல் ஈடாக ரூ.8.34 கோடி இடைக்காலத்தண்டத்தை விதித்துள்ளது.
- அந்த அமர்வு, இரண்டு மாதத்திற்குள் இந்த தொகையை மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் செலுத்துமாறு ஆணையிட்டுள்ளது.

❖ **சென்னையிலுள்ள ஆஸ்கார் மற்றும் பொன்னி கட்டிடக்கலையின் நிறுவனரான** Ponni M.Concessao, **நொய்டாவில் சமீபத்தில் நடத்தப்பட்ட விழாவில் கட்டிடக்கலையில் சிறந்த பெண் செயல்பாட்டாளர் பிரிவில் 2020 ஆம் ஆண்டுக்கான பன்னாட்டு ஊக்கமூட்டல் பெண்கள் விருதை** (International Inspirational Women Awards) **வென்றுள்ளார்.**

❖ **இந்திய செஞ்சிலுவை சங்கம் ஜனவரி 28, 2020-ல் அதன் நூற்றாண்டு வருடத்தை கொண்டாடவுள்ளது.**

- தமிழ்நாடு ஆளுநர் பன்வாரிலால் புரோகித் சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கத்தில் அவ்விழாவை துவக்கி வைத்து அதற்கு முதன்மை விருந்தினராகவும் இருப்பார்.

❖ **தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் ஜனவரி 28-ல் இந்திய செஞ்சிலுவை சங்கத்தின் நூற்றாண்டு விழாக்களின் பகுதியாக ஒரு புதிய செஞ்சிலுவை அருங்காட்சியகத்தை தொடங்கிவைத்தார்.**

❖ **தமிழ்நாடு அரசாங்கம், 24 வருட இடைவெளிக்குப் பிறகு மாநிலத்தில் கொத்தடிமை தொழிலாளர்கள் மீதான ஒரு கணக்கெடுப்பை நடத்தவுள்ளது.**

- 1996-ல் மாநில அரசாங்கம் இவ்வித கணக்கெடுப்பை நடத்தியது. அதன்படி, மாநிலம் முழுவதும் கிட்டத்தட்ட 25,000 கொத்தடிமை தொழிலாளர்கள் கண்டறியப்பட்டனர்.
- பாராளுமன்றத்தால் 1976-ல் கொத்தடிமை தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம் (Bonded Labour System (Abolition) Act) இயற்றப்பட்ட பின்பு கொத்தடிமை தொழிலாளர்களை வாடகையாகப் பெற்றிருப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

❖ **தமிழ்நாடு அரசாங்கம், ஆகம விதிகளின்படி, தமிழ் மற்றும் சமஸ்கிருதம் ஆகிய இருமொழிகளில் தஞ்சாவூரிலுள்ள பிரகதீஸ்வரர் கோவிலின் (பெரிய கோவில்) கும்பாபிஷேகம் நடத்தப்படும் என்று ஜனவரி 28-ல் சென்னை உயர்நீதிமன்றத்திடம் கூறியுள்ளது.**

- இந்து அறநிலையத்துறைப்படி, யாகசாலைப் பூஜைகள் மற்றும் மகாபிஷேகம் போன்றவை தமிழில் திருமுறை பாராயானத்தை உள்ளடக்கும்.
- யாகசாலை பூஜைகள் பிப்ரவரி 1 முதல் 5 வரை நடத்தப்படும் மற்றும் மகாபிஷேகம் (கும்பாபிஷேகம்) பிப்ரவரி 5, 2020-ல் நடத்தப்படும்.

❖ **தமிழ்நாடுஅரசு மற்றும் மத்தியஅரசு ஆகிய இரண்டும் இணைந்து நிலத்தடிநீர் மட்டத்தை உயர்த்துவதற்கு 2018-2019-ல் வறட்சி தாக்கிய சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், தர்மபுரி, கிருஷ்கிரி, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களிலுள்ள 89 நீர்நிலைய அமைப்புகளின் பழுது மற்றும் புத்தாக்கத்தை மேற்கொண்டன.**

- பிரதான் மந்திரி Sinchayi திட்டத்தின்கீழ், 2018-ல் தொழில்நுணுக்க ஆலோசனைக் குழு மற்றும் ஒப்புதல்குழுவால் ஒப்புதலளிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ்வித நீர்நிலைய அமைப்புகளை சீரமைப்பதற்கு ரூ.49 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- அங்குள்ள குளங்களெல்லாம் வறட்சி பாதித்த பகுதி திட்டத்தின்கீழ் (Drought Prone Area Programme – DPAP) வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- 2018-2019-ல் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள சிவகங்கை மாவட்டத்திலுள்ள 24 குளங்கள், இராமநாதபுரத்திலுள்ள 23 குளங்கள், தர்மபுரி மாவட்டத்திலுள்ள 15 குளங்கள் மற்றும் விருதுநகர் மாவட்டத்திலுள்ள 10 குளங்களை புனராக்கம் செய்வதற்காக அதிகநிதி ஒதுக்கப்பட்டது.

❖ **மத்திய அரசாங்கம், அரியலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் தமிழ்நாட்டுக்கு மேலும் இரண்டு மருத்துவக் கல்லூரிகள் அமைவதற்கு ஒப்புதலளித்துள்ளது.**

- எனவே, ஒரு வருடத்திற்கு மாநிலத்திற்கு புதிதாக ஒதுக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை மொத்தம் 11 (6+3+2) ஆகும்.
- மத்தியஅரசு, ஏற்கனவே இதே ஆண்டு கடந்த அக்டோபரில் மாநிலத்திற்கு 6 மருத்துவக்கல்லூரிகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது மற்றும் நவம்பரில் 3 மருத்துவக்கல்லூரிகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

❖ **முதலமைச்சர் எடப்பாடி.கே.பழனிச்சாமி ஜனவரி 29-ல் தலைமை செயலகத்திலிருந்து காணொளி காட்சி மூலமாக மாநிலத்திலுள்ள பல்வேறு திட்டங்களைத் தொடங்கிவைத்தார்.**

- முதலமைச்சர் மாநில போக்குவரத்து கழகங்களுக்கான 240 புதிய பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்தார் மற்றும் 211.66 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள மேம்பாலங்களையும் தொடங்கிவைத்தார்.

❖ **அரசு தேர்வுகளின் இயக்குனரகம், 10 ஆம் வகுப்பு வாரியத்தேர்வுகளில் கேள்விகள் எந்தவொரு நிலையான முறையையும் பின்பற்றாது மற்றும் அவை பாடநூலின் எப்பகுதியிலிருந்து கேட்கப்படலாம் என அறிவித்துள்ளது.**

❖ **மாநிலஅரசு, புதன்கிழமை மெரினா கடற்கரையில் கடலலையால் இழுத்துச் செல்லப்படும் மக்களை மீட்பதற்கு 50 கமாண்டோக்களின் ஒரு சிறப்பு படையுடன் ஒரு மீட்பு சேவைகள் மையத்தை தொடங்கியுள்ளது.**

## மாநிலங்கள்

❖ **கேரளா சட்டசபை உடனடியாக மத்திய அரசு குடியுரிமை (திருத்தம் சட்டம்) 2019 ஐ திரும்ப பெறவேண்டி டிசம்பர் 31-ல் ஒரு தீர்மானத்தை இயற்றியது.**

- இவ்வித சட்டத்தை எதிர்த்து ஒட்டுமொத்த நாட்டில் முதல்முதலாக தீர்மானம் கொண்டுவந்தது கேரளாகும்.

❖ **கேரளா அரசாங்கம் ஜனவரி 1, 2020 லிருந்து ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிகள் மீது தடையை அறிவித்துள்ளது.**

- மாநில அரசு, இத்தடையை 19 வகையான நெகிழிகள் மீது விதித்துள்ளது.
- இந்த முயற்சி, 2021 வாக்கில் மாநிலத்தில் 9 முக்கிய சுற்றுலா தளங்கள் பசுமைச் சான்றிதழ் பெருவதற்குரிய முயற்சியாகும்.
- இந்த தடை அமுலாக்கத்துடன், ஜனவரி 2020-ல் மாநிலத்தில் முதலாவது நெகிழி இல்லாத சுற்றுலா தளமாக 'குமாரஹோம் (Kumarakom)'என்பதை அறிவிக்க கேரள சுற்றுலாத்துறை இலக்கு நிர்ணயித்துள்ளது.

❖ **மஹாராஷ்டிரா அரசாங்கம், ஜனவரி 3-ல் இணைய பாதுகாப்பு திட்டத்தை** (Cyber Safe Initiative) **தொடங்கியுள்ளது.**

- இந்த திட்டம் அல்லது முயற்சி, இந்திய சமூக சீர்திருத்தவாதி மற்றும் நாட்டின் முதலாவது பெண் ஆசிரியர் சாவித்ரிபாய் பூலே - ன் பிறந்தநாள் விழாவில் தொடங்கப்பட்டது.
- இது, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக செய்யக்கூடிய அட்டூழியங்கள் பற்றியும் மற்றும் பல்வேறு இணையதள குற்ற சட்டங்கள் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதாகும்.
- இந்தவருட ஆரம்பத்தில், ரூ.223.198 கோடி ஒதுக்கீட்டுடன் ஜனவரி 2019-ல் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான கணினிக் குற்றத்தடுப்பு திட்டத்தை மத்திய உள்துறை அமைச்சகம் தொடங்கியிருந்தது.
- ''இந்திய பெண்மையின் தாய்'' (Mother of Indian Feminism) என்று அறியப்பட்ட சாவித்ரிபாய் பூலே நாட்டில் பெண்ணுரிமைகளை மேம்படுத்துவதில் முக்கியப்பங்காற்றினார்.
- அவர் தனது கணவர் ஜோதிராவ் பூலே இணைந்து 1848-ல் பூனேயில் முதலாவது இந்தியாவின் பெண்கள் பள்ளியை நிறுவினார்.
- மேலும், அவர்கள் இருவரும் கலப்புத் திருமணங்களை ஆதரிக்கக்கூடிய ''சத்தியசோதக் சமாஜ்'' (Satyashodhak Samaj) என்ற அமைப்பை நிறுவினர்.
- 2015-ல் மத்திய அரசாங்கம் பூனே பல்கலைக்கழகத்தை சாவித்ரிபாய் பூலே பூனே பல்கலைகழகம் என்று மறுபெயரிட்டது.

❖ **பீகாரின் பகல்பூர் வனம், ஜனவரி 2020-ல் அமைக்கப்படும் நாட்டின் முதலாவது ஆமை மறுவாழ்வு மையத்தை** (Turtle Rehabilitation Centre) **பெறும்.**

- இந்த மையம், பரப்பில் அரை ஏக்கருக்கு அதிகமானதாகும் மற்றும் 500 ஆமைகளுக்கு அதிகமாக உள்ளடக்கும்.
- இந்த மையம், கடத்தல் காரர்களிடமிருந்து பரிமுதல் செய்யப்படும் நோய்வாய்ப்பட்டுள்ள மற்றும் பாதிக்கப்பட்ட ஆமைகளை புனரமைக்கும்.
- இந்த மையம், ஆமைகளை ஆறுகளில் விடுவதற்கு முன்பு அவைகளை பாதுகாக்கும்.
- கங்கையாறு பகல்பூர் வழியாகப் பாய்கிறது. இவ்வித ஆமைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அவைகள் அதிக அளவுக்கு கடத்தப்படுகின்றன.
- ஆமைகளின் மாமிசம் உடம்புக்கு அதிகசக்தி தருவதாகவும் மற்றும் நோயைப் போக்குவதாகவும் கருதப்படுகிறது.
- "போக்குவரத்து இந்தியாவின் (Traffic India)" ஒரு ஆய்வின்படி, இந்தியாவிலிருந்து ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 11,000 ஆமைகள் கடத்தப்படுகின்றன.

❖ **ஆந்திரபிரதேச அரசாங்கம், மாநிலம் முழுவதும் வாடிக்கையாளர்களின் வீட்டுவாசலில் மணல் விநியோகம் செய்யப்போவதாக அறிவித்துள்ளது.**

- இந்த திட்டம், மணல் பற்றாக்குறையையும், சட்டத்திற்கு புறம்பாக மணல் திருடுவதையும் குறைக்கும்.
- இத்திட்டத்தின் கீழ், வாடிக்கையாளர்களுக்கு மணல் விநியோகம் செய்யும்போது அவர்களிடமிருந்து போக்குவரத்து கட்டணத்தை அரசாங்கம் வசூலிக்கும்.
- இத்திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்கு, அடுத்த ஐந்துமாத தேவைகளுக்கான மணலை ஆந்திரபிரதேசம் கனிம மேம்பாட்டு கழகம் 15 லட்சம் டன் மணலை இருப்பு வைக்கும்.
- தற்போது மாநிலத்தில் ஒருநாளுக்கான மணல் தேவை கிட்டத்தட்ட 80,000 டன் ஆகும்.

❖ **பிப்ரவரி 8-ல் டெல்லியில் சட்டசபை தேர்தல்கள் நடத்தப்படுமென்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.**

- தலைமை தேர்தல் ஆணையர் சுனில் அரோரா தேர்தல் ஆணையர் அசோக் லாவசாவுடன் இணைந்து புதுடெல்லியில் இந்த தேர்தல் அட்டவணையை அறிவித்தார்.
- பிப்ரவரி 8-ல் டெல்லி சட்டசபையிலுள்ள 70 இடங்களுக்கு 1.47 கோடி வாக்காளர்கள் வாக்குரிமை செலுத்துவார்கள்.
- வாக்குகளை எண்ணுதல் மற்றும் முடிவுகளை அறிவித்தல் - பிப்ரவரி 11 ஆகும்.
- தற்போதுள்ள டெல்லி சட்டசபை பிப்ரவரி 22-ல் முடிவடைகிறது.
- கடந்த 2015-ல் நடைபெற்ற சட்டசபை தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி 67 இடங்களையும் மற்றும் பாரதிய ஜனதா கட்சி 3 இடங்களையும் பெற்றன.

❖ **மிசோராம் அரசாங்கம், நாட்டிலுள்ள 10 மாவட்டங்கள் மற்றும் மியான்மர், அமெரிக்கா மற்றும் வங்காளதேசம் போன்ற வெளிநாடுகளிலும்** 'Zo Kutpui' **திருவிழாவை நடத்திக் கொண்டிருக்கிறது.**

- இத்திருவிழாவின் முதல் நிகழ்வு திரிபுரா மாநிலத்திலுள்ள Vanghmun நகரில் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்தியாவில் மிசோ மக்கள் மணிப்பூர், திரிபுரா மற்றும் மிசோராமில் உள்ளனர்.
- மிசோ மக்கள் மியான்மர் மற்றும் வங்காளதேசத்தின் கிழக்குப் பகுதி இடையே பரந்து காணப்படும் பழங்குடியின மக்களாவர்.
- சுதந்திரத்திற்கு பின்பு மிசோ மக்கள் அஸ்ஸாம் அரசாங்கத்தால் நிர்வகிக்கப்பட்டனர்.
- பின்னர், மிசோராமின் சுதந்திரத்தை சாதிப்பதற்கு மிசோ தேசிய முன்னனி (Mizo National Front – MNF) 1961-ல் உருவாக்கப்பட்டது.
- பல்வேறு அமைதி பேச்சுவார்த்தைகளுக்கு அடுத்து 1987-ல் ராஜீவ்காந்தி அரசாங்கம் இறுதியாக மிசோராம் அமைதி ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு, அப்பகுதியை அமைதிப்படுத்தியது.

❖ **ஆந்திரபிரதேச முதலமைச்சர்** Y.S.**ஜெகன் மோகன் ரெட்டி ஜனவரி 9-ல் சித்தூரில் ஜகனன்னா அம்மா வோடி திட்டத்தை** (Jagananna Amma Vodi Programme) **தொடங்குகிறார்.**

- இத்திட்டத்தின்கீழ், பள்ளிக்கு குழந்தைகளை அனுப்பும் கிட்டத்தட்ட 43 லட்சம் தாய்மார்கள் அல்லது பாதுகாவலர்களுக்கு தலா ரூ.15000 நிதியுதவி அளிக்கப்படும்.
- இத்திட்டம் அறிவிக்கப்பட்டபின்பு, பள்ளிகளில் சேர்க்கை மற்றும் வருகைப்பதிவு 30 சதவீதம் அதிகரித்தது.

❖ **குஜராத் அரசாங்கம், வெகுவிரைவில் விக்ரம் சாராபாய் குழந்தைகள் புத்தாக்க மையத்தை** (Vikram Sarabhai Children Innovation Center) **அமைக்கவுள்ளது.**

- இது, காந்திநகரில் குழந்தைகள் புத்தாக்க திருவிழாவில் பேசிக்கொண்டிருந்தபோது, முதலமைச்சர் விஜய் ரூபாணியால் அறிவிக்கப்பட்டது.
- குஜராத் பல்கலைக்கழகமும் இவ்வித மையத்தை அமைப்பதற்காக யூனிசெப் (UNICEF) உடன் கடிதப்பரிமாற்றம் மேற்கொண்டது.
- இந்த மையம், குஜராத் அரசாங்கம் மற்றும் UNICEF இடையேயான ஒரு கூட்டு முயற்சியால் அமைக்கப்படும்.
- இந்த மையம, மாநிலத்தில் குழந்தைகளின் புத்தாக்கத்தை மேம்படுத்துவதற்கு உதவியாக இருக்கும்.
- மேலும், இந்திய வானியல் திட்டத்தின் தந்தை என்று அழைக்கப்படுகின்ற ஒரு பிரபலமான இயற்பியலாளர் மற்றும் வானியலறிஞர் விக்ரம் சாராபாய் இந்த மாநிலத்தில் பிறந்து வளர்ந்தவராவார்.

❖ **ஜம்மு மற்றும் காஷ்மீர் அரசாங்கம், மாநிலத்தில் மத்திய அரசாங்கத்தின் தகவலறியும் உரிமைச்சட்டம் 2005 ஐ அமுல்படுத்தத் தொடங்கியுள்ளது.**

- ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை பிரித்து ஜம்மு மற்றும் காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய இரண்டு யூனியன் பிரதேசங்களைப் பிரித்தது அப்போதுள்ள 150-க்கு அதிகமான சட்டங்களை ரத்து செய்ய வழிவகுத்தது.

❖ **ஆந்திரபிரதேச அரசாங்கம், மாநிலத்தில் பூஜ்ஜிய வரவுசெலவு திட்ட இயற்கைப் பண்ணையை** (Zero Budzet Natural Farming - ZBNF) **அமுல்படுத்துவதற்கு ஒரு ஜெர்மனிய நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது.**

- இத்திட்டத்திற்காக மாநில அரசாங்கம் ஜெர்மன் நிறுவனத்திடமிருந்து ரூ.1015 கோடியை கடனாகப் பெறவுள்ளது.
- இந்த ZBNF திட்டத்தின் அமுலாக்கத்துடன் மாநில அரசாங்கம் பிரதான் மந்திரி பாசல் பீமா யோஜனா திட்டத்தையும் (Pradhan Mantri Fasal Bima Yojana) மாநிலத்தில் அமுல்படுத்தும்.
- இந்த ZBNF திட்டம் கர்நாடகாவால் கடைபிடிக்கப்பட்டது.
- ஆந்திரபிரதேச மாநிலம் 2024 வாக்கில் 100 சதவீத இயற்கை பன்னையை அறிமுகப்படுத்தும் நாட்டின் முதல் மாநிலமாக முன்வரும்.

❖ **கேரளா அரசாங்கம், அரசியலமைப்பு விதி 131-ன் கீழ் மத்திய மாநில சச்சரவுகளை உருவாக்கும் அரசியலமைப்பு திருத்த சட்டம் 2019-ன் அரசியலமைப்பு முரண்பாட்டை எதிர்த்து உச்சநீதிமன்றத்திற்கு செல்லவுள்ளது.**

- கேரளா அரசாங்கம், முஸ்லீம், ரோகிங்காஸ், ஹஜாராஸ், தமிழர்கள் மற்றும் இந்திய வம்சாவளி மக்களான ∴பிஜி மற்றும் மலேசியாவிலிருந்து வந்துள்ள சிறுபான்மையினர்கள் போன்றோருக்கு இந்திய குடியுரிமை மறுப்பதில் இந்திய குடியுரிமை திருத்தச்சட்டம் அரசியலமைப்பிற்கு எதிரானதாக உள்ளது என்று கூறியிருந்தது.
- முன்னதாக, டிசம்பர் 31, 2019-ல் குடியுரிமை திருத்தச் சட்டத்தை மத்திய அரசு போக்க வேண்டும் என வேண்டி கேரள சட்டசபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது.
- அரசியலமைப்பு விதி 131, மத்திய-மாநில பிரச்சனை மற்றும் மாநிலங்களுக்கிடையான பிரச்சனைகள் தொடர்பாக உச்சநீதிமன்றம் பெற்றிருக்கும் தனிப்பட்ட அதிகார எல்லையை வழங்குகிறது.
- 1957 ஆம் ஆண்டில் நிலக்கரி தாங்கும் பகுதிகள் (கையகப்படுத்துதல் மற்றும் மேம்பாடு) சட்டத்தை (Coal Bearing Areas (Acquisition and Development) Act, 1957) பாராளுமன்றம் இயற்றியதற்கு எதிராக விதி 31-ன் கீழ் உச்சநீதிமன்றத்தில் மேற்வங்க அரசாங்கம் வழக்கு தொடர்ந்தது. அதில் மத்திய அரசிற்கு இவ்வித மாநில அரசின் நிலங்களை கையகப்படுத்துவதற்கு முழு அதிகாரம் உண்டு என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- சமீபத்தில் இது தொடர்பாக இரண்டு வழக்குகளை நாம் அறியலாம்.
- முதலாவதாக, மத்திய பிரதேசம் எதிர் மத்திய அரசாங்கம் (State of Madhya Pradesh vs Union of India) என்ற வழக்கில் விதி 131-ன் கீழ் ஒரு மத்திய சட்டத்தை மாநிலங்கள் எதிர்க்க முடியாது என்று 2012-ல் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

- இரண்டாவதாக, ஜார்கண்ட் எதிர் பீகார் வழக்கில் (State of Jharkhand vs State of Bihar) இது தொடர்பாக 2015-ல் உச்சநீதிமன்ற தீர்ப்பு இறுதி தீர்ப்புக்காக உச்சநீதிமன்ற அமர்விடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- குடியுரிமை திருத்தச்சட்டம், ஜனவரி 10, 2020 லிருந்து நாடு முழுவதும் நடைமுறைக்கு வந்தது.

❖ **ஹிமாச்சல பிரதேசம், மகர் சங்கராந்தியின்** (Makar Sankranti) **முந்தைய நாளில் 1995கிலோ கிச்சடியை செய்து பழைய பதிவுகளை முறித்து ஒரு கின்னஸ் உலகப் பதிவை ஏற்படுத்தியுள்ளது.**

- இதற்கு முன்பு, இந்த வகையில் உலகப் பதிவாக 918.8கிலோ மட்டுமே கிச்சடியாக செய்யப்பட்டிருந்தது.

❖ **அருணாச்சலப் பிரதேசம், மாநிலத்தில் அனைத்து மல்லிகைகளின் ஒரு சிவப்பு அட்டவணை மதிப்பீட்டை தயாரிப்பதற்கு இயற்கை பாதுகாப்பிற்கான பன்னாட்டு யூனியனுடன்** (International Union for Conservation of Nature – IUCN) **ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது.**

- இந்த ஒப்பந்தக் கையொப்பத்துடன் மாநில அளவில் IUCN ன் சிவப்பு அட்டவணையை துவங்குவதற்கு நாட்டில் முதல் மாநிலமாக அருணாச்சலப் பிரதேசம் முன்வந்துள்ளது.

❖ **குஜராத் அரசாங்கம், சீனாவிடமிருந்து நீரில் கரையக்கூடிய உரங்களை இறக்குமதி செய்வதற்கு முடிவு செய்துள்ளது.**

- குஜராத் அக்ரோ தொழில்கள் கழகம் (Gujarat Agro Industries Corporation – GAIC) மாநிலத்திலுள்ள விவசாயிகளுக்கு நீரில் கரையக்கூடிய உரங்களை விற்பனை செய்வதற்கு சீனாவிடமிருந்து இறக்குமதியை தொடங்கியுள்ளது.
- புதிய உரங்கள் 'AGRO' என்றழைக்கப்படுகிறது. இது, துல்லிய விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது.
- துல்லிய விவசாயம் என்பது ஒரு பன்னை மேலாண்மை கருத்தாகும். அதன்படி, உரங்கள், விதைகள் போன்ற உள்ளீட்டை குறைந்தபட்சம் பயன்படுத்தி அதிகபட்ச வெளியீட்டை பெறுவதாகும்.
- இத்திட்டத்தை குஜராத் மாநிலத்தில் அமுல்படுத்துவதற்கு மத்திய விவசாய அமைச்சகத்தால் GAIC ஒரு முக்கிய முகமையாக நியமிக்கப்பட்டுள்ளது.
- இந்த முயற்சி, 2022 வாக்கில் விவசாயிகளுடைய வருமானத்தை இரட்டிப்பாக்கும் அரசாங்கத்தின் இலக்கை சாதிப்பதற்கு உதவுவதாகும்.
- குஜராத், ஒட்டுமொத்த நாட்டிலுள்ள மாநிலங்களிடையே சொட்டுநீர் பாசனத்தின்கீழ் அதிகபட்ச நிலத்தை பெற்றுள்ள மாநிலமாகும்.

❖ **அஸ்ஸாம் மாநில அரசாங்கம் மற்றும் மத்திய அரசாங்கம் ஆகிய இரண்டும், மாநிலத்தில் அஸ்ஸாம் உள்பகுதி தண்ணீர் போக்குவரத்து திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஜனவரி 16, 2020-ல் உலக வங்கியுடன்** $88 **மில்லியன் கடன் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன.**

- இத்திட்டம், பிரம்மபுத்திரா ஆற்றை உள்ளடக்கி பல ஆறுகளில் உள்ள அஸ்ஸாமின் பயணியர் போக்குவரத்தை மேம்படுத்துவதற்கு நோக்கம் கொண்டுள்ளது.
- ஒட்டுமொத்தமாக, திவாங், பராக், கோபிலி, புத்திமரி, டோயாங் மற்றும் லோகித் ஆறுகள் உள்ளடங்க எல்லா ஆறுகளிலும் அஸ்ஸாமில் கிட்டத்தட்ட 15 நீர்வழிகள் மற்றும் போக்குவரத்துகள் உள்ளன.
- பிரம்மபுத்திரா உள்ளடக்கி அஸ்ஸாமிலுள்ள ஆறுகளில் 361-க்கு அதிகமான படகுவழிப் போக்குவரத்துகள் உள்ளன.

❖ **ராஜஸ்தான் மாநிலம், பஞ்சாயத்து தேர்தல்களின் முதல்கட்ட முடிவுக்கு பின்பு நாட்டின் மிகவும் இளமையான மற்றும் மிகவும் முதிய பஞ்சாயத்து தலைவர்களை தேர்ந்தெடுத்துள்ளது.**

- ஒட்டுமொத்த நாட்டில் மிகவும் இளமையான பஞ்சாயத்து தலைவராக பரக்பூரின் அஸ்ருனிகான் (வயது 21, 18 நாட்கள்), தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவர், பரக்பூரிலுள்ள தீக் பஞ்சாயத் சமிதியின்கீழ் வரும் சுல்ஹேரா கிராம பஞ்சாயத்தின் தலைவராக வென்றுள்ளார்.
- அந்த இடம் OBC பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது.
- அஸ்ருனிகானைத் தவிர, மாநிலத்தில் 21 வயதில் மற்ற இரண்டு பஞ்சாயத்துகளில் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- இதற்கிடையில் நாட்டில் மிகவும் வயதான பஞ்சாயத்து தலைவராக வித்யா தேவி (97 வயது) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- அவர், சிகாரிலுள்ள புராணபாஸ் கிராம பஞ்சாயத்திலிருந்து 207 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றுள்ளார்.

❖ **டெல்லியின் துணைநிலை ஆளுநர் அனில் பைஜால், அடுத்த மூன்று மாதங்களுக்கு தேசிய பாதுகாப்பு சட்டத்தின்கீழ் நபர்களை காவலில் வைக்கும் அதிகாரத்தை டெல்லி காவல் ஆணையருக்கு வழங்கியுள்ளார்.**

- இந்த அனுமதியுடன், ஜனவரி 19, 2020 லிருந்து ஏப்ரல் 18, 2020 வரையான மூன்று மாதங்களுக்கு அவசரநிலை காவலில் வைக்கும் அதிகாரத்தை டெல்லி காவல்துறை பெற்றிருக்கும்.
- இந்திராகாந்தி பிரதமராக இருந்தபோது, செப்டம்பர் 23, 1980-ல் இந்த தேசிய பாதுகாப்புச்சட்டம் (National Security Act-NSA) இயற்றப்பட்டது.
- அது, நாட்டில் அல்லது மாநிலத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கிற்கு அச்சுறுத்தலாக உள்ள எவரையும் தடுப்புக் காவலில் அடைப்பதற்கு அனுமதியளிக்கிறது.
- இச்சட்டத்தின்கீழ், எவ்வித குற்றப்படுத்தாமலும் ஒருவரை 12 மாதங்கள் வரை காவலில் வைக்கலாம்.

❖ **கேரள மாநில அமைச்சரவை மொத்தத்தில் தேசிய மக்கள்தொகை பதிவேட்டை** (NPR) **கேரளா அமுல்படுத்தாது என்று மத்திய உள்துறை அமைச்சகத்தின்கீழ் செயல்படும் மக்கள்தொகை தலைமை பதிவாளருக்கு** (Registrar General of census) **தகவல் தெரிவிக்க முடிவு செய்துள்ளது.**

- இருப்பினும், மக்கள்தொகை கணக்கெடுப்பு 2021 வுடன் கேரளா முழுமையாக ஒத்துழைப்பு தரும்.

❖ **ஆந்திர சட்டசபையின் ஒரு சிறப்புக் கூட்டத்தொடர், ஜனவரி 20-ல் அனைத்துப்பகுதி ஆந்திரபிரதேச பரவலாக்கம் மற்றும் உள்ளடங்கிய மேம்பாடு மசோதா 2020** (A.P Decentralisation and Inclusive Development of All Regions Bill, 2020) **மற்றும் ஆந்திரபிரதேச தலைமையிட பகுதி மேம்பாட்டு ஆணைய** (A.P. Capital Region Development Authority – CRDA) **ஒழிப்பு மசோதா 2020 ஆகிய இரண்டு மசோதாவையும் இயற்றியுள்ளது.**

- இம்மசோதாக்கள், சட்டத்துறை தலைமையிடமாக அமராவதியையும், செயல்துறை தலைமையிடமாக விசாகப்பட்டினத்தையும் மற்றும் நீதித்துறை தலைமையிடமாக கர்நூலையும் மேம்படுத்துவதற்கு வசதிப்படுத்துகின்றன.
- இந்த மசோதா ஏற்கனவே முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டியால் தலைமை வகிக்கும் அமைச்சரவையால் ஒப்புதலளிக்கப்பட்டது.
- இந்த முன்மொழிவுகள் அல்லது மசோதாக்கள் அனைத்தும் ஆந்திரபிரதேசத்தின் "சமநிலைப்படுத்தப்பட்ட உள்ளார்ந்த வளர்ச்சியின்" (Balanced and Inclusive Growth) அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன.

❖ **மஹாராஷ்டிரா அரசாங்கம், ஜனவரி 26-ல் தொடங்கி எல்லாப் பள்ளிகளிலும் மாணவர்களால் அரசியலமைப்பின் முகவுரையை கட்டாயம் படிப்பதற்கு ஆணையிட்டுள்ளது.**

- இதன் முக்கிய நோக்கம் மாணவர்களுக்கு அரசியலமைப்பில் உள்ளடங்கியுள்ள நீதி, சுதந்திரம் மற்றும் சமத்துவம் போன்றவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டும் என்பதாகும்.
- 2016-ல் மேல்நிலைக்கல்வியின் இயக்குநரகம் அனைத்துப் பள்ளிகளுக்கும் ஒரு வரையறையை இதுதொடர்பாக அனுப்பியிருந்தது.

❖ **மத்திய பிரதேச அரசாங்கம், ஒவ்வொரு சனிக்கிழமையும் அனைத்து அரசுப் பள்ளிகளில் கட்டாயமாக அரசியலமைப்பு முகவுரையை வாசிப்பதற்கு ஆணையிட்டுள்ளது.**

❖ **மஹாராஷ்டிரா அமைச்சரவை, 2013 லிருந்து சுற்றுலாத்துறை அமைச்சர் ஆதித்ய தாக்கரேயின் ஒரு விருப்பத் திட்டமான "மும்பை 24 மணிநேரம்" கொள்கைக்கு** ("Mumbai 24 hours" policy) **ஒப்புதலளித்துள்ளது.**

❖ **கேரள மாநில தேர்தல் ஆணையம்,** Medchal Malkajgiri **மாவட்டத்தின் கோம்பல்லி நகராட்சியிலுள்ள 10 தேர்தல் மையங்களை தேர்வு செய்து வாக்காளர்களுக்கான முக அங்கீகார தொழில்நுட்பத்தை** (Facial Recognition Technology) **தொடங்கியுள்ளது.**

❖ **சத்தீஸ்கர் அரசாங்கம், அவசரநிலை காலத்தின்போது, உள்நாட்டு பாதுகாப்பு சட்டத்தின்கீழ்** (Maintanance of Internal Security Act - MISA) **சிறையிலிருந்தோருக்கு மாதாந்தர ஓய்வூதிய திட்டத்தை நிறுத்துவதற்கு முடிவு செய்துள்ளது.**

- முந்தைய பி.ஜே.பி அரசாங்கத்தால் இத்திட்டத்திற்கான நிறுத்தப்பட்ட பணம் தற்போது வேலைவாய்ப்பு திட்டங்களில் பயன்படுத்தப்படுகிறது.
- அவ்வாறு சிறையில் இருந்தவர்களான கிட்டத்தட்ட 300 இவ்விதப் பயனாளிகளை சத்தீஸ்கர் பெற்றுள்ளது.
- மாதத்திற்கு அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.15,000 முதல் ரூ.25,000 வரை வழங்கப்படுகிறது. அத்தொகை அவர்கள் 1975 மற்றும் 1977 ஆம் ஆண்டுகளுக்கிடையே சிறையிலிருந்த காலத்தைப் பொருத்தது.

❖ **இந்தியாவின் முதலாவது** e-waste clinic **மத்தியப் பிரதேசத்தின் போபாலில் திறக்கப்பட்டது.**

❖ **ராஜஸ்தான் சட்டசபை ஜனவரி 25-ல் பிரச்சனைக்குரிய குடியுரிமை திருத்தச்சட்டத்தை திரும்பப் பெறக்கோரும் ஒரு தீர்மானத்தை இயற்றியது.**

- ஏற்கனவே பஞ்சாப் மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்கள் இவ்வித தீர்மானம் இயற்றியதைத் தொடர்ந்து ராஜஸ்தான் மாநிலம் மூன்றாவது மாநிலமாக முன்வந்துள்ளது.

❖ **மகாராஷ்டிரா அரசாங்கம், 71 வது குடியரசுதின விழா நிகழ்வின்போது, ரூ.10-க்கு ஏழை மக்களுக்கு உணவு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட** "Shiv Bhojan" **திட்டத்தை தொடங்கியுள்ளது.**

- இதேபோல, தமிழ்நாட்டில் அம்மா உணவகங்கள் மற்றும் கர்நாடகாவில் இந்திரா கேன்டீன்கள் ஆகியவை ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு முதல்முதலாக இவ்வித உணவகத்தை 2013-ல் தொடங்கியது.

❖ **ஆந்திரபிரதேச சட்டசபை, ஜனவரி 27-ல் 113-0 என்ற வாக்கெடுப்பில் சட்டமேலவையை ஒழிப்பதற்கான தீர்மானத்தை இயற்றியுள்ளது.**

- சட்டமேலவையில் பெரும்பான்மையைப் பெற்றுள்ள எதிர்கட்சியான தெலுங்குதேசம் கட்சி அந்த செயல்முறையில் கலந்துகொள்ளவில்லை.
- 1947-ல் சட்டமேலவையை ஒழித்த முதல் மாநிலமாக அஸ்ஸாம் மாநிலம் வந்துள்ளது. அதன்பின்பு, மேற்குவங்காளம் 1969 லிலும் மற்றும் பஞ்சாப் 1970 லும் சட்டமேலவையை ஒழித்தன.
- தமிழ்நாடு 1986 லிலும் மற்றும் ஜம்மு மற்றும் காஷ்மீர் 2019 லும் சட்டமேலவையை ஒழித்தன.
- தற்போது, பீகார், உத்திரபிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் தெலுங்கானா ஆகிய ஐந்து மாநிலங்கள் ஈரவை சட்டத்துறையைப் பெற்றுள்ளன.
- அரசியலமைப்பு விதி 169 சட்டமேலவையை குறிப்பிடுகிறது.

❖ **மேற்கு வங்காள சட்டசபை ஜனவரி 27-ல் குடியுரிமை திருத்தச்சட்டத்திற்கு எதிராக தீர்மானத்தை இயற்றியுள்ள நான்காவது பி.ஜே.பி ஆட்சியல்லாத மாநிலமாகும்.**

- ஏற்கனவே, கேரளா, பஞ்சாப் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மூன்று மாநிலங்கள் குடியுரிமை திருத்தச்சட்டத்திற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

- குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்த்து டிசம்பர் 31,2019-ல் முதலில் தீர்மானம் இயற்றிய மாநிலம் கேரளாகும்.
- குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்த்து ஜனவரி 17, 2020-ல் இரண்டாவதாக தீர்மானம் இயற்றிய மாநிலம் பஞ்சாப்பாகும்.
- குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்த்து ஜனவரி 25, 2020-ல் மூன்றாவதாக தீர்மானம் இயற்றிய மாநிலம் ராஜஸ்தானாகும்.
- குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்த்து ஜனவரி 27, 2020-ல் நான்காவதாக தீர்மானம் இயற்றிய மாநிலம் மேற்குவங்காளமாகும்.
- ஆனால், மேற்கு வங்காள சட்டசபை முதன்முதலில் செப்டம்பர் 2019-ல் தேசிய குடியுரிமை பதிவேட்டை (NRC) எதிர்த்து தீர்மானம் இயற்றியது.

# திட்டங்கள்

❖ **மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் ஸ்மிருத்தி ராணி சமீபத்தில் பெண்கள் தொழில்முனைவோருக்கான** "Yashaswini" **திட்டத்தையும், கோவாவின் பனாஜி மாவட்டத்திற்கு அருகிலுள்ள தலைக்கோ நகரில்** "Swasthya Sakthi " **திட்டத்தையும் தொடங்கிவைத்துள்ளார்.**

- பெண் தொழில்முனைவோருக்கான "Yashaswini" திட்டம், ஐந்தாண்டுகளுக்கு ரூ.5 லட்சம் வரை வட்டியில்லா கடனாகப்பெற கோவாவிலுள்ள பெண்கள் சுயஉதவிக்குழுக்களுக்கு வழிவகை செய்கிறது.
- "Swasthya Sakthi " திட்டம் பெண்களுக்கு குறிப்பாக கருவுற்ற பெண்களுக்கு உதவி செய்யும் திட்டமாகும்.

# தேசம்

❖ **மத்தியபிரதேசத்திலுள்ள இந்தோர் நகரம், காலாண்டு வெளியிடப்பட்ட** Swachhta Survey **தரங்களின்படி, 10 லட்சத்திற்கு அதிகமான மக்கள்தொகையுள்ள நகரங்கள் இடையே நான்காவது முறையாக இந்தியாவின் மிகத்தூய்மையான நகரமென்று தரப்படுத்தப்பட்டுள்ளது.**

- இதே பிரிவில் முதல் கால்பகுதியில் மத்திய பிரதேசத்திலுள்ள போபால் நகரம் இரண்டாவதாக தரப்படுத்தப்பட்டுள்ளது.
- தரப்படுத்தப்பட்டுள்ள 10 லட்சம் மக்கள்தொகைக்கு அதிகமாகவுள்ள 49 நகரங்களில் கல்கத்தா மற்றும் கௌரா ஆகிய இரண்டு நகரங்கள் கடைசியில் உள்ளன.
- இந்த அறிக்கை புதுடெல்லியில் டிசம்பர் 31-ல் நகர்புற விவகார அமைச்சர் ஹர்தீப் சிங்கால் வெளியிடப்பட்டது.
- இந்த வருடம், மொத்தம் 4372 நகரங்கள் இந்த தரப்படுத்துதலில் பங்கேற்றனர்.
- இத்தரப்படுத்துதல் இந்திய தரக்கவுன்சிலால் (Quality Council of India – QCI) நடத்தப்படுகிறது.
- இத்தரப்படுத்துதல் முதன்முதலாக 2016-ல் 73 நகரங்களில் நடத்தப்பட்டது.

❖ **கடந்த ஐந்தாண்டுகளில் முதன்முறையாக டிசம்பர் 31-ல் பயணியர் கட்டண அதிகரிப்பை இந்திய இரயில்வே அறிவித்துள்ளது. ஆனால், துணைநகர இரயில் கட்டணங்கள் மற்றும் சீசன் கட்டணங்களை மாற்றவில்லை.**

- இந்த கட்டண உயர்வு ஜனவரி 1, 2020 லிருந்து நடைமுறைக்கு வரும்.
- பயணியர்களின் பல்வேறு வகுப்புகளுக்காக ஒரு பைசா மற்றும் நான்கு பைசா இடையே ஒரு கட்டண அதிகரிப்பை ஏற்படுத்தி, அதன் மூலம் வருடத்திற்கு கூடுதலாக ரூ.2,300 கோடி வருவாயைப் பெற இந்திய இரயில்வே எதிர்பார்கிறது.
- இதற்கு முன்பு இரயில் கட்டண அதிகரிப்பு 2014-2015-ல் மேற்கொள்ளப்பட்டது.

❖ **இந்திய வனக்கணக்கெடுப்பால்** (Forest Survey of India - FSI) **வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டு அறிக்கையின்படி, இந்தியாவில் கிட்டத்தட்ட 21.40 சதவீத வனப்பரப்பு தீயினால் அழியக்கூடிய அபாயம் உள்ளது.**

- இந்த அறிக்கையின்படி, வடகிழக்கு பகுதி மற்றும் மத்திய இந்தியப்பகுதியிலுள்ள வனங்கள் அதிகம் பாதிக்கப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கை, 2004 முதல் 2017 வரை நாடுமுழுவதும் நடைபெற்ற காட்டுத்தீயை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.
- எனவே, இந்த 13 வருடகாலத்தில் 2,77,758 காட்டுத்தீ இடங்கள் (Forest Fire Points – FFP) கண்டறியப்பட்டுள்ளன.
- இந்த அறிக்கையின்படி, 'மிதமிஞ்சிய (extremely)' காட்டுத்தீ ஏற்படும் இடங்கள் மொத்த வனப்பரப்பில் 3.89%, மிக அதிகமாக (Very Highly) காட்டுத்தீ ஏற்படும் இடங்களின் பரப்பு 6.01% மற்றும் அதிகமாக (Highly) காட்டுத்தீ ஏற்படும் இடங்களின் பரப்பு 11.50% ஆகும்.
- இந்த மூன்று பிரிவுகளிலும் இந்தியாவில் மொத்தமாக வனப்பரப்பு 21.40 சதவீதம் உள்ளது.
- நவம்பர் 2018 லிருந்து ஜூன் 2018 வரை கிடைத்த தகவல்களின் அடிப்படையில் மொத்தம் 29,547 எச்சரிக்கைகள் வழங்கப்பட்டன.
- சிறிய மாநிலமான மிசோராம் காட்டுத்தீ எச்சரிக்கையில் (2795) அதிக எண்ணிக்கையைப் பெற்று முதல் பதிவாக உள்ளது.
- வடகிழக்கிலுள்ள ஏழு மாநிலங்கள் 10,210 எச்சரிக்கைகளைப் (நாட்டிலுள்ள எச்சரிக்கைகளின் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு) பெற்றுள்ளன.
- நாட்டில் ஒட்டுமொத்தமாக பசுமை அதிகரித்திருக்கின்ற போது, வடகிழக்கத்திய மாநிலங்களில் குறிப்பாக மிசோராம், அருணாச்சலபிரதேசம் மற்றும் நாகலாந்தில் பசுமை குறைந்துள்ளது.
- நவம்பர் 2018 மற்றும் ஜூன் 2019 இடையே மத்திய இந்திய மாநிலங்களான மத்தியபிரதேசம் 2723 எச்சரிக்கைகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், மஹாராஷ்டிரா 2516 எச்சரிக்கைகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும், ஒடிசா 2213 எச்சரிக்கைகளைப் பெற்று நான்காம் இடத்தையும் பெற்றுள்ளன. சத்திஷ்கர் மாநிலம் 1008 காட்டுத்தீ எச்சரிக்கைகளைப் பெற்றுள்ளது.

❖ **இரயில்வே பாதுகாப்பு படையை** (RPF) **இந்திய இரயில்வே பாதுகாப்புப் படைப் பணியாக** (Indian Railway Protection Force Service) **ஆக இந்திய இரயில்வே நிர்வாகம் மறுபெயரிட்டுள்ளது.**

- இப்பணி, இரயில்வே நிர்வாகத்தால் குரூப் A அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளது.
- ஜூலை 10-ல் மத்திய அமைச்சரவை RPF க்கு குரூப் A அந்தஸ்து வழங்கியது.

❖ **பிரதமர் நரேந்திரமோடி, ஜனவரி 2-ல் கர்நாடகாவின் தும்கூரில் நடைபெறவுள்ள ஒரு நிகழ்வில் மின்னணு பரிமாற்றம் மூலமாக 6 கோடி விவசாயிகளுக்கு ரூ.12,000 கோடியை வழங்கிடவுள்ளார்.**

- அந்த நிகழ்வின் போது, தமிழ்நாட்டின் சில குறிப்பிட்ட சில மீனவர்களுக்கு ஆழ்கடல் மீன்பிடிப்பு கப்பல்கள் மற்றும் மீன்பிடிப்பு கப்பல் டிரான்ஸ்பாண்டர்களின் சாவிகளை பிரதமர் வழங்குவார் மற்றும் கர்நாடகாவின் சில குறிப்பிட்ட விவசாயிகளுக்கு கிசான் கடன் அட்டைகளையும் (Kisan Credit Cards – KCC) அவர் வழங்குவார்.
- இது, PM – kisan (Pradhan Mantri Kisan Samman Nidhi) திட்டத்தின் ஒரு பகுதியாக நடப்பு நிதியாண்டின் மூன்றாவது தவணையாக இருக்கும்.
- இத்திட்டம், நேரடியே பயணாளிகளின் வங்கி கணக்குகளில் நிலம் பெற்றிருக்கும் விவசாயிகள் ஒவ்வொருவரும் ரூ.2000 ஐ பெறுவதற்கு உதவியாக இருக்கும்.
- ஏற்கனவே, பிப்ரவரி 24, 2019-ல் உத்திரபிரதேசத்திலுள்ள கோரக்பூரில் இத்திட்டம் தொடங்கப்பட்ட வேளையில் ரூ.2000 வீதம் 1.06 கோடி விவசாயிகளுக்கு அவர்களது வங்கி கணக்கிற்கு மாற்றப்பட்டது.
- மத்திய விவசாய அமைச்சகம் டிசம்பர் 31, 2019-ல் முதல் தவணையாக (ரூ.2000 ஒவ்வொருவருக்கும்) நடப்பு நிதியாண்டில் 7.46 கோடி விவசாயிகளுக்கும் மற்றும் இரண்டாவது தவணையாக 5.96 கோடி விவசாயிகளுக்கும் வழங்கியது.
- இத்திட்டத்தின்கீழ், ஒரு நிதியாண்டில் ரூ.2000 வீதம் 3 சமத் தவணைகளில் வருடத்திற்கு ரூ.6000 பெறுவதற்கு கிட்டத்தட்ட 14.5 கோடி நிலம் பெற்றிருக்கும் விவசாயிகள் தகுதியுடையவர்கள் ஆவர்.
- 2019 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்கு ரூ.75,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டம், சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு மட்டுமே (அதிகபட்சம் 5 ஏக்கர் நிலம்) இருந்தது. ஆனால், மோடியின் 2.0 திட்டத்தின்கீழ் விவசாயிகள் அனைவரும் இத்திட்டத்திற்கு தகுதியுடையவர்கள் ஆவர். அதாவது, ஒரு விவசாயி ஐந்து ஏக்கருக்குமேல் நிலம் பெற்றிருந்தாலும், அவரும் தற்போது இத்திட்டத்தின்கீழ் பயன்பெறலாம்.
- இத்திட்டம், நிலமற்றோர் மற்றும் குத்தகை விவசாயிகளுக்கு பொருந்தாது.
- இந்த திட்டத்தில், முதல் 10 செயல்பாட்டாளர்களாக பஞ்சாப், ஹரியானா, ஆந்திரபிரதேசம், உத்திரபிரதேசம், குஜராத், தெலுங்கானா, ஹிமாச்சல பிரதேசம், சத்திஷ்கர், கேரளா மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்கள் உள்ளன.

- மேற்குவங்க மாநிலம் கீழ்மட்டத்திலுள்ளது. ஏனென்றால், இத்திட்டத்தின் பயன்பாடுகளை கிட்டத்தட்ட 72 லட்சம் விவசாயிகள் பயன்பெறாத நிலையில் இம்மாநிலம் முடிவுசெய்துள்ளது.

❖ **இந்திய ரிசர்வ் வங்கி ஜனவரி 1-ல்** MANI (Mobile Aided Note Identifier) **என்ற ஒரு கைபேசி பயன்பாட்டை தொடங்கியுள்ளது.**

- அது, ரூபாய் நோட்டுகளின் அளவை அறிவதில் கண் பார்வையற்றவர்களுக்கு உதவியாக இருக்கும்.
- இந்த செயலி, இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்தா தாஸால் தொடங்கப்பட்டது.
- ஆனால், இந்த கைபேசி பயன்பாடு ரூபாய் நோட்டுகளை நியாயமானது அல்லது தவறானது என்று அறிவிக்காது.
- நவம்பர் 2016-ல் இந்திய ரிசர்வ் வங்கி மகாத்மா காந்தி வரிசையில் புதிய ரூபாய் நோட்டுகளை வெளியிட்டது.
- புதிய ரூபாய் நோட்டுகளின் அளவுகள் - ரூ.2000, ரூ.500, ரூ.200, ரூ.100, ரூ.50, ரூ.20 மற்றும் ரூ.10.
- சிங்கத்தலை வரிசைகளை மாற்றி மகாத்மா காந்தி ரூபாய் நோட்டுகள் முதல் முதலாக 1996-ல் அறிமுகப்படுத்தப்பட்டது.

❖ **காப்பீடு முறைப்படுத்தும் மற்றும் மேம்பாட்டு ஆணையகம்** (Insurance Regulatory and Development Authority), **ஏப்ரல் 1, 2020 லிருந்து ஆரோக்கிய சஞ்சீவினி பாலிசி என்ற ஒரு தரமான சுகாதாரக் காப்பீட்டை அளிப்பதற்கு அனைத்து பொது மற்றும் சுகாதார காப்பீட்டு நிறுவனங்களுக்கான கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது.**

- இந்த பாலிசியை தனிப்பட்ட நபரோ அல்லது குடும்பத்திலுள்ள அனைவரும் கூட்டாகவோ எடுத்துக்கொள்ளலாம்.
- இந்த பாலிசிக்கான குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச தொகை முறையே ரூ.1 லட்சம் மற்றும் ரூ.5 லட்சம் ஆகும்.
- இந்த பாலியை 18 வயது முதல் 65 வயது வரை உள்ளவர்கள் எடுத்துக் கொள்ளலாம்.

❖ **பிரதமர் நரேந்திரமோடி, டிசம்பர் 2, 2019-ல் பெங்களூரில் 5** DRDO **இளம் விஞ்ஞானிகள் ஆய்வுக்கூடங்களை** (DRDO Young Scientist Laboratories – DYSLs) **தொடங்கிவைத்தார்.**

- மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களின் இளம் ஆராய்ச்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக இவ்வித ஆய்வுக்கூடங்களை DRDO அமைத்துள்ளது.
- 35 வயதுக்குட்பட்ட இளம் விஞ்ஞானிகள் இவ்வித ஆய்வுக்கூடங்களில் ஆய்வை மேற்கொள்கின்றனர்.
- இந்த ஆய்வுக்கூடங்கள் பெங்களூரு, மும்பை, சென்னை, கொல்கத்தா மற்றும் ஹைதராபாத் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.
- அந்த ஐந்து இடங்களிலும் பின்வரும் ஐந்து முக்கிய களங்கள் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன.
    1. DRDO பெங்களூரு - செயற்கை நுண்ணறிவு
    2. IIT மும்பை - Quantum தொழில்நுட்பம்

3. IIT சென்னை - Cognitive தொழில்நுட்பம்
4. ஐடாவ்பூர் பல்கலைக்கழகம் கொல்கத்தா - Asymmetic தொழில்நுட்பங்கள்
5. IIT ஹைதராபாத் - Smart Materials

- ஆகஸ்ட் 2014-ல் பிரதமர் நரேந்திரமோடி DRDO விருதளிப்பு விழாவில் பேசிய போது இவ்விதமான ஆய்வுக்கூடங்களை அமைக்கும் கருத்தை முதன்முதலாக கூறினார்.

❖ **பிரதமர் நரேந்திரமோடி டிசம்பர் 3-ல் இந்திய அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் வசதிகள் வரைபட** (Indian Science Technology and Engineering facilities map – I-STEM) **இணையதள முகப்பை தொடங்குகிறார்.**

- இந்த இணையதள முகப்பு, இந்தியாவில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகளுக்காக ஆய்வாளர்களுக்கு ஒரு சிறந்த வழியை ஏற்படுத்தும்.
- இது, அறிவியல் சமூகத்திற்கான "ஒரு தேசம் ஒரு ஆய்வு இணையதள முகப்பு (One Nation One Research Web Portal)" என்ற அடிப்படையில் அமையும்.
- இந்த இணையதள முகப்பு, இந்தியா முழுவதும் கிட்டத்தட்ட 427 நிறுவனங்களில் அமைக்கப்பட்டுள்ள 17,000-க்கு அதிகமான கருவிகளை அட்டவணைப்படுத்தியுள்ளது.
- இது, ஆராய்ச்சியாளர்கள் உரிய மற்றும் இசைவான ஆராய்ச்சி வசதிகளைப் பெறுவதற்கு உதவிபுரியும்.

❖ **புத்தாண்டு தினமான ஜனவரி 1, 2020-ல் உலகிலேயே அதிகமான குழந்தைகள்** (67,385) **இந்தியாவில் பிறந்துள்ளன.**

- இதைத்தொடர்ந்து சீனா (46,299), நைஜீரியா (26,039), பாகிஸ்தான் (16,787), இந்தோனேஷியா (13,020), அமெரிக்கா (10,452), காங்கோ குடியரசு (10,247) மற்றும் எத்தியோப்பியா (8,493) போன்ற நாடுகள் உள்ளன.
- UNICEF –ன் கருத்துப்படி, ஒட்டுமொத்தமாக ஜனவரி 1, 2020-ல் உலகம் முழுவதும் 3,92,078 குழந்தைகள் பிறந்துள்ளன.

❖ **இந்திய இரயில்வே அதன் உதவி எண்களை 139 என்ற ஒற்றை எண்ணாக ஒருங்கிணைத்துள்ளது.**

- அதாவது, எண் 182 ஐ தவிர மற்ற எல்லா உதவிஎண்களும் 139-ல் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
- உதவிஎண் 182 என்பது இரயில்வே பாதுகாப்பிற்கான பயன்பாடாக இருக்கும்.

❖ **பிரதமர் நரேந்திரமோடி, ஜனவரி 3, 2020-ல் பெங்களூரிலுள்ள விவசாய அறிவியல் பல்கலைக்கழகத்தில் 107வது இந்திய அறிவியல் காங்கிரஸை** (ISC-2020) **தொடங்கிவைத்து தொடங்கவுரையாற்றினார்.**

- பிரதமர் இளம் விஞ்ஞானிகளுக்கான புதிய இலட்சியமாக "கண்டுபிடி, காப்புரிமைகொள், உற்பத்திசெய் மற்றும் செழுமையாக்கு" (Innovate, Patent, Produce and Prosper) என்ற கருத்தை தெளிவுப்படுத்தினார்.
- இந்த ISC-2020 மாநாட்டின் மையக்கருத்தான "அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்:ஊரக மேம்பாடு" (Science and Technology:Rural Development) என்பதைக் குறிப்பிட்டு, இந்த 10 ஆண்டில் $5 ட்டிரில்லியன் பொருளாதார தேசிய இலக்கை சாதிப்பதில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ஒரு பிரதான பங்கெடுக்கும் என்பதை பிரதமர் வலியுறுத்தினார்.
- பிரதமர், முக்கிய பிரச்சனைகளான நிலத்தடிநீர் கீழேசெல்லுதல், குண்டுவெடிப்பு சம்பவங்கள், தொற்றுநோய் தடுப்பு, காசநோயை ஒழித்தல் மற்றும் சுற்றுச்சூழல் நட்பு போக்குவரத்து போன்றவற்றிற்கு தொழில்நுட்ப தீர்வுகள் காணவேண்டுமென்று விஞ்ஞானிகளை வலியுறுத்தினார்.
- இந்த நிகழ்வின் முக்கிய அம்சம் விவசாயிகள் காங்கிரஸ் ஆகும். அதில் 110 புத்தாக்க விவசாயிகள் கலந்துகொண்டு காலநிலை மாற்றம் மற்றும் புதின நடைமுறைகள் பற்றி விவாதிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ஜனவரி 3 மற்றும் 7, 2020 இடையே நடத்தப்படவுள்ள அந்த விவசாயிகள் காங்கிரஸ் நிகழ்வில் கிட்டத்தட்ட 15,000 பங்கேற்பவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.
- இரண்டு நோபல் பரிசு வெற்றியாளர்கள் Stefan Hell மற்றும் Ada Yonath ஆகிய இருவரும் அந்த விவசாயிகள் காங்கிரஸில் பங்கேற்று விரிவுரைகள் வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- அந்த காங்கிரஸ், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் நடத்தப்படுகிறது.

❖ **அதானி துறைமுகங்கள் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலம், கிட்டத்தட்ட ரூ.10,105 கோடி மதிப்பீட்டில் கிருஷ்ணா பட்டணம் துறைமுக அமைப்பு நிறுவனத்தில்** (Krishnapatnam Port Company Ltd – KPCL) **ஒரு பெரும்பான்மையான 75 சதவீதப் பங்கைப் பெறவுள்ளது.**

- மீதமுள்ள பங்கை ஹைதராபாத்திலுள்ள பிரதான பொறியியல் அமைப்பான CVR குழு பெறும்.
- கிருஷ்ணபட்டிணம் துறைமுகம் ஆந்திரபிரதேசத்தின் நெல்லூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. அது, இந்தியாவில் இரண்டாவது மிகப்பெரிய தனியார் துறை பலதரப்பட்ட கப்பல்சரக்கு துறைமுகமாகும்.
- அது, 2019 ஆம் நிதியாண்டில் 54 மில்லியன் மெட்ரிக் டன்னை கையாண்டுள்ளது.
- அதன் வருவாய் பதிவு 2018 ஆம் நிதியாண்டில் ரூ.1969 கோடியாகவும் மற்றும் 2019 ஆம் நிதியாண்டில் ரூ.2394 கோடியாகவும் இருந்தன.
- நாட்டின் மிகப்பெரிய தனியார் துறைமுகம் குஜராத்தின் கட்ச் மாவட்டத்திலுள்ள முன்ராவில் அதானி குழுவால் நடத்தப்படுகிறது.

❖ **மத்திய அரசாங்கம்,** FAME India **திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின்கீழ் நாட்டிலுள்ள 24 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலுள்ள 62 நகரங்களில் 2636 மின்ஏற்றி நிலையங்களை அமைப்பதற்கு ஒப்புதலளித்துள்ளது.**

- FAME என்பது Faster Adoption and Manufacturin of (Hybrid) and Electric Vehicles.
- FAME ன் முதல் கட்டம் ரூ.895 கோடி ஒதுக்கீட்டுடன் ஏப்ரல் 1, 2015-ல் தொடங்கப்பட்டது.
- அதன் இரண்டாம் கட்டம் ரூ.10,000 கோடி ஒதுக்கீட்டில் ஏப்ரல் 1, 2019-ல் தொடங்கப்பட்டது.

❖ **வெளிவிவகாரங்களுக்கான மத்திய அமைச்சகம் "புதிய மற்றும் மேம்பட்டுவரும் யுக்தி தொழில்நுணுக்கங்கள்** (New and Emerging Strategic Technologies) NEXT **என்று அழைக்கப்படுகின்ற ஒரு புதியப் பிரிவை அமைப்பதற்கு முடிவு செய்துள்ளது.**

❖ **மத்திய தொழிலாளர்நல அமைச்சகம், பணியாளர்கள் மற்றும் முதலாளிகளின் குறைகளை வேகமாக போக்குவதற்காக** "Santusht" **இணையதளத்தை தொடங்குவதற்கு முடிவு செய்துள்ளது.**

- இந்த இணையதளம் மூலமாக, பணியாளர்கள் தங்களது புகார்களை சமர்பிக்கலாம்.
- இந்த இணையதளம், பணியாளர் சேமநல நிதி அமைப்பு (Employee's Provident Fund Organisation – EPFO) மற்றும் பணியாளர் அரசு காப்பீட்டு கழகம் (Employees State Insurance Corporation) போன்றவற்றால் வழங்கப்படும் அனைத்து சேவைகளையும் மேலாண்மை செய்யும்.

❖ **இந்திய தேர்தல் ஆணையம், அரசியல் கட்சிகளின் பதிவிற்கான ஒரு புதிய இணையதள கண்காணிப்பு முறையைத்** (Online Tracking System) **தொடங்கியுள்ளது.**

- அரசியல் கட்சிகள் பதிவுக் கண்காணிப்பு மேலாண்மை முறைமை (Political Parties Resgistration Tracking Management System – PPRTMS) என்று அழைக்கப்படுகின்ற இந்த புதிய முறை ஜனவரி 1, 2020 லிருந்து அரசியல் கட்சிகளின் பதிவிற்கு பயன்படுத்தப்படும்.
- அது, அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணையத்திடம் பதிவிற்காக சமர்பித்த விண்ணப்பங்களை கண்காணிப்பதற்கு அனுமதியளிக்கிறது.
- விண்ணப்பத்தின் நிலையை https://pprtms.eci.gov.in என்ற தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தின் மூலமாக கண்காணிக்கலாம்.
- அரசியல் கட்சிகளின் பதிவு, 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் பிரிவு 29-A ன் கீழ் நிர்வகிக்கப்படுகிறது.
- இந்த சட்டத்தின்கீழ், ஒரு கட்சி தேசிய அரசியல் கட்சியாக பதிவு செய்யப்படுவதற்கு பின்வரும் தன்மைகளைப் பெற்றிருக்க வேண்டும்.
    1. அந்த கட்சி பாராளுமன்றத்திற்கு அல்லது சட்டச்சபைக்கு நடந்த தேர்தலில் நான்கு அல்லது அதற்கு மேலான மாநிலங்களில் குறைந்தது 6 சதவீத வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும்.
    2. மேலும், அந்த கட்சி மக்களவையில் குறைந்தது 4 இடங்கள் பெறும் அளவிற்கு வெற்றிபெற வேண்டும்.

- இந்த சட்டத்தின்கீழ், ஒரு கட்சி மாநில அரசியல் கட்சியாக பதிவு செய்யப்படுவதற்கு பின்வரும் தன்மைகளைப் பெற்றிருக்க வேண்டும்.
    1. அந்த கட்சி மாநில சட்டசபை தேர்தலில் பதிவான வாக்குகள் குறைந்தது 6 சதவீத வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும்.
    2. அந்த கட்சி மாநில சட்டசபையில் குறைந்தது இரண்டு இடங்களைப் பெற்று வெற்றிபெற வேண்டும்.

❖ **வருமான வரித்துறை ஆதாருடன் பான் (PAN) எண்ணை இணைப்பதற்கு காலக்கெடுவை மார்ச் 2020 வரை நீட்டித்துள்ளது.**

- முன்னதாக, செப்டம்பர் 2019-ல் ஒரு ஆணை மூலமாக இதற்கான காலக்கெடு டிசம்பர் 31 என்று நேரடி வரிகளின் மத்திய வாரியத்தால் (Central Board of Direct Taxes – CBDT) அறிவிக்கப்பட்டிருந்தது.
- தற்போது, இந்த CBDT எட்டாவது முறையாக அந்த காலக்கெடுவை நீட்டித்துள்ளது.
- முன்னதாக இந்த காலக்கெடு செப்டம்பர் 30, 2019 ஆக இருந்தது.
- உச்சநீதிமன்றம் செப்டம்பர் 26, 2018-ல் அதன் தீர்ப்பில் மத்திய அரசின் இத்திட்டத்தை அரசியலமைப்பு ஏற்புடையவை என்று கூறியிருந்தது.
- ஆதார் (Aadhaar) என்பது 12 இலக்க வினோத அடையாள எண்ணாகும். இது, இந்திய வினோத அடையாள ஆணையத்தால் (Unique Identification Authority of India) ஒவ்வொரு குடிமகனுக்கும் வழங்கப்படுகிறது.
- பான் (PAN) என்பது வருமான வரித்துறையால் வரிக்கட்டும் நபர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 10 இலக்க நிரந்தர கணக்கு எண்ணாகும்.

❖ **ஜனவரி 2, 2020-ல் குருகோவிந்த் சிங்கின் பிறந்தநாள் விழாவை இந்திய அரசாங்கம் கொண்டாடியது.**

- குருகோவிந்த் சிங் ஜனவரி 5, 1666-ல் பிறந்தார் மற்றும் அவர் 10வது மற்றும் கடைசி சீக்கிய குருவாவார்.
- அவர் 1699-ல் கல்சா (Khalsa) என்றழைக்கப்பட்ட சீக்கிய போர்வீரர் சமூகத்தை (Sikh Warrior Community) நிறுவினார்.
- அவர், "Panj Kakar" என்றழைக்கப்படும் சீக்கிய மதத்திலுள்ள ஐந்து கொள்கைகளை (five KS) அறிமுகப்படுத்தினார்.
- சீக்கிய மதத்தில் புனித நூலான 'Dasam Granth' என்பது குருகோபிந்த் சிங்கிற்கு அர்பணிக்கப்பட்டுள்ளது.
- இஸ்லாம் மதத்தை பின்பற்றாததற்காக தலை துண்டிக்கப்பட்ட ஒன்பதாவது சீக்கிய குருவான பகதூர் என்பவரின் ஒரே மகனாக குருகோவிந்த் சிங் இருந்தார்.
- குருநானக் 1469-ல் சீக்கிய மதத்தை நிறுவினார் மற்றும் அவரே முதலாவது சீக்கிய குருவாவார்.
- 1708-ல் இந்த குரு பதவி சீக்கிய இலக்கிய குரு குருகிராந்த் சாகிப்பிற்கு கொடுக்கப்பட்டது.

❖ **இந்தியா 2026-ல் உலகின் நான்காவது மிகப்பெரிய பொருளாதாரமாக முன்வந்து ஜெர்மனியை முந்தும்.**

- இது, இங்கிலாந்தைச் சேர்ந்த பொருளாதாரம் மற்றும் வர்த்தக ஆராய்ச்சிக்கான மையத்தால் (Centre for Economics and Business Research) வெளியிடப்பட்ட அறிக்கையில் இடம்பெற்றுள்ளது.
- இந்த அறிக்கை "உலக பொருளாதார கழக அட்டவணை" (World Economic League Table" என்று (IMF –ன் தகவல் அடிப்படையில்) தலைப்பிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 2034-ல் உலகில் மூன்றாவது மிகப்பெரிய பொருளாதாரமாக முன்வந்து ஜப்பானை இந்தியா முந்தும்.
- இன்று இந்தியா உலகில் ஐந்தாவது மிகப்பெரிய பொருளாதார நாடாக உள்ளது.
- முதலாவதாக அமெரிக்கா ($ 20.49 ட்ரில்லியன்), இரண்டாவதாக சீனா ($ 13.41 ட்ரில்லியன்), மூன்றாவதாக ஜப்பான் ($ 4.97 ட்ரில்லியன்) மற்றும் நான்காவதாக ஜெர்மனி ($ 4 ட்ரில்லியன்) உள்ளன.
- 2019-ல் பிரான்சு மற்றும் இங்கிலாந்து ஆகிய இருநாடுகளையும் வெற்றிகரமாக முந்தி இந்தி ஐந்தாம் இடம் வெற்றுள்ளது.
- அந்த அறிக்கையின்படி, 2026 வாக்கில் இந்தியா அதன் $ 5 ட்ரில்லியன் இலக்கைச் சாதிக்கும்.

❖ **இந்திய அரசாங்கம், கைபேசிகளை தடுப்பதற்கும் மற்றும் தேடுவதற்கும் சமீபத்தில் மத்திய உபகரண அடையாளப்படுத்தும் பதிவேடு** (Central Equipment Identify Register–CEIR) **இணையதளத்தை தொடங்கியுள்ளது.**

- இந்த இணையதளம் தொலைதொடர்புத் துறையால் இயக்கப்படும்.
- இந்த இணையதளம், பன்னாட்டு கைபேசி உபகரண அடையாளத்தின் (International Mobile Equipment Identity – IMEI) ஒரு முழுமையான கருப்பு பட்டியல் எண்கள் மற்றும் தகவல்களைப் பெற்றிருக்கும்.
- IMEI ஐ பின்பற்றிய முதல் நாடு ஆஸ்திரேலியா ஆகும்.

❖ **பாலினத் தடைகளைப் போக்கி எல்லோருக்கும் ஞாயமாக காசநோய் கவனம் மற்றும் பணிகள் கிடைப்பதற்கு ஒரு தேசிய கட்டமைப்பை** (National Framework) **இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது.**

- இந்த கட்டமைப்பு 2025 வாக்கில் நாட்டில் காசநோயை முழுவதுமாக ஒழிப்பதற்கு நோக்கம் கொண்டுள்ளது.
- அரசாங்கத்திடமுள்ள தகவலின்படி, இந்தியாவில் காசநோய் உள்ள ஆண்கள் 27.4 லட்சமாகும். காசநோயின் ஆண், பெண் விகிதம் தோராயமாக 2:1 ஆகும்.
- இந்த கட்டமைப்பு, "கண்டறி, சிகிச்சையளி, தடு மற்றும் அதை நிலைநிறுத்து" (Detect, Treat, Prevent and Build) என்பதை உள்ளடக்கியுள்ளது.

❖ **மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சகம், தேசிய நெடுஞ்சாலைகளில் அனைத்து சுங்கச்சாவடிகளிலும் கட்டணமில்லாமல் இலவசமான ஒரு பயணத்தை சில குறிப்பிட்ட அலுவலர்களை தொடரும் பாதுகாப்பு**

**வாகனங்களுக்கு மட்டுமே அனுமதிப்பதற்கு புதிய அம்சத்தை அறிவித்துள்ளது.**

- இந்த புதிய அம்சத்தின்படி, பாதுகாப்பு வாகனம் (Security Vehicle) என்பது மத்திய ஆயுதப்படை அல்லது மத்திய துணை இராணுவப்படை அல்லது மாநிலக் காவல்துறை ஆகியவற்றின் பாதுகாப்பு அலுவலர்களை சுமந்து செல்லும் வாகனமாகும்.
- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் (National Highways Authority of India – NHAI) பழைய விதிகளின்படி, ஜனாதிபதி, பிரதமர், உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகள், மத்திய அமைச்சர்கள், முதலமைச்சர்கள், உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள், இராணுவத்தலைவர்கள் மற்றும் M.P க்கள் போன்றோர் உள்ளடங்கிய 25 பிரமுகர்கள் செல்லும் வாகனங்களுக்கு மட்டுமே சுங்கச்சாவடிகளில் கட்டணம் செலுத்தாத விலக்கு அளிக்கப்பட்டிருந்தது.

❖ FAME – II **திட்டத்தின்கீழ் அரசாங்கத்தால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ள 256 மின்சார வாகன மின்னேற்றி நிலையங்களை தமிழ்நாடு பெறவுள்ளது.**

- ஒட்டுமொத்தமாக, இந்திய அரசாங்கம் FAME – II திட்டத்தின்கீழ் 62 நகரங்களில் 2600 மின்சார வாகன மின்னேற்றி நிலையங்கள் அமைப்பதற்கு ஒப்புதலளித்துள்ளது.
- மஹாராஷ்டிரா மாநிலம் 317 நிலையங்களைப் பெற்று முதலிடம் பெறுகிறது.
- அதைத்தொடர்ந்து, 266 நிலையங்களைப் பெற்று ஆந்திரபிரதேசம் இரண்டாம் இடம் பெறுகிறது.
- தமிழ்நாடு 256 நிலையங்களைப் பெற்று மூன்றாம் இடம் பெறுகிறது.
- குஜராத் 228 நிலையங்களையும், ராஜஸ்தான் 205 நிலையங்களையும் மற்றும் உத்திரபிரதேசம் 207 நிலையங்களையும் பெறவுள்ளன.
- யூனியன் பிரதேசங்களான டெல்லிக்கு 72 நிலையங்களும் மற்றும் சண்டிகருக்கு 70 நிலையங்களும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.
- புதுச்சேரி யூனியன் பிரதேசம் 10 நிலையங்களையும் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள யூனியன் பிரதேசமான ஜம்மு மற்றும் காஷ்மீர் 25 நிலையங்களையும் பெறவுள்ளன.
- உத்தரகாண்ட் மற்றும் ஹிமாச்சலபிரதேசம் தலா 10 நிலையங்களைப் பெறவுள்ளன.
- இந்திய அரசாங்கம் 4 சதுர கிலோ மீட்டருக்கு குறைந்தது ஒரு மின்னேற்றி நிலையத்தை ஏற்படுத்துவதற்கு நோக்கம் கொண்டுள்ளது.

❖ **இந்திய அரசாங்கம் ஜனவரி 7-ல் 30 ஊடக அமைப்புகளுக்கான முதலாவது "அண்டராஷ்டீரிய யோகா திவாஸ் ஊடக விருதை (Antarrashtriya Yoga Diwas Media Samman)"வழங்கவுள்ளது.**

- இவ்விருது, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சர் பிரகாஷ் சவடேக்கரால் வழங்கப்படும்.
- இவ்விருது, உலகிற்கு யோகாவைப் பற்றி பரப்புவதில் ஊடகத்தின் பங்கை குறிக்கும் விதத்தில் ஜுன் 2019-ல் நிறுவப்பட்டது.

- இந்திய பத்திரிக்கை கவுன்சிலின் தலைவர் நீதிபதி சி.கே.பிரசாத்தால் தலைமை வகிக்கும் 6 உறுப்பினர் கொண்ட குழு இவ்விருதிற்கான வெற்றியாளர்களை பகுத்தாய்ந்துள்ளது.
- தொலைக்காட்சியில் யோகாவின் சிறந்த ஊடக ஒளிபரப்பிற்காக 8 விருதுகளும், வானொலியின் யோகாவின் சிறந்த ஊடக ஒலிபரப்பிற்காக 11 விருதுகளும் மற்றும் செய்தி தாள்களில் யோகாவின் சிறந்த ஊடக பதிப்பிற்காக 11 விருதுகளும் ஆக மொத்தம் 30 விருதுகள் வழங்கப்படவுள்ளன.
- பன்னாட்டு யோகா தினம் 177 உறுப்பினர் நாடுகளால் ஒப்புக்கொள்ளப்பட்டு டிசம்பர் 11, 2014-ல் ஐக்கியநாடுகள் சபை அங்கீகரித்தது.
- முதலாவது பன்னாட்டு யோகா தினம் ஜூன் 21, 2015-ல் கொண்டாடப்பட்டது.
- அது, இந்திய பிரதமர் நரேந்திரமோடியால் ஆரம்பிக்கப்பட்டது. ஐந்தாவது பன்னாட்டு யோகா தினம் ஜூன் 21, 2019-ல் "காலநிலை செயல்பாட்டிற்கான யோகா" (Yoga for Climate Action) என்ற மையக்கருத்துடன் அனுசரிக்கப்பட்டது.
- அந்தநாள், ஜார்கண்டின் ராஞ்சியில் பொதுமக்கள் யோகா பயிற்சியில் பிரதமர் நரேந்திரமோடி பங்கேற்றார்.

❖ **ஆற்றல் திறன் கழகம்** (Bureau of Energy Efficiency - BEE) **குளிர்சாதப் பெட்டிகளின் செயல்பாட்டிற்கான புதிய ஆற்றல் தரங்களை அறிவித்துள்ளது.**

- அனைத்து குளிர்சாதன அறைகளிலும் $24^0$ C இயல்பான கட்டமைப்பாக இருக்க வேண்டும் என்று அது அறிவித்துள்ளது.
- இவ்வித ஆற்றல் தரங்கள் ஜனவரி 1, 2021 லிருந்து நடைமுறைக்கு வரும்.
- புதிய ஆற்றல் தரங்களின்படி, இந்திய காலநிலை ஆற்றல் திறன் விகிதம் (Indian Seasonal Energy Efficiency Ratio – ISEER) என்பது Split AC களுக்கு 3.30-5.00 மற்றும் Window AC களுக்கு 2.70-3.50 ஆக இருக்கும்.
- இயல்பான கட்டமைப்பு கருத்து (Concept of Default Setting) 2018-ல் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ஜப்பான் போன்ற நாடுகளில் இவ்வித இயல்பான கட்டமைப்பு $28^0$ C ஆகும்.
- ஆற்றல் திறன் கழகத்திற்கிணங்க (BEE), தற்போது இந்தியாவின் மொத்த குளிர்சாதன திறன் 80 மில்லியன் டன் ஆகும்.
- ஆனால், 2030 வாக்கில் அத்திறன் 250 மில்லியனாக அதிகரிக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

❖ **இந்திய வானியல் ஆராய்ச்சித்துறை** (India Meterorological Department-IMD), **நாட்டில் சராசரியைவிட $0.36^0$C வெப்பநிலையுடன் 2010 – 2019 என்ற பத்தாண்டு மிகவும் வெப்பமானதாகும் என்று அறிவித்துள்ளது.**

- இது, 2019 ஆம் ஆண்டுக்கான இந்திய வானியல் ஆராய்ச்சிதுறையால் வெளியிடப்பட்ட காலநிலை அறிக்கை நிலையின்படி (State of Climate Report) உள்ளது.

- அந்த அறிக்கைக்கிணங்க, 2019-ல் இந்தியாவில் காலநிலை மாற்றத்தால் 1659 பேர் உயிரிழந்தனர்.
- இதில் பீகாரில் மட்டும் 650 இறப்புகள் பதிவாகி மிகவும் அதிகமாக இருந்தது.

❖ **கடற்கரை ஆய்விற்கான தேசிய மையம் (National Centre for Coastal Research – NCCR) மற்றும் பெருங்கடல் தொழில்நுட்பத்தின் தேசிய நிறுவனம்** (National Institute of Ocean Technology – NIOT) **ஆகிய இரண்டு சென்னை ஆய்வுக்கூடங்களிலுள்ள ஆய்வாளர்கள் இலட்சத்தீவுகளிலுள்ள கடற்கரை பெதுவாக கரைந்து கொண்டிருப்பதற்கு ஒரு தீர்வை காணவுள்ளார்கள்.**

- இலட்சத்தீவு 36 சிறிய தீவுகளைப் பெற்றுள்ளது.

❖ **டெல்லி உயர்நீதிமன்றம், திகார் சிறைக்குள் ஜனவரி 22-ல் காலை 7 மணியளவில் 2012-ல் நிர்பையா வன்புணர்ச்சி மற்றும் கொலை வழக்கில் நான்கு குற்றவாளிகள் தூக்கிற்கு ஆணையிட்டுள்ளது.**

- தூக்கு செயல்படுத்தப்படவுள்ள நான்கு கைதிகள் முக்கேஷ்சிங், வினை ஷர்மா, பவன்குப்தா மற்றும் அக்ஸைய தாக்கூர் ஆவர்.

❖ **தேசிய புள்ளியியல் அலுவலகம், இந்திய ரிசர்வ் வங்கி மதிப்பீட்டு வரிசையில் 6.8 சதவீதமாக சென்ற வருடம்** GDP **வளர்ச்சி இருந்ததைவிட குறைவாக 2019-ல் 5 சதவீதமாக முன்கணித்துள்ளது.**

❖ **ராஜ்தானி துரித வண்டியுடன் போட்டியிடும் மும்பை – டெல்லி மற்றும் ஹௌரா-டெல்லி துறைகளை உள்ளடக்கி 100 வழித்தடங்களில் கிட்டத்தட்ட 150 தனியார் இரயில்களை இயக்குவதற்கான அனுமதியை ஒரு உயர்மட்ட குழு வழங்கியுள்ளது.**

- தற்போது, டெல்லி-லக்னோ மற்றும் மும்பை-அகமதாபாத் வழிதடங்களில் ஒரு சோதனையாக 2 தேஜாஸ் இரயில்களை இந்திய இரயில்வே தனியார் துறைக்கு வழங்கியுள்ளது.
- இரயில்வே வாரியத்தலைவர் வி.கே.யாதவ் அரசாங்கத்தின் 100 நாள் நிகழ்ச்சி நிரலில் தனியார் இரயில்களுக்கு கொடிகாட்டிய பின்பு, இந்தக்குழு இரயில்வே அமைச்சர் பி.யூஸ் கோயலால் அமைக்கப்பட்டது.

❖ **அனைத்து துணை இராணுவப் படைகளிலும் 10-க்கு ஒரு பணியாளர் பெண் இருக்கின்ற வேளையில் அதிகபட்சமான பெண் பணியாளர்களை இரயில்வே காவல்துறை பெற்றுள்ளது.**

- தற்போது, அத்துறையிலுள்ள மொத்தம் கிட்டத்தட்ட 80,000 பணியாளர்களில் சுமார் 8000 பேர் பெண்களாவார்.
- மார்ச் 2019-ல் உள்ளபடி, மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப்படையில் (Central Industrial Security Force - CISF) 5.55 சதவீதம் மட்டுமே பெண்பணியாளர்கள் உள்ளனர்.
- CISF பெற்றுள்ள மொத்தம் 1,56,013 பணியாளர்களில் 8558 பெண்கள் மட்டுமே உள்ளனர். இதேபோல, மத்திய ரிசர்வ் காவல்படையில் (Central

Reserve Police Force – CRPF) மொத்தமுள்ள 2.96 லட்சம் பணியாளர்களில் 7824 (2.64%) மட்டுமே பெண்களாவர்.

- இந்தோ-திபெத்தியன் எல்லைக் காவலில் (Indo-Tibetan Border Police – ITBP) மொத்தமுள்ள 80,000 பணிகளில் பெண்கள் 2000 மட்டுமே ஆவர்.
- மேலும், சஸத்ரா சீமா பாலில் (Sashastra Seema Bal-SSB) உள்ள மொத்தம் 98,000 பணியாளர்களில் பெண்கள் 1,817 மட்டுமே ஆவர்.
- எல்லைப் பாதுகாப்பு படையில் (Border Security Force-BSF) மொத்தமுள்ள 2,45,000 பணியாளர்களில் பெண்கள் 5,129 மட்டுமே ஆவர்.

❖ **மத்திய அரசாங்கம், துறையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஊக்குவித்து இயல்பான சுரங்க செயல்பாட்டிற்கு ஒரு முடிவை கொண்டுவந்து, நிலக்கரி சுரங்கங்களுக்கான தடைகளை தளர்த்தியுள்ளது.**

- இந்த தளர்வு நிலக்கரி சுரங்கங்களில் மேற்கொள்ளப்படும் ஏலத்தில் தனியார் பங்கேற்பை அதிகரிக்க வழிவகுக்கும்.
- சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1957 (Mines and Minerals (Development and Regulation) Act of 1957) மற்றும் நிலக்கரி சுரங்கங்கள் (சிறப்பு அம்சங்கள்) சட்டம் 2015 (Coal Mines (Speical Provisions) Act 2015) ஆகிய இரண்டு சட்டங்களில் திருத்தங்களை அறிமுகப்படுத்தும் ஒரு இடைக்காலச் சட்டத்திற்கு பிரதமரை தலைவராகக் கொண்ட மத்திய அமைச்சரவை ஜனவரி 8-ல் ஒப்புதலளித்துள்ளது.
- இந்த இடைக்காலச்சட்டம் அடுத்த 6 மாதங்களுக்குள் பாராளுமன்றத்தால் முழுச்சட்டமாக இயற்றப்படும்.

❖ **பொருளாதார விவகாரங்கள் மீதான காபினெட் குழு, வடகிழக்கு பகுதியில் அமைக்கப்படும் முன்மொழியப்பட்ட வாயு குழாய்வழி இணைப்பணிக்காக ரூ.5,559 கோடியின் நம்பகத்தன்மை இடைவெளி நிதிக்கு** (Viability Gap Funding – VGF) **ஒப்புதலளித்துள்ளது.**

- இவ்வித வாயு குழாய்வழி இணைப்புப் பணிக்கு அரசாங்கத்தால் ஒப்புதலளிக்கப்படுவது இது இரண்டாவது முறையாகும்.
- காபினெட் குழுவால் ஒப்புதலளிக்கப்பட்ட இந்தத் தொகை (ரூ.5,559 கோடி) மொத்தம் ரூ.9265 கோடி திட்டத்தின் 60 சதவீதமாகும்.
- முன்மொழியப்பட்ட இத்திட்டம், இட்டாநகர், திமாபூர், கோஹிமா, இம்பால், அய்வால், அகர்தலா, சில்லாங், காங்டன் போன்ற பிரதான நகர்களை அஸ்ஸாமின் தலைநகரான கௌஹாத்தியுடன் 1,656 கிலோ மீட்டர் குழாய் வழி இணைப்புத் திட்டமாகும்.
- இந்த குழாய்வழி இணைப்பு, ஒவ்வொரு குடும்பத்திற்கும் சமையல் வாயுவை கொடுக்கும் மற்றும் ஆட்டோ மொபைல் தொழில்களுக்கு சுருக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை (Compressed Natural Gas – CNG) விநியோகிக்கும்.
- இந்தமுறை ஏற்கனவே டெல்லி யூனியன் பிரதேசத்தில் உள்ளது.
- இந்த இயற்கை எரிவாயு குழாய்வழி திட்டம் சிக்கிம் உட்பட்டு மற்றும் 7 சகோதரிகளான அஸ்ஸாம், அருணாச்சலபிரதேசம், மணிப்பூர், மேகாலயா,

மிசோராம், நாகாலாந்து மற்றும் திரிபுரா ஆக மொத்தம் 8 மாநிலங்களுக்கு பயன்படும்.

- இத்திட்டம், மத்திய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தால் மேற்பார்வையிட்டு மதிப்பிடப்படுகிறது.

❖ **தகவல்தொடர்பு, மின்னணு மற்றும் தகவல்தொழில்நுட்பம், சட்டம் மற்றும் நீதி ஆகியவற்றிற்கான மத்திய அமைச்சர் ரவிசங்கர் பிரசாத், சென்னையில் ஜனவரி 9-ல் சென்னையிலிருந்து அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளுக்கு கடலுக்கடியே ஆப்டிக்கல் .ைபபர் இணைப்பதை தொடங்கிவைத்தார்.**

- இத்திட்டத்திற்கான செலவு மதிப்பீடு ரூ.1224 கோடியாகும்.
- இத்திட்டம், BSNL ஆல் அமுல்படுத்தப்படுகிறது.
- இந்த இணைப்பு தூரம் 2250 கிலோமீட்டராகும்.

❖ **மத்திய உள்துறை அமைச்சகம், ஜனவரி 10 லிருந்து குடியுரிமை (திருத்தம்) சட்டம் 2019-ன் அம்சங்கள் நடைமுறைக்கு வரும் என்ற அறிவிப்பை வழங்கியுள்ளது.**

- இந்தச்சட்டம், டிசம்பர் 11-ல் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது மற்றும் அது, டிசம்பர் 12-ல் ஜனாதிபதியின் ஒப்புதலைப் பெற்றது.
- ஏற்கனவே, ஒரு நபர் இந்திய குடியுரிமை பெறவேண்டுமென்றால் குறைந்தது அவர் 11 வருடங்கள் இந்தியாவில் தங்கியிருக்க வேண்டும்.
- ஆனால் இப்புதிய சட்டத்தின்படி, ஒருநபர் இந்தியக் குடியுரிமை பெறுவதற்கு குறைந்தது 6 ஆண்டுகள் இந்தியாவில் தங்கினால் போதுமானது.
- அஸ்ஸாம், மேகாலயா, மிசோராம் மற்றும் திரிபுரா ஆகிய நான்கு பழங்குடிப்பகுதி மாநிலங்களும் இந்திய அரசியலமைப்பின் ஆறாவது அட்டவணைக்குள் உள்ளடங்குவதால் இந்த குடியுரிமை திருத்தச்சட்டம் அங்குப் பொருந்தாது.
- அருணாச்சலப் பிரதேசம், நாகாலாந்து மற்றும் மிசோராம் ஆகிய மாநிலங்களில் 1873 ஆம் ஆண்டின் பெங்காள் கிழக்கத்திய எல்லைப்பகுதி வரைமுறையின் (Bengal Eastern Border Regulation) கீழ் உட்புற வரிசை அனுமதி (Innerline permit) அறிவிக்கப்பட்டு இன்றும் நடைமுறையில் அங்கும் இந்த சட்டம் பொருந்தாது.

❖ **மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா புதுடெல்லியில் ஜனவரி 10-ல் இந்திய கணிணிக்குற்ற ஒருங்கிணைப்பு மையத்தை** (Indian Cyber Crime Coordination Centre – (14C)) **தொடங்கிவைத்தார்.**

- 14C என்பது பின்வரும் ஏழு பெரிய அமைப்புகளை உள்ளடக்கியதாகும்.
    1. தேசிய கணிணிக்குற்ற அச்சுறுத்தல் பகுத்தாய்வு அலகு
    2. கூட்டு கணிணிக்குற்ற புலனாய்வுக் குழுவிற்கான தளம்
    3. தேசிய கணிணிக்குற்ற அறிக்கையாக்கும் இணையதளம்
    4. கணிணிகுற்ற சுற்றுச்சூழல் மேலாண்மை அலகு
    5. தேசிய கணிணிக்குற்ற பயிற்சி மையம்
    6. தேசிய கணிணிக்குற்ற ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க மையம்
    7. தேசிய கணிணிக்குற்ற கைரேகை ஆய்வுக்கூடம்

- இத்திட்டம், ரூ.415.86 கோடி செலவு மதிப்பீட்டில் அக்டோபர் 2018-ல் ஒப்புதலளிக்கப்பட்டது.
- இதுவரை 15 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் போன்றவை பிராந்திய கணினிக்குற்ற ஒருங்கிணைப்பு மையங்களை அமைப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளன.
- 14C தவிர, தேசிய தகவலியல் மையம் - கணினி அவசர பதிலீட்டு அணியையும் (National Informatics Centre – Computer Emergency Response Team - NIC-CERT) யும் மத்திய அரசாங்கம் தொடங்கியுள்ளது.
- முன்னதாக, ஆகஸ்டு 30-ல் தேசிய கணினிக்குற்ற அறிக்கையளிக்கும் இணையதளத்தை மத்திய அமைச்சகம் தொடங்கியுள்ளது.

❖ **மத்திய சமூகநீதி அமைச்சகம், ஜனவரி 10, 2019-ல் மூன்றாம் பாலின நபர்கள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம் 2019-ன் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.**

- இச்சட்டம் பாராளுமன்றத்தால் நவம்பர் 26, 2019-ல் இயற்றப்பட்டது மற்றும் டிசம்பர் 5, 2019-ல் அதற்கு ஜனாதிபதி ஒப்புதலளித்தார்.
- இச்சட்டம், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சுகாதாரக்கவனம் போன்ற களங்களில் மூன்றாம் பாலின நபர்களுக்கெதிரான வேறுபாட்டை முடிவுக்கு கொண்டு வருகிறது.
- மேலும், இச்சட்டம் அவர்களுக்கு சமூக மதிப்பையும் அங்கீகாரத்தையும் அளிக்கிறது மற்றும் மாவட்ட நீதிபதியிடமிருந்து சான்றிதழ் பெறவும் அனுமதிக்கிறது.
- இந்த புதிய சட்டத்தின்படி, ஒரு மூன்றாம் பாலின நபர் பாலின மாற்றம் செய்யும் அறுவைசிகிச்சை செய்திருந்தால், அவர் அந்த மருத்துவமனையிலிருந்து ஒரு சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம்.

❖ **வனம், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான மத்திய அமைச்சகம் சமீபத்தில் புதிய நனைநில பாதுகாப்பு விதிகளை** (Wetland Conservation Rules) **அறிவித்துள்ளது.**

- இப்புதிய விதிகள், நனைநிலப்பகுதிக்குள் எவ்வித தொழிற்சாலையை அல்லது காலணியை அமைப்பதையும் மற்றும் எவ்வித கழிவுகளையும் அங்கு போடுவதையும் தடுக்கிறது.
- ஒவ்வொரு மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசமும் இதற்காக ஒரு ஆணையத்தை ஏற்படுத்தக் கடமைபட்டுள்ளது.
- இந்த அறிவிப்பின்படி, விதிமுறைகள் பிரசூலிக்கப்பட்டதிலிருந்து மூன்று மாதத்திற்குள் மாநிலங்கள் அல்லது யூனியன் பிரதேசங்களில் அமைந்துள்ள அனைத்து நனைநிலங்களின் ஒரு அட்டவணையை நனைநில ஆணையகம் வெளியிடக் கடமைப்பட்டுள்ளது.
- நனைநிலங்கள் பாதுகாப்பு விதிகளின் அமுலாக்கம் தொடர்பாக தகவல்களை பரிமாறிக் கொள்வதற்காக இந்த அமைச்சகம் ஒரு வலைதளத்தையும் தொடங்கியுள்ளது.
- தேசிய நனைநில மேலாண்மை குழு (National Wetland Management Committee) 1987-ல் அமைக்கப்பட்டது.

- இவ்வித நனைநில சுற்றுச்சூழல் விலங்குகள் மற்றும் பறவைகளுக்கான வாழ்விடங்களாக திகழ்கிறது.

❖ **நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் பிப்ரவரி 1, 2020-ல் அவரது இரண்டாவது வரவு செலவு திட்டத்தை சமர்பிப்பார்.**

- வரவுசெலவு திட்ட கூட்டத்தொடர் இரண்டு கட்டங்களாக ஜனவரி 31-ல் தொடங்கி ஏப்ரல் 3-ல் முடிவடையும்.
- 2020-21 ஆண்டு மத்திய வரவு செலவு திட்டத்திற்கான பாராளுமன்ற கூட்டத்தொடர் ஜனவரி 30 லிருந்து பிப்ரவரி 11 வரையும் மற்றும் இரண்டாவது கட்டம் மார்ச் 2 லிருந்து ஏப்ரல் 3 வரையும் செயல்படும்.
- கடந்த ஜுலை-செப்டம்பர் காலாண்டில் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி விகிதம் 4.5 சதவீதமாக இருந்தது.
- 2009-ல் பொருளாதார பின்னடைவு ஏற்பட்டதிலிருந்து இதுவே மிகவும் குறைந்த விகிதமாகும்.

❖ **மத்திய விமானப்போக்குவரத்து அமைச்சகம், ஜனவரி 31 வாக்கில் ட்ரோன்கள் மற்றும் ட்ரோன் ஆப்பரேட்டர்களின் தன்னார்வ முயற்சிக்காக ஒருமுறை வாய்ப்புக்கான ஒரு பொது அறிவிப்பை வெளியிட்டுள்ளது.**

- அதன்படி, ஜனவரி 31 2020 என்ற காலக்கெடுவிற்கு பின்பு எந்தவொரு பதிவு பெறாத ட்ரோன்களையும் இயக்கினால் இந்திய தண்டனைச்சட்டம் (IPC) மற்றும் 1934 ஆம் ஆண்டின் போர்விமானச்சட்டம் போன்றவற்றால் தண்டிக்கப்படுவர்.
- அப்படிப்பட்டவர்களுக்கு இரண்டு வருட சிறைத்தண்டனையோ அல்லது ரூ.10 லட்சம் தண்டமோ வழங்கப்படும்.
- இவ்வித விதிமுறைகள் டிசம்பர் 1, 2018 முதல் நடைமுறையிலுள்ளன.
- தற்போது, புதிய விதிமுறைகளின்படி, ட்ரோன் பதிவு ஜனவரி 14, 2020-ல் தொடங்கியுள்ளது.

❖ **மத்திய சுகாதார அமைச்சகம், அதிக செலவு சிகிச்சையின்கீழ் எந்த அரிய நோயிலிருந்து துன்புறும் நோயாளிகளின் துயரம் போக்குவதற்கு அரிய நோய்களுக்கான ஒரு புதிய வரைவு தேசியக் கொள்கை 2020 ஐ** (National Policy for Rare Diseases) **வெளியிட்டுள்ளது.**

❖ **மத்திய அரசாங்கம், ஜனவரி 13-ல் ஒருங்கிணைந்த சாலை விபத்து தகவல் அடிப்படை** (Integrated Road Accident Database - IRAD) **என்று அறியப்படுகின்ற ஒரு மத்திய விபத்து தகவல் அடிப்படை மேலாண்மை முறையை தொடங்கியுள்ளது.**

- சாலைப் பாதுகாப்பு பங்குதாரர்கள் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின்கட்கறி ஆகிய இருவரும் IRAD ஐ தொடங்கி வைத்தனர்.
- இத்திட்டம், சென்னை IIT ஆல் உருவாக்கப்பட்டது மற்றும் தேசிய தகவலியல் மையத்தால் அமுல்படுத்தப்படும்.
- இத்திட்டத்திற்கான மொத்த செலவு ரூ.250 கோடியாகும் மற்றும் இந்த நிதியுதவி உலக வங்கியால் வழங்கப்பட்டுள்ளது.

- இத்திட்டம், ஒரு முன்னோட்ட திட்டமாக சாலை விபத்து இறப்புக்கள் அதிகமாக இருக்கும் கர்நாடகா, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், தமிழ்நாடு மற்றும் உத்திரபிரதேசம் ஆகிய ஆறு மாநிலங்களில் அமுல்படுத்தப்படும்.

❖ **சிறப்புமிகு** "Beating Retreat" **விழா, இந்த வருடம்** "Sare Jahan se Achha" **என்பதற்கு பதிலாக "வந்தே மாதரம்" என்ற நாட்டின் தேசிய பாடலுடன் முடிவடையவுள்ளது.**

- இவ்விழா புதுடெல்லியில் மெஜஸ்டிக் ராஜ்பாத்தின் ஒரு முடிவிலுள்ள விஜய் சௌக்கில் நடத்தப்படுகிறது.
- பொதுவாக, இவ்விழாவில் பிரபலமான கிறிஸ்தவ பாடலான கவிஞர் ஹென்றி பிரான்சிஸ் லிட்டால் இசையமைக்கப்பட்ட "Abide with Me" என்ற பாடல் பாடப்படும்.
- 2019-ல் இப்பாடல் மொத்தம் 27 செயல்பாடுகளில் 8 மேற்கத்திய இசைகளாக இருந்தது.
- இந்த வருடம் "Abide with Me" என்பது எடுக்கப்பட்டு "வந்தே மாதரம்" என்பது புகுத்தப்படுகிறது.

❖ **ஜனவரி 15, 2021 லிருந்து இந்திய தரங்கள் கழகத்திடமிருந்து** (Bureau of Indian Standards – BIS) **தரக்குறியீட்டு சான்றை பெறாமல் நாட்டில் எந்தவொரு நகை விற்பனையாளரும் தங்க நகை அணிகலன்களை விற்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.**

- இது, மத்திய நுகர்வோர் விவகார அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வானால் அறிவிக்கப்பட்டது.

❖ **மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம், நீலக்கொடி** (Blue Flag) **சான்றளிக்கப்பட்ட கடற்கரைக்களுக்கான கடற்கரை முறைப்படுத்தும் மண்டல** (Coastal Regulation Zone – CRZ) **விதிமுறைகளை தளர்த்தியுள்ளது.**

- இவ்வித விதிமுறைகள், கடற்கரைக்கு அருகாமையில் மாநில அரசு எவ்வித கட்டுமானத்தையும் மேற்கொள்ள கூடாது என்பதை தடுக்கிறது. அதற்காகவே நீளக்கொடி சான்று வழங்கப்படுகிறது.
- சென்ற ஆண்டு இந்த சான்றிதழுக்காக இந்தியாவிலுள்ள 13 கடற்கரைகளை சுற்றுச்சூழல் அமைச்சகம் தேர்வு செய்தது. அவைகள் பின்வருமாறு:
    1. Ghoghala beach (Diu)
    2. Shivrajpur beach (Gujarat)
    3. Bhogave beach (Maharashtra)
    4. Padubidri beach (Karnataka)
    5. Kasarkod beach (Karnataka)
    6. Kappad beach (Kerala)
    7. Kovalam beach (Tamil Nadu)
    8. Eden beach (Puducherry)
    9. Rushikonda beach (Andhra Pradesh)

10. Miramar beach (Goa)
11. Golden beach (Odisha)
12. Radhanagar beach (Andaman & Nicobar Islands)
13. Bangaram beach (Lakshadweep)

- "நீலக்கொடி சான்று" என்பது சுத்தம் மற்றும் சுற்றுச்சூழல் தன்மையை உள்ளடக்கும் ஒரு பன்னாட்டு அறிமுகமாகும்.
- இந்த சான்று, பின்வரும் நான்கு பிரதான தலைப்புகளில் 33 கூறுகளை உள்ளடக்கியுள்ளது: 1. சுற்றுச்சூழல் கல்வி மற்றும் தகவல்தொடர்பு 2. குளிக்கும் நீரின் தன்மை 3. சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் பாதுகாப்பு 4. பாதுகாப்பு மற்றும் சேவைகள்
- இந்த நீலக்கொடி திட்டம் பிரான்சில் 1985-ல் தொடங்கப்பட்டது.
- இத்திட்டம், ஐரோப்பாவில் 1987 லிருந்து அமுல்படுத்தப்பட்டு வருகிறது.
- ஐரோப்பாவிற்கு வெளிப்புறம் 2001 லிருந்து இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ **இந்திய இரயில்வே 2022 வாக்கில் பயணியர்களுக்கு** "high quality, buffer free" **வீடியோ உள்ளடக்க வசதியளிக்க திட்டமிட்டுள்ளது.**

- இத்திட்டம், பொதுத்துறை நிறுவனம் "இரயில்டெல் (PSU RailTel)" என்பதால் அமுல்படுத்தப்படும்.
- இத்திட்டம், இந்திய இரயில்வேயின் அனைத்து 17 மண்டலங்களிலும் மற்றும் தோராயமாக மொத்தம் 8731 இரயில்களிலும் அமுலாக்கப்படும்.

❖ **மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, குஜராத்திலுள்ள காந்திநகரில்** "Cyber AASHVAST" **என்றழைக்கப்படும் நாட்டின் முதலாவது கணினிக் குற்ற தடுப்பு அலகைத் தொடங்கி வைத்தார்.**

- இந்த "Cyber AASHVAST" திட்டத்துடன் வீடியோ ஒருங்கிணைப்பு மற்றும் மாநில அளவிலான முன்கூட்டிய பாதுகாப்பு (Video Integration and State Wide Advance Security) VISWAS என்ற திட்டத்தையும் அமைச்சர் தொடங்கி வைத்தார்.
- அந்நிகழ்ச்சியின் போது, AASHVAST மற்றும் VISWAS ஆகியவற்றுடன் NETRANG திட்டமும் தொடங்கப்பட்டது.
- VISWAS மற்றும் NETRANG உதவியுடன் கணினி குற்றங்களைத் தடுப்பதற்கு "Cyber AASHVAST" கவனம் செலுத்துகிறது.
- AASHVAST என்பது குஜராத்தில் கணினி குற்றங்களை தடுப்பதற்கு மற்றும் கட்டுப்படுத்துவதற்கு உதவும்.
- அது, மாநிலத்தின் 32 மாவட்டங்களில் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறைகளை ஏற்படுத்தும்.

❖ **பாகிஸ்தான் மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகளின் உணர்வுபூர்வ பகுதிகளிலுள்ள எல்லைப்பகுதிகள் வழியாக வெட்டற்ற இரும்பு வேலியை அமைப்பதற்கு இந்தியா முடிவு செய்துள்ளது.**

- இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு உள்துறை அமைச்சகத்தின் ஒட்டுமொத்த ஒருங்கிணைந்த எல்லை மேலாண்மை முறைமை

(Comprehensive Integrated Border Management System – CIMBMS) பயன்படுத்தப்பட்டுள்ளது.

❖ **மத்திய இரும்புத்துறை அமைச்சகம் நாட்டில் "Purvodaya" என்ற ஒரு உலகத்தரமான இரும்பு மையம் தொடங்குவதை அறிவித்துள்ளது.**

- இந்த அமைச்சகம், "Purvodaya" வின் அமுலாக்கத்தில் இந்திய தொழில்களின் கூட்டமைப்புடன் (Confederation of India Industries - CII) இணைகிறது.
- இந்தமையம் கிழக்கத்திய மாநிலங்களின் துரிதப்படுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டத்தின் மீது முழுக்கவனம் செலுத்தும்.
- இந்த இரும்பு மையம் அந்தப் பகுதியில் 2.5 மில்லியன் வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.
- இந்த முயற்சி, 2030 வாக்கில் 300 மெட்ரிக் டன் இலக்கை இந்தியாவின் இரும்புக் கொள்கையில் சாதிப்பதற்கு உதவும்.
- மேற்கு வங்கம், சத்தீஸ்கர், ஜார்கண்ட், ஒடிசா மற்றும் வடக்கத்திய ஆந்திரபிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்களில் அதிக அளவுக்கு நிலக்கரி, பாக்சைட் மற்றும் டோலமைட் போன்றவைகள் உள்ளன.
- இந்த பகுதி, ஹால்டியா, பாராதீப், கொல்கத்தா மற்றும் விசாக் ஆகிய பிரதான துறைமுகங்களையும் பெற்றுள்ளது.
- இதுவரையில் இந்த பகுதியில் பர்வோதையா திட்டத்தின்கீழ் 12 பிரதான இரும்பு மண்டலங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

❖ "Shopper malware" **என்றழைக்கப்படும் ஒரு புதிய ட்ரோஜனுடன் திறன்பேசி பயன்படுத்துவோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

- "Shopper malware" முன்பு, அக்டோபர் மற்றும் நவம்பர் 2019 இடையே ட்ரோஜன்-ட்ரோப்பர் என்பதால் அதிக அளவு பாதிப்பு ஏற்படுத்தப்பட்டது.
- இந்திய அரசாங்கம் இப்படிப்பட்ட பாதிப்புகளை கண்டறியவும் மற்றும் ஆரம்பத்திலேயே போக்கவும் சைபர் ஸ்வச்சட்டா கேந்திராவை (Cyber Swachhta Kendra – CSK) அமைத்துள்ளது.
- இந்த CSKs, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கான மத்திய அமைச்சகத்தின் கீழுள்ள இந்திய கணினி அவசரநிலை பதிலீட்டுக் குழுவின் (Computer Emergency Response Team – CERT) கீழ் செயல்படுகின்றன.

❖ **தகவல் தொழில்நுட்பத்தின் தேசிய நிறுவனம்** (National Institute of Information Technology – NIIT) **என்ற ஒரு பலதரப்பு தேசிய நிறுவனம், மத்திய அரசின்** NEAT **திட்டத்திற்காக** EdTech **நிறுவனங்களின் ஒன்றாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.**

- செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி கற்கும் வழிமுறைகளை வழக்கப்படுத்துவதற்கு தொழில்நுட்பத்திற்கான தேசிய கல்வி கூட்டு (National Educational Alliance for Technology – NEAT) தொடங்கப்பட்டது.
- அது தொழில்நுட்பத் தீர்வுகளுக்குரிய ஒரு பொதுவான வழிமுறையாகும்.

- NEAT திட்டம் AICTE ஆல் அமுல்படுத்தப்படுகிறது.
- NIIT என்ற உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சியின் ஒரு இலாபம் சாராத பல்கலைக்கழகம் 1991-ல் ஏற்படுத்தப்பட்டது.

❖ **குஜராத்திலுள்ள ஒற்றுமையின் சிலை, ஷாங்காய் கூட்டுறவு அமைப்பின்** (Shanghai Cooperation Organization – SCO) **8 அதிசயங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.**

- இந்த ஒற்றுமையின் சிலை சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு மரியாதையளிக்கும் நினைவு சின்னமாகும்.
- இது, அக்டோபர் 2018-ல் பிரதமர் நரேந்திரமோடியால் தொடங்கப்பட்டது.
- சர்தார் வல்லபாய் பட்டேலின் 143வது பிறந்தநாளில் உலகின் மிக உயர்ந்த அவரின் சிலை 182 மீட்டரில் திறக்கப்பட்டது.
- அது தொடங்கி ஒரு வருட காலத்தில் 2.9 மில்லியன் சுற்றுலா பயணிகளை அது ஈர்த்துள்ளது மற்றும் 82 கோடி ரூபாய் வருவாய் வந்துள்ளது.
- ஷாங்காய் கூட்டுறவு அமைப்புக்குள் அடங்கிய 8 அதிசயங்கள் பின்வருமாறு: இந்த அதிசயங்கள் தொல்பொருள் ஆய்வு மற்றும் வரலாற்று நினைவுச் சின்னங்களை உள்ளடக்கும்.
    1. Statue of Unity in India
    2. Daming Palace in China
    3. Navruz palace in Tajikistan
    4. Mughals Heritage in Pakistan
    5. Tamgaly Gorge in Kazakhistan
    6. Po-i-Kalan Complex in Uzbekistan
    7. The Golden Ring of Russia
    8. Lake Issyk-Kull in Krygyzstan
- இந்தியா, ரஷ்யா, சீனா, கஜகிஸ்தான், டஜகிஸ்தான், கிர்கிஸ்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஷாங்காய் கூட்டுறவு அமைப்பின் உறுப்பு நாடுகளாகும்.
- இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் 2017-ல் பொருளாதார அமைப்பின் (Economic Bloc) அமைப்பின் உறுப்பினர்களாயின.
- முதல் முறையாக இந்த வருடம் ஷாங்காய் கூட்டுறவு அமைப்பு நாடுகளின் கூட்டத்தை இந்தியா கூட்டவுள்ளது.

❖ **தெற்கு மத்திய இரயில்வே மற்றும் பாரத ஸ்டேட் வங்கி ஆகிய இரண்டும் ஜனவரி 14-ல் 585 இரயில்வே நிலையங்களில் வாயிற்படி** (Door Step) **வங்கி முறையை அமுல்படுத்துவதற்கு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளன.**

❖ **மத்திய அரசாங்கம், எரிபொருள் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதற்கு நாடுமுழுவதும் "Saksham" இயக்கங்களை நடத்துவதற்கு முன்மொழிந்துள்ளது.**

- பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின்கீழ் செயல்படும் பெட்ரோலியப் பாதுகாப்பு ஆராய்ச்சி கழகம் (Petroleum Conservation Research Association – PCRA) ஜனவரி 16, 2020-ல் இந்த இயக்கத்தை தொடங்கும்.

❖ **ஒரு நான்கு தரப்பு ஒப்பந்தம், ஜனவரி 16-ல் மத்திய அரசு, திரிபுரா மாநிலஅரசு, மிசோராம் மாநிலஅரசு மற்றும் Bru-Reang பிரதிநிதிகள் ஆகியோரிடையே கையொப்பமிடப்பட்டது.**

- இந்த ஒப்பந்தம், திரிபுராவில் ப்ரூ அகதிகளின் நிரந்தர குடியேற்றத்திற்கு வசதியளிக்கிறது.
- மத்திய அரசாங்கம், அகதிகளின் மறுவாழ்வுக்கான ரூ.600 கோடி வழங்குவதற்கும் ஒப்புக் கொண்டுள்ளது.
- இந்த ஒப்பந்தம் 23 வருட ப்ரூ ரியாங் அகதிகள் பிரச்சனைக்கு ஒரு முடிவைக் கொண்டுள்ளது.
- இந்த ஒப்பந்தம், திரிபுராவில் 6 முகாம்களில் வசிக்கும் கிட்டத்தட்ட 34,000 ப்ரூ அகதிகள் வாழ்விற்கு பயனளிக்கும்.
- மிசோராமில் ரியாங் அல்லது ப்ரூ இனக்குழுக்கள் இரண்டாவது மிகப்பெரிய இணக்குழுவாகும்.
- 1997-ல் மிசோராமிலிருந்து வெளியே அவர்கள் செல்ல வேண்டுமென்று மிசோ மக்கள் தீவிரப் புரட்சியில் ஈடுபட்டார்கள்.
- எனவே, அவர்கள் வடக்கு திரிபுராவில் கஞ்சன்பூரில் தற்காலிக இருப்பிடங்களில் வாழ்ந்துக்கொண்டிருந்தார்கள்.
- இந்த வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தத்திற்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமை வகித்தார்.
- இந்த புதிய ஒப்பந்தத்தின்படி, திரிபுராவில் வசிக்கும் ஒவ்வொரு ப்ரூ குடும்பத்திற்கும் 40x30 சதுரஅடி வசிப்பிட நிலம் வழங்கப்படும்.
- இது தவிர, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.4 லட்சம் நிரந்தர வைப்பு, இரண்டு வருடங்களுக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.5000 ரொக்கம், இரண்டு வருடங்களுக்கு இலவச ரேஷன் மற்றும் வீடு கட்டுவதற்கு 1.5 லட்சம் நிதியுதவி போன்றவை வழங்கப்படும்.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ், திரிபுரா அரசாங்கம் நிலம் வழங்கும். நிதியை மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து வழங்கும்.

❖ **ஜனவரி 17-ல் குடியுரிமை திருத்தச்சட்டத்தை ரத்து செய்யும் தீர்மானம் கேரளாவிற்கு அடுத்து நாட்டில் இரண்டாவது மாநிலமாக பஞ்சாப் முன்வந்துள்ளது.**

❖ **ஜம்மு மற்றும் காஷ்மீர் யூனியன் பிரதேச அரசாங்கம், ஜனவரி 31-ல் ஜம்மு மற்றும் ஸ்ரீநகர் விமானநிலையங்களில் உட்புற பாதுகாப்பை CISF-க்கு வழங்க முடிவுசெய்துள்ளது.**

- இதுவரை, இவ்வித பாதுகாப்பு ஜம்மு மற்றும் காஷ்மீர் காவல்துறை மற்றும் CRPF ஆகிய இரண்டினாலும் இணைந்து மேற்கொள்ளப்பட்டது.
- இருப்பினும், CRPF விமான நிலையங்களின் வெளிப்புற பாதுகாப்பில் தொடர்ந்து கவனம் மேற்கொள்ளும்.

❖ **நிதிச்சிக்கலிலுள்ள ரியல் எஸ்டேட்டு பூதாகர நிறுவனமான** Unitech **ன் மேலாண்மையை சீர்படுத்துவதற்கு அதை மத்திய அரசு எடுத்துக்கொள்ள முடிவு செய்துள்ளது.**

❖ **மத்திய அரசாங்கம், அதன் "தேசிய** TB **கட்டுப்பாட்டு திட்டத்தை" தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம்** (National Tuberculosis Elimination Programme) **என்று மறுபெயரிட்டுள்ளது.**

- ஐக்கிய நாடுகள் நிலைநிறுத்து மேம்பாட்டு இலக்கின் ஐந்து வருடங்களில் அதாவது 2025 வாக்கில் காசநோயை முழுவதுமாக ஒழிப்பதற்கு இந்தியா நோக்கம் கொண்டுள்ளது.

❖ **உத்திரகாண்டிலுள்ள இரயில்வே ஆணையகங்கள் நடைமேடையிலுள்ள விவரப்பலகைகளில் உருதுமொழியை எடுத்துவிட்டு சமஸ்கிருத மொழியை எழுதுவதற்கு முடிவுசெய்துள்ளன.**

- தற்போதுள்ள இரயில்நிலையங்களின் விவரப்பலகைகளில் ஹிந்தி, ஆங்கிலம் மற்றும் உருது இடம்பெற்றுள்ளது.
- இதன்பிறகு, உருது மொழி எடுக்கப்பட்டு ஹிந்தி, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருதம் ஆகிய மூன்று மொழிகள் இடம்பெறும்.
- இரயில்வே அலுவலர்களின் கருத்துப்படி, ஹிந்தி மற்றும் ஆங்கிலத்துடன் மாநிலத்தின் இரண்டாவது மொழி எழுதப்பட வேண்டும் என முடிவுசெய்யப்பட்டுள்ளது.
- 2010-ல் உத்திரகாண்ட் மாநிலம் சமஸ்கிருத மொழியை இரண்டாவது அலுவலக மொழியாக அந்தஸ்து கொடுத்த முதல் மாநிலமாக முன்வந்தது.
- 2019-ல், ஹிமாச்சலபிரதேசம் சமஸ்கிருதத்திற்கு இரண்டாவது அலுவலக மொழி அந்தஸ்து வழங்கியுள்ளது.

❖ **பாட்னாவின் ஜெய்பிரகாஷ் நாராயண் பன்னாட்டு விமான நிலையம், முழுநேரமும் அர்பணிப்புடன் செயல்படும் மையத்திலிருந்து ஒரு முறையான விமான மருத்துவ அவசர ஊர்தி வசதியை தொடங்கியுள்ளது.**

- இம்மையம், ஜனவரி 16-ல் பீகார் சுகாதாரத்துறை அமைச்சர் மங்கள் பாண்டேவால் தொடங்கப்பட்டது.
- கயா மற்றும் ராஞ்சி விமான நிலையங்களில் இவ்வித மையங்களை திறப்பதற்கு இந்திய விமான நிலையங்கள் ஆணையகம் (AAI) ஒப்புதலளித்துள்ளது.
- சராசரியாக இந்த மையத்தின் உதவியை மாதத்திற்கு 12 நோயாளிகள் வரை பயன்படுத்தலாம்.

❖ **தேசிய ரியல்எஸ்டேட் மேம்பாட்டு கவுன்சில் (National Real Estate Development Council – NAREDCO) சமீபத்தில் தகுதியுள்ள வீடு வாங்குபவர்களுக்கு ஒரு ரியல் எஸ்டேட் இணையதளத்தை தொடங்கியுள்ளது.**

❖ **உள்துறை அமைச்சர் அமித்ஷாவால் தலைமை வகிக்கப்படும் அமைச்சர்கள் குழு** (Group of Ministers-GoM), **பணியிடங்களில் பெண்களின் பாலியல் தொந்தரவைத் தடுப்பதற்கு அதன் பரிந்துரைகளை இறுதிநிலைப்படுத்தியுள்ளது.**

- இந்தக்குழு, பணியிடத்தில் பெண்களின் பாலியல் தொந்தரவை தடுக்க சட்டரீதியாக பலப்படுத்துவதற்கு அமைக்கப்பட்டது.
- இந்த பரிந்துரைகள், பணியிடத்தின் பெண்களின் பாலியல் தொந்தரவை விளக்கும் 1860 ஆம் ஆண்டில் வரையப்பட்ட இந்திய தண்டனைச்சட்டத்தின் சில கூடுதலான அம்சங்களையும் உள்ளடக்குகின்றன.
- இந்தக்குழு, சமூக ஊடகத்தில் வெளியான Me Too இயக்கத்தைத் தொடர்ந்து, முதன்முதலில் அக்டோபர் 2018-ல் அமைக்கப்பட்டது.
- இந்தக்குழு, அமித்ஷாவின் தலைமையின்கீழ் ஜூலை 2019-ல் மாற்றியமைக்கப்பட்டது.
- இக்குழு, நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன், மனிதவள மேம்பாட்டு அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் மற்றும் பெண்கள் - குழந்தை மேம்பாட்டு அமைச்சர் ஸ்மிருத்தி ராணி ஆகியோரை உறுப்பினர்களாகப் பெற்றுள்ளது.
- பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகம், 2013-ல் பெண்களின் பாலியல் தொந்தரவு மற்றும் பணியிடம் (தடுப்பு மற்றும் தீர்வு) சட்டத்தை அறிமுகப்படுத்தியிருந்தது.
- இந்தச்சட்டம், அரசு அலுவலகங்கள், தனியார்துறை, அரசுசாரா நிறுவனங்கள் மற்றும் அமைப்புச்சாரா துறை ஆகிய அனைத்திற்கும் பொருந்தும்.
- 1997-ல் உச்சநீதிமன்றத்தால் விசாகா வழிகாட்டுதல்களின் அடிப்படையில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் மீது இந்த 2013 ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டது.
- இச்சட்டம், பணியிடங்களில் பெண்களுக்கான பாலியல் தொந்தரவை தடுப்பதற்கு முதலாளிக்கு அதிக பொறுப்புள்ளது என்று கூறுகிறது.
- இந்த பரிந்துரைகள், 2012-ல் நிர்பையா நிகழ்வை தொடர்ந்து அமைக்கப்பட்ட நீதிபதி ஜே.எஸ் வர்மா குழுவின் பரிந்துரைகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ளும்.
- இந்த 2013 ஆம் ஆண்டுச்சட்டம், இப்படிப்பட்ட நிகழ்வுகளில் முதலாளிகள் உரிய முறையில் செயல்படாவிட்டால் அவர்களுக்கு அதிகபட்சமாக ரூ.50000 மட்டுமே தண்டமாக விதிக்கக்கூடிய குறைபாடுகளை பெற்றுள்ளது.

❖ **மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம், வெளிநாடுகளுக்கு சென்றுவரும் ஒரு பிரயாணியின் மதுப்பாட்டில்கள் மற்றும் சிகரெட் பாக்கெட்டுகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு முன்மொழிந்துள்ளது.**

- இந்த முன்மொழிவு, ரூ.50000 மதிப்புடைய பொருள்கள் மற்றும் பரிசுகளுக்கு மட்டுமே தற்போது சுங்கவரி விதிப்பதில்லை என்பதையும் குறைக்க முற்படுகிறது.
- குறைக்க முற்படுகிறது

❖ **துணை ஜனாதிபதி எம்.வெங்கையா நாயுடு ஜனவரி 21-ல் ஆந்திரபிரதேசத்திலுள்ள நெல்லூரில் பாரம்பரிய தெலுங்கில்**

**ஆய்வுகளுக்கான சீர்மை மையத்தை** (Centre of Excellence for Studies in Classical Telugu - CESCT) **தொடங்கிவைப்பார்.**

- அவர், மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் நிசாங் முன்னிலையில் இம்மையத்தை தொடங்கி வைப்பார்.
- இதுவரையில், இந்த CESCT மைசூரில் இந்திய மொழிகளின் மத்திய நிறுவத்தில் (Central Institute of Indian Languages) செயல்பட்டுக் கொண்டிருந்தது.

❖ **பரிக்ஷா பே சார்ஷா 2020** (Pariksha Pe Charcha 2020) **என்ற பிரதமர் நரேந்திர மோடியின் ஒருங்கிணைப்பு திட்டத்தின் மூன்றாவது நிகழ்வு, நாடுமுழுவதும் மற்றும் வெளிநாடுகளிலும் உள்ள மாணவர்களுடன் ஜனவரி 20-ல் காலை 11 மணிக்கு நடைபெற்றது.**

- இந்த உரை மற்றும் விவாதத்தின் போது, தேர்வுநேரங்களில் மாணவர்கள் மனஅழுத்தத்தைப் போக்கக் கூடிய பல்வேறு வழிகளை பிரதமர் அறிவுறுத்தினார்.
- அவர், மாணவர்களுக்கு காலத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார் மற்றும் கல்வி செயல்பாடுகள் மற்றும் கல்விசாரா செயல்பாடுகளை எவ்வாறு சமநிலைப்படுத்த வேண்டும் என்பதையும் விளக்கினார்.
- அவர், தோல்விகளைப்பற்றி பயப்படக்கூடாத என்றும் மாணவர்களுக்கு அறிவுறுத்தினார்.
- வகுப்பு 9 முதல் 12 வரையுள்ள கிட்டதட்ட 2.6 லட்சம் மாணவர்கள் கட்டூரைப் போட்டியில் பங்கேற்றார்கள், அவர்களில் டெல்லி நிகழ்வில் பங்கேற்பதற்கு 2000 பேர் தேர்வு செய்யப்பட்டன.
- அந்தக் கூட்டத்தில் 50 மாற்றுத்திறனாளிகளும் பங்கேற்றனர்.
- பரிக்ஷா பே சார்ஷா என்பது தேர்வு மனஅழுத்தப் பிரச்சனைமீது மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்படுகின்ற ஒரு வருடாந்தர நிகழ்வாகும்.

❖ **இந்திய பிரதமர் நரேந்திரமோடி மற்றும் நேபாள் பிரதமர் கே.பி.சர்மா ஒலி ஆகிய இருவரும் இணைந்து காணொளி காட்சி மூலமாக ஜனவரி 21-ல் ஜோக்பானி – பிராத்நகர் எல்லை மீதான இரண்டாவது ஒருங்கிணைந்த சோதனை மையத்தை** (Integrated Check-Post – ICP) **தொடங்கி வைத்தார்கள்.**

- இந்த சோதனை மையம் ரூ.140 கோடிக்கான இந்திய நிதியுதவிடன் கட்டப்பட்டது மற்றும் இதன் பரப்பு 260 ஏக்கராகும்.
- அண்டையர் முதன்மைக் கொள்கை (Neighbourhood First Policy) அடிப்படையில் இந்தக் கட்டுமானத்திற்கு இந்தியா உதவியுள்ளது.
- 2018-ல் Raxaul – Birgunj ICP யைத் தொடர்ந்து இது இரண்டாவது ICP ஆகும்.
- தற்போது, இந்தியாவில் 7 ஒருங்கிணைந்த சோதனை மையங்கள் உள்ளன.

❖ **பிரேசில் நாட்டின் அதிபர்** Jair Bolsonaro **இந்த வருட குடியரசுதின அணிவகுப்பில் தலைமை விருந்தினராக இருப்பார்.**

- இந்தியாவிற்கு நான்கு நாட்கள் அலுவலக விஜயத்திற்கு இந்தியாவுடன் இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தத்தில் (Bilateral Investment Treaty – BIT) கையொப்பமிடுவார்.
- இந்தியாவுடன் இவ்வித முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் முதல் நாடாக பிரேசில் முன்வந்துள்ளது.
- உலகில் சர்க்கரையை அதிகம் உற்பத்திசெய்து ஏற்றுமதிசெய்யும் நாடு பிரேசில் ஆகும்.

❖ **வரலாற்றில் முதல்முறையாக** CBSE **இந்த கோடைக்கால வாரிய தேர்வுகளில் தொடங்கும் கற்றல் அல்லது செயல்பாட்டு கணிதத்தில் கடினத்தை உணரும் மாணவர்களுக்காக கால்குலேட்டர்களின் பயன்பாட்டை அனுமதிப்பதற்கு தீர்மானித்துள்ளது.**

❖ **ஹவாயின் மௌனா கீ என்ற தளத்தில் அமைவதற்கு முன்மொழியப்பட்ட உலகின் மிகப்பெரிய தொலைநோக்கி திட்டத்திலிருந்து விலகுவதற்கு இந்தியா முற்படுகிறது.**

- ஹவாயில் மிகப்பெரிய தொலைநோக்கி கட்டப்படுவதில் இந்தியா ஒரு பங்குதாரராக உள்ளது.
- TMT அல்லது 30மீ தொலைநோக்கி (Thirty Metre Telescope - TMT) என்று அறியப்படுகின்ற ஒரு கூட்டு முயற்சியில் (Joint venture – JV) அமெரிக்கா, கனடா, சீனா, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய ஐந்து நாடுகள் ஈடுபட்டுள்ளன.

❖ **நித்தியானந்தா என்ற தன்னைத்தானே கடவுளாக்கிக் கொண்ட சச்சரவைப் பற்றிய தகவலை அறியும் விதத்தில் பன்னாட்டு காவல்** (Interpol) **ஒரு** blue Corner **அறிவிப்பை வெளியிட்டுள்ளது.**

❖ **மத்திய அமைச்சரவை, ஜனவரி 22-ல், 6 தொழில்நுட்ப தேசிய நிறுவனங்களுக்கான** (National Institutes of Technology – NITs) **நிரந்தர வளாகங்களை அமைப்பதற்காக ரூ.4371.90 கோடிக்கு ஒப்புதலளித்துள்ளது.**

- அருணாச்சலபிரதேசம், நாகாலாந்து, மிசோராம், மேகாலயா, புதுச்சேரி மற்றும் டெல்லியில் தலா 1 தொழில்நுட்ப தேசிய நிறுவனத்தை அமைப்பதற்காக பிரதமர் நரேந்திரமோடியை தலைவராகக் கொண்ட அமைச்சர்குழுக் கூட்டம் இதற்கு ஒப்புதலளித்தது.
- இந்த தொழில்நுட்ப தேசிய நிறுவனங்கள் 2009-ல் அமைக்கப்பட்டதிலிருந்து தற்காலிக கட்டுமான அமைப்புகளுடன் செயல்பட்டு வருகின்றன.

❖ **பாரம்பரிய கிறிஸ்தவ பாடலான** "Abide with me" **என்பது இந்த வருடத்தின்** Beating Retreat ceremony **க்கான இசை அட்டவணையில் இல்லை.**

❖ **மத்திய அரசாங்கம் ஜனவரி 27-ல் போரோலான்டின் தேசிய ஜனநாயக முன்னணி** (National Democratic Front of Boroland – NDFB) **மற்றும் அகில போடோ மாணவர்கள் சங்கம் ஆகியவவை உள்ளடங்க நான்கு**

**பிரிவுகளுடன் ஒரு ஒட்டுமொத்த அமைதி ஒப்பந்தத்தில் கையொப்பமிடவுள்ளது.**

❖ **இந்தியா, புதுடெல்லியில் 71வது குடியரசுதின அணிவகுப்பின்போது, ராஜ்பாத்தில் மிஷன்சக்தி என்ற உலகறியும் கருவியாக செயற்கைகோள் எதிர்** (Anti Satellite – A-SAT) **ஏவுகணை திறன்சக்தியை காட்சிப்படுத்தியது.**

- மிஷன் சக்தி என்பது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் (DRDO) உருவாக்கப்பட்டதாகும்.

❖ AIMS, **சண்டிகரிலுள்ள** PGIMER –**க்கு அடுத்து நுரையீரல் மாற்ற வழிமுறையை அளிப்பதற்கு நாட்டிலுள்ள இரண்டாவது பொது நிறுவனமாகவும் மற்றும் தலைநகரிலுள்ள முதல் மருத்துவமனையாகவும் முன்வந்துள்ளது.**

❖ **மத்திய அரசு, போடோலேன்டின் தேசிய ஜனநாயக முன்னனி** (National Democratic Front of Bodoland – NDFB) **மற்றும் அகில போடோ மாணவர்கள் சங்கம்** (All Bodo Students Union – ABSU) **ஆகிய அனைத்து பிரிவுகளும் உள்ளடங்கிய போடோ பிரதிநிதிகள் மற்றும் அஸ்ஸாம் அரசாங்கம் ஆகியவற்றுடன் ஒரு முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது.**

- இந்த வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தம் போடோ நிலப்பரப்பு பகுதிகள் மாவட்டத்தை (Bodo Territorial Areas District – BTAD) மாற்றியமைப்பதற்கு ஒரு ஆணையத்தை அமைக்கவும் வழிவகை செய்கிறது.
- அஸ்ஸாமிலுள்ள இந்த BTAD பகுதியில் Kokrajhar, Chirang, Baksa மற்றும் Udalguri ஆகிய நான்கு மாவட்டங்கள் உள்ளன.
- அப்பகுதி, போடோ நிலப்பரப்பு பிராந்தியம் (Bodo Territorial Region) என மறுப்பெயரிடப்படும்.
- போடோ மொழி அஸ்ஸாமில் ஒரு இணை அலுவலக மொழியாக அறிவிக்கப்படும்.
- இந்த ஒப்பந்தம், 4000 மக்கள் இறந்துள்ள 34 வருட ஆயுதம் ஏந்திய மற்றும் ஜனநாயக இயக்கத்திற்கு முடிவுகட்டியுள்ளது.
- இந்தப் பகுதியில், இந்த ஒப்பந்தத்தினால் விளையாட்டுப் பல்கலைக்கழகம், மத்திய பல்கலைக்கழகம், இரயில்வேப் பெட்டி தொழிற்சாலை, இந்திய விளையாட்டு ஆணையகம், புற்றுநோய் மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி, கால்நடை கல்லூரி, ஹோட்டல் மேலாண்மை நிறுவனம், இந்திராகாந்தி தேசிய பழங்குடியினர் பல்கலைக்கழகம், போடோ நினைவு அருங்காட்சியகம், தொழில்நுட்ப தேசிய நிறுவனம் போன்றவைகள் அமைக்கப்படவுள்ளன.

❖ **The Centre – offered for sale its 100% stake in Air India and AI Express – instead of 76% in the first attempt – and the entire 50% it owns in ground handling company AISATS, which is a joint**

**venture with the Singapore – based ground handling company SATS Limited.**

❖ **10 இந்திய ஈரநிலத் தளங்கள், ராம்சார் ஒப்பந்தத்தின்கீழ்** (Ramsar Convention) **பன்னாட்டு முக்கியத்துவத் தரத்தைப் பெறுவதற்கு அறிவிக்கப்பட்டுள்ளன.**

- இந்த 10 தளங்கள் மகாராஷ்டிராவில் ஒன்றும், பஞ்சாப்பில் மூன்றும் மற்றும் உத்திரபிரதேசத்தில் ஆறும் உள்ளன.
- அந்த 10 ஈரநிலத் தளங்கள் பின்வருமாறு:
  1. நந்தூர் மாதமேஸ்வர் பறவை சரணாலயம் (மகாராஷ்டிரா)
  2. பியாஸ் பாதுகாப்பு ரிசர்வ் (பஞ்சாப்)
  3. கேசோபூர் - மியானி சமுதாய ரிசர்வ் (பஞ்சாப்)
  4. நங்கால் வனவிலங்கு சரணாலயம் (பஞ்சாப்)
  5. நவாப்கஞ்ச் பறவை சரணாலயம் (உத்திரபிரதேசம்)
  6. பார்வதி ஆக்ரா பறவை சரணாலயம் (உத்திரபிரதேசம்)
  7. சாமன் பறவை சரணாலயம் (உத்திரபிரதேசம்)
  8. சார்சை நவார் ஏரி (உத்திரபிரதேசம்)
  9. சமாஸ்பூர் பறவை சரணாலயம் (உத்திரபிரதேசம்)
  10. சான்டி பறவை சரணாலயம் (உத்திரபிரதேசம்
- ராஜஸ்தான், கேரளா, ஒடிசா, மத்தியபிரதேசம், ஹிமாச்சலபிரதேசம், அஸ்ஸாம், மேற்குவங்கம், ஜம்மு மற்றும் காஷ்மீர், ஆந்திரபிரதேசம், மணிப்பூர், குஜராத், தமிழ்நாடு மற்றும் திரிபுராவில் ஏற்கனவே ராம்சார் தளங்கள் உள்ளன.
- ராம்சார் ஒப்பந்தம் அல்லது ஈரநிலங்கள் மீதான ஒப்பந்தம் என்பது உலகம் முழுவதும் சிலக்குறிப்பிட்ட ஈரநிலங்களில் சுற்றுச்சூழல் தன்மையை பாதுகாப்பதற்கு உரிய அரசாங்கங்களுக்கிடையேயான ஒரு உலக ஒப்பந்தமாகும்.
- ராம்சார் என்ற நகரம் ஈரானில் அமைந்துள்ளது. இந்நகரத்தில் இந்த ஒப்பந்தம் 1971-ல் நடந்ததால் இதை ராம்சார் ஒப்பந்தம் என்கிறோம்.

❖ **ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக பதிப்பகம்** (Oxford University Press – OUP) **2019 ஆம் ஆண்டின் ஆக்ஸ்போர்டு இந்தி வார்த்தையாக** "Samvidhaan" **(அரசியலமைப்பு) என்பதை அறிவித்துள்ளது.**

❖ **அஸ்ஸாமின் அட்டவணை, இந்த வருட குடியரசுதின அணிவகுப்பில் பங்கேற்ற 16 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிடையே மிகவும் சிறந்தது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

- உத்திரபிரதேசம் மற்றும் ஒடிசா ஆகிய இரண்டு மாநிலங்கள் இணைந்து இரண்டாவது சிறந்த அட்டவணைக்கான வெற்றியாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

❖ **பிரதமர் நரேந்திரமோடியைத் தலைவராகக் கொண்ட மத்திய அமைச்சரவை, ஜனவரி 29-ல் 1971 ஆம் ஆண்டின் கர்ப்பகால மருத்துவ முடிவு சட்டத்தை** (Medical Termination of Pregnancy Act, 1971) **திருத்துவதற்கு முற்படும் கர்ப்பகால மருத்துவ முடிவு (திருத்தம்) மசோதா 2020-க்கு ஒப்புதலளித்துள்ளது.**

- முதல்முறையாக சட்டப்படி கருக்கலைப்பு செய்வதை ஷா குழு (Shah Committee) பரிந்துரைத்திருந்தது.

❖ **நான்கு நாள் குடியரசுதின விழாக்களின் முடிவை குறிக்கும் விதத்தில் ஜனவரி 29-ல்** Beating Retreat ceremony **நடத்தப்பட்டது.**

❖ **முதன் முதலாக சாலைப் போக்குவரத்து அமைச்சகம்,** IRDA **என்ற காப்பீட்டு முறைப்படுத்தும் அமைப்புடன் ஆலோசித்து மோட்டார் வாகனங்களுக்கான மூன்றாம் நபர் காப்பீட்டுச் சந்தாவை அறிவிக்கும்.**

❖ **முப்பணிகள் (தரைப்படை, கப்பற்படை மற்றும் விமானப்படை), அவைகளின் பணியாளர்களுக்கு ஒரு பொதுவான சுங்கவரி விதிவிலக்கு அடையாள அட்டையை வழங்குவதற்கு முடிவுசெய்துள்ளன.**

- 1991 ஆம் ஆண்டின் இந்திய சுங்கம் (தரைப்படை மற்றும் விமானப்படை) சட்டத்தின்படி, (Indian Toll (Army and Air Force) Act, 1901) அவர்கள் அதற்கு தகுதியுடையவர்கள் ஆவார்.

## பன்னாடு

❖ **ஜனவரி 1, 2020 முதல்** "reef-toxic" Sunscreens **ஐ தடைசெய்வதற்கு ஒட்டுமொத்த உலகில் முதலாவதாக முன்வந்துள்ள நாடு பாலவ்** (Palau) **ஆகும்.**

- மேற்கத்திய பசுபிக் தீவு நாடான பாலவ் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கத்துடன் இம்முயற்சியை மேற்கொண்டுள்ளது.

❖ **உலக சுகாதார அமைப்பு** (World Health Organisation – WHO), **"செவிலியர் மற்றும் மருத்துவச்சி வருடமாக" 2020 ஐ தேர்வு செய்துள்ளது.**

- இந்த வருடம், பிளாரன்ஸ் நைட்டிங்கேளின் 200 வது பிறந்த நாளை பெருமைப்படுத்தும் விதத்தில் கூறப்படுகிறது.
- மேலும், உலக சுகாதார அமைப்பும் 2020-ல் உலகின் முதலாவது செவிலிய அறிக்கையை தொடங்கும்.
- இந்த வருடம், உலக அளவில் சுகாதார அதிகப்பரப்பை சாதிப்பதற்கு உலக சுகாதார அமைப்பு தீர்மானித்துள்ளது.
- பிளாரன்ஸ் நைட்டிங்கேள், க்ரீமிய யுத்தத்தின் போது காயப்பட்ட வீரர்களுக்கான முகாம்களை அமைத்த ஒரு ஆங்கில சமுகசீர்திருத்தவாதியாவார்.
- அவர், தன்னுடைய கையில் விளக்கேந்தி காயமடைந்த போர் வீரர்களை இரவு முழுதும் கண்காணித்ததால் "கைவிளக்கேந்திய காரிகையார்" (The Lady with the Lamp" என்றழைக்கப்பட்டார்.
- ஒவ்வொரு வருடமும் மே 1-ல் பன்னாட்டு செவிலியர் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினம் செவிலியர்களின் பன்னாட்டு கவுன்சிலால் கொண்டாடப்படுகிறது.

❖ **லுய்சியானா** (Louisiana) **மாநிலத்தின் நியூ ஆர்லின்சிலுள்ள** (New Orleans) **அமெரிக்க பேச்சுவழக்கு சமூக** (American Dialect Society) **மொழியியல் அறிஞர்கள் ஜனவரி 4-ல் இந்த வருட 10 வருட வார்த்தையாக** (Word of the Decade) **"அவர்கள்"** (They) **என்பதை தேர்வு செய்துள்ளனர்.**

- ''அவர்கள்'' என்ற வார்த்தை 2015-ல் தேர்வு செய்யப்பட்டது.
- இந்த அமைப்பு 1990 களின் 10 ஆண்டிற்கான வார்த்தையாக 'Web' என்பதையும் மற்றும் 2000 களின் 10 ஆண்டிற்கான வார்த்தையாக 'Google' என்பதையும் தேர்வு செய்திருந்தது.
- ஏற்கனவே, அவர்கள் என்ற வார்த்தையை வருடத்தின் வார்த்தையாக (Word of the year) மெரியம் வெப்ஸ்டர் அகராதி தேர்வு செய்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

❖ **பின்லாந்தின் புதிய பிரதமர் சன்னா மேரின், பணியாளர்கள் தங்களுடைய குடும்பங்களுடன் அதிகநேரத்தை செலவிடுவதை ஊக்குவிப்பதற்கு வாரத்தில் நான்கு பணிநாட்களை முன்மொழிந்துள்ளார்.**

- சமூக ஜனநாயக கட்சியின் தலைவரான சன்னா மேரின் பின்லாந்தில் ஒரு சிறந்த கூட்டணி அமைத்து டிசம்பரில் பிரதமரானார்.
- இவர், உலகில் மிக இளமையான சேவைபுரியும் தேசிய தலைவராக உள்ளார்.
- மேலும், ஒரு நாளைக்கு 8 மணிநேரத்திற்கு பதிலாக 6 மணிநேரம் தரமாக பணிசெய்வதையும் அவர் அறிவித்துள்ளார்.
- இதேபோல, 2015-ல் ஸ்வீடனில் 6 மணிநேர வேலைக்கொள்கை கொண்டுவரப்பட்டது.

❖ **பிரிட்டனின் பொதுச்சபை இந்த மாதமுடிவில் ஐரோப்பிய யூனியனிலிருந்து நாட்டின் வெளியேற்றத்திற்கு ஒப்புதலளிக்கும் ஒரு மசோதாவை இயற்றியுள்ளது.**

- 28 உறுப்பு நாடுகள் கொண்ட ஐரோப்பிய யூனியனிலிருந்து விலகுவதற்கு, இந்த அவையிலுள்ள மொத்த உறுப்பினர்களில் 330 பேர் மசோதாவிற்கு ஆதரவாகவும் மற்றும் 231 பேர் எதிராகவும் வாக்களித்து அம்மசோதா நிறைவேறியது.
- எனவே, ஜனவரி 31-ல் ஐரோப்பிய யூனியனிலிருந்து விலகும் முதல் நாடு பிரிட்டனாகும்.
- இந்த முயற்சி, டிசம்பர் 12, 2019-ல் பிரதமர் போரிஸ் ஜான்சனின் சிறந்த வெற்றியைத் தொடர்ந்து சிறப்பாக்கப்பட்டுள்ளது.
- அத்தேர்தலில் பொதுச்சபைக்கான மொத்தமுள்ள 650 இடங்களில் போரிஸ் ஜான்சனின் கன்சர்வேட்டிவ் கட்சி 364 இடங்களைப் பெற்றது.
- போரிஸ் ஜான்சனின் முக்கியமான தேர்தல் பிரச்சாரமாக பிரக்சிட் (Brexit) இருந்தது.
- இங்கிலாந்து மக்கள் ஜூன் 24, 2016-ல் வரலாற்று முக்கியத்துவமிக்க மக்கள் வாக்கெடுப்பில் ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் விலகுவதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.
- இறுதியாக, இங்கிலாந்து ஐரோப்பிய யூனியனிலிருந்து ஜனவரி 31-ல் விலகுகிறது.

❖ **ஆஸ்திரேலிய அரசாங்கம், அந்தப்பகுதியில் ஏற்பட்ட மிகப்பரந்த அளவிலான புதர்த்தீயைத் தொடர்ந்து ஒரு அவசரநிலை வனவிலங்கு மீட்புத் திட்டத்திற்கு ஆஸ்திரேலிய $50 மில்லியனை ஒதுக்கியுள்ளது.**

❖ **பாகிஸ்தானிலுள்ள லாகூர் உயர்நீதிமன்றம் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர்வேஷ் முஜரப்பிற்கு சென்ற மாதம் சிறப்பு நீதிமன்றம் வழங்கிய மரண தண்டனை தீர்ப்பு அரசியலமைப்பிற்கு எதிரானது என்று அறிவித்துள்ளது.**

- மூன்று உறுப்பினர் கொண்ட லாகூர் உயர்நீதிமன்ற அமர்வு, முஜரப்பிற்கு எதிரான வழக்கில் சட்டத்தின் உரிய வழிமுறை பின்பற்றப்படவில்லை என்று ஒருமனதாக தீர்ப்பளித்தது.
- 2010-ல் இயற்றப்பட்ட அரசியலமைப்பின் 18-வது திருத்தம் வேண்டுவதன்படி, அமைச்சரவையின் ஒப்புதலில்லாமல் முஜரப்பை குற்றப்படுத்திய சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டது.
- எனவே, கூட்டாட்சி அரசாங்கத் தத்துவத்தின்படி, அவரின் மரணதண்டனை ரத்து செய்யப்படுகிறது.
- முஜரப் தனது மரண தண்டனையை எதிர்த்து டிசம்பர் 27, 2019-ல் சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து லாகூர் உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்தார்.
- முன்னதாக, டிசம்பர் 17, 2019-ல் இஸ்லாமபாத்திலுள்ள சிறப்பு நீதிமன்றம் அவருக்கு மரணதண்டனை அளித்தது.
- அவருக்கு எதிரான நாட்டுத்துரோக வழக்கு முன்னாள் பிரதமர் நவாப் செரிப்பால் 2013-ல் தொடங்கப்பட்டது.

❖ **வூகன் நகரில் ஒரு புதிய வைரசின் வெளிப்பாட்டால் ஏற்பட்ட நிமோனியாவிற்கிணங்க (Pneumonia) ஒரு இறப்பை சீனா அறிவித்துள்ளது.**

- சீன விஞ்ஞானிகளின் கருத்துப்படி, புதிய வைரஸ் என்பதற்கு கொரோனா (Corona) வைரஸ் என்பதாகும்.
- காய்ச்சல் மற்றும் இரைப்பை குடல் பிரச்சனைகள் இந்த வைரஸ்க்கு காரணமாக உள்ளது.
- அதன் மேற்பரப்பில் புரோட்டோசன்களை வைரஸ் பெற்றிருப்பதால் அது சக்கரவர்த்தியின் மகுடம்போல காட்சியளிக்கிறது. எனவே, அது கொரோனா வைரஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இந்த வைரஸ் மனிதர்களை மட்டுமின்றி கால்நடைகள், நாய்கள், பன்றிகள், ஒட்டகங்கள் மற்றும் பறவைகளையும் தாக்குகிறது.
- 2002-2003-ல் கொரோனா வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த சார்ஸ் வைரஸ் (Sars virus) தாக்கியதால் உலகில் 700 பேர் கொல்லப்பட்டன.
- இந்த சார்ஸ் வைரஸ் சீனாவில் தோன்றின.
- கொரோனா வைரஸ் குடும்பத்திற்கு சொந்தமான மற்றொரு மிகவும் மோசமான வைரஸ் MERS (Middle East Respiratory Syndrome) ஆகும். அதற்கு இதுவரை எவ்வித தடுப்பு மருந்தும் கண்டுபிடிக்கப்பட்டதில்லை.
- இந்த MERS வைரஸ் அரேபியன் தீபகற்பத்தில் கண்டறியப்பட்டு முதன்முதலாக 2012-ல் சவுதி அரேபியாவில் கண்டறியப்பட்டது.

❖ **ஜப்பான் ஜனவரி 16-ல் ஒரு புதிய கொரோனா வைரஸின் முதல் நிகழ்வை அறிவித்துள்ளது.**

❖ **மத்திய சீனாவில் வூகனில் வெளிப்பட்டுள்ள நிமோனியாவான புதிய கொரோனா வைரஸிற்கு இரண்டாவது நபர் பலியாகியுள்ளார் என்று சீனா அறிக்கையளித்துள்ளது.**

❖ **சீன அரசின் நிபுணர் குழு தலைவரான ஒரு சுவாச நிபுணர்** ZhongNanshan, **சீனாவில் மனிதனுக்கு மனிதன் பரவும் ஒரு புதிய கொரோனா வைரஸ் வெளிபாட்டை ஊர்ஜிதம் செய்துள்ளார்.**

❖ **இரண்டாம் எலிசபெத் ராணி, ஜனவரி 31-ல் ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் விலகும் பிரக்சிட் மசோதாவிற்கு ஜனவரி 23-ல் தனது முறைப்படியான ஒப்புதலை வழங்கினார்.**

❖ **பாகிஸ்தான் ஜனவரி 23-ல்** Ghaznavi **என்ற தரையின் மேற்பரப்பிலிருந்து மேற்பரப்பை கண்டம் விட்டு கண்டம் தாக்கும் ஏவுகணை தொடக்கப் பயிற்சியை நடத்தியது.**

❖ **இங்கிலாந்து உலகம் முழுவதுமுள்ள மேல்மட்ட விஞ்ஞானிகள், ஆய்வாளர்கள் மற்றும் கணிதவியலர்களை ஈர்ப்பதற்கு ஒரு வரையறுக்கப்படாத** Fast-track **விசாவை தொடங்கியுள்ளது.**

❖ **அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் ஜனவரி 28-ல் இஸ்ரேலி – பாலஸ்தீனிய சச்சரவை தீர்க்கும் நோக்கமுடைய மத்திய கிழக்கு அமைதி திட்டத்தை** (Middle East Peace Plan) **தொடங்கிவைத்தார்.**

## மாநாடுகள் மற்றும் உச்சிமாநாடுகள்

❖ **மத்திய சுற்றுலா அமைச்சக்தின் இணை அமைச்சர் பிரகலாத் பட்டேல், காத்மண்டுவின் மிகப்பெரிய பொருளாதார ராஜதந்திர திட்டமான** 'Visit Nepal 2020' **-ன் தொடக்கவிழாவில் இந்தியாவைப் பிரதிபலிப்பார்.**

- இந்த முயற்சி நேபாளின் சுற்றுலா பொருளாதாரத்தை அதிகரிக்கவும் மற்றும் அதன்மீது முதலீடு மற்றும் கட்டுமாணத்தை உருவாக்கவும் நோக்கம் கொண்டுள்ளது.
- இந்த தொடக்கவிழாவில், இந்தியா மற்றும் சீனாவிலிருந்து அதிக பிரதிநிதிகளை உள்ளடக்கி குறைந்தது 40 நாடுகளிலிருந்து வரும் அமைச்சர்கள் மற்றும் தூதுவர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, பிப்ரவரி 2020-ல் இந்தியா, நேபாளம் மற்றும் சீனா ஆகிய மூன்று நாடுகளும் முதலாவது முத்தரப்பு சுற்றுலா மேம்பாட்டுக் கூட்டத்தை நடத்தவுள்ளார்கள்.
- பிரதம மந்திரி நரேந்திரமோடி தனது 2014 விஜயத்தின் போது, காட்மண்டிலுள்ள பசுபதிநாத் கோவில் மற்றும் வாரனாசியிலுள்ள விஸ்வநாத் கோவில் ஆகிய இரண்டின் இணைப்பு பற்றியும், அதன் மூலம்

இந்து சுற்றுலா மையத்தை ஏற்படுத்தி இருநாடுகளை இணைக்கவும் குறிப்பிட்டிருந்தார்.

- அதேபோல, சீனப் பிரதமர் ஜி.ஜின்பின் அக்டோபர் 11-ல் தனது நேபாள் விஜயத்தின் போது, சீனாவையும் புத்தர் பிறந்த இடமான லும்பினியையும் இணைப்புச்சாலைகள் மற்றும் கட்டுமாணத்தின் மூலமாக இணைப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

❖ Lai Haraoba **திருவிழா ஜனவரி 2-ல் திரிபுராவில் தொடங்கியது.**

- இது, "Umang Lai" என்று அழைக்கப்படுகின்ற புனித மரங்களை தொழக்கூடிய விதத்தில் மெயிட்டை இன மக்களால் கொண்டாடப்படுகிறது.
- மெயிட்டை (Meitei) இன மக்கள் "Meiteilon" என அழைக்கப்படும் மொழியைப் பேசுகின்றனர். இம்மொழி 22 மொழிகள் அடங்கியுள்ள இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் உள்ளடங்குகிறது.
- இவ்வின மக்கள் அஸ்ஸாம் திரிபுரா, மணிப்பூர் மற்றும் மேகாலயா மாநிலங்களில் பரந்து காணப்படுகின்றனர் மற்றும் மியான்மர் மற்றும் வங்காளதேசம் போன்ற நாடுகளிலும் வாழ்கின்றனர்.
- இவர்கள் பெரும்பாலும் இயற்கை கூறுகளான மலைகள், நீர், தீ போன்றவற்றை பிரதானமாக தொழுகின்றன.
- இந்த திருவிழா மே மாதத்திலும் மணிப்பூர் மாநிலத்தில் கொண்டாடப்படுகிறது.

❖ **ஐந்தாவது ஆசிய பசுபிக் பழப்பூச்சி** (Drosophila) **ஆராய்ச்சி மாநாடு ஜனவரி 6 2020-ல் பூனேயில் தொடங்கப்பட்டது.**

- இம்மாநாடு, ஜனவரி 6, 2020 மற்றும் ஜனவரி 10, 2020 இடையே அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சியின் இந்திய நிறுவனத்தால் (Indian Institute of Science Education and Research) நடத்தப்படுகிறது.
- இந்த நிகழ்வு உலகளவில் பழப்பூச்சி ஆராய்ச்சியாளர்கள் அதிகளவு சந்தித்ததற்கான சாட்சியமாகும்.
- இதுபோன்ற பழப்பூச்சிகள் நான்கு குரோமோசோம்களின் 15,500 ஜீன்களை பெற்றிருக்கும். ஆனால், மனிதர்கள் 23 குரோமோசோம்களில் 22,000 ஜீன்களை மட்டுமே பெற்றுள்ளன.

❖ **உள்துறை அமைச்சர் அமித்ஷா புதுடெல்லியில் 6-வது தீவு மேம்பாட்டு முகமை கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.**

- இந்த கூட்டம், தீவுகள் பசுமை மேம்பாட்டை உயர்ந்த அளவு அடைவதற்கு நோக்கம் கொண்டுள்ளது.
- இக்கூட்டம், தீவு மேம்பாட்டு முகமையால் (Island Development Agency – IDA) மேற்கொள்ளப்படும் தீவுகளின் முழுமையான மேம்பாட்டு திட்டத்தின் வளர்ச்சியை ஆய்வு செய்தது.
- முதல்கட்டத்தில், இத்திட்டம் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் நான்கு தீவுகளிலும் மற்றும் இலட்சத்தீவுகளின் ஐந்து தீவுகளிலும் அமுல்படுத்தப்படும்.
- இரண்டாவது கட்டத்தில், அந்தமான் நிக்கோபார் தீவுகளின் 12 தீவுகளிலும் மற்றும் இலட்சத்தீவுகளில் 5 தீவுகளிலும் இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

- மேலும், போர்ட் ப்லேயர் நகரம் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளின் 7 தீவுகளும் ஜூன் 2020-க்குள் கடல்வழி ∴பைபர் கேபிள் மூலமாக எண்ணியல் ரீதியாக இணைக்கப்படவுள்ளன.

❖ **பிரதமர் நரேந்திரமோடி, ஜனவரி 14-ல் ரைசினா பேச்சுவார்த்தையின் தொடக்க கூட்டத்தொடரில் கலந்துக் கொள்ளவுள்ளார்.**

- இது, டெல்லியிலுள்ள உற்றுநோக்கு ஆய்வு நிறுவனத்துடன் இணைந்து வெளிவிவகார அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- இதில் பல நாட்டு முன்னாள் தலைவர்கள் பங்கு பெற்றனர்.
- இந்த வருடம் இந்த பேச்சு வார்த்தையின் தலைப்பு "Navigating the alpha century" ஆகும்.
- இந்த ரைசினா பேச்சு வார்த்தை ஜனவரி 14, 2020 மற்றும் ஜனவரி 16, 2020 இடையே புதுடெல்லியில் நடத்தப்படவுள்ளது.
- 2016-ல் இது தொடங்கப்பட்டதிலிருந்து பிரதானமாக இந்தியாவின் புவி-அரசியல் மற்றும் புவி-பொருளாதாரம் பற்றியதாகவே கருதப்படுகிறது.
- இந்த மாநாட்டிற்கு "ரைசினா மலைகள்" (Raisina Hills) என்பதற்கு பிறகு பெயர் வைக்கப்பட்டுள்ளது. இது இந்திய அரசாங்கம் மற்றும் ராஷ்ட்டிரபதி பவனின் இருப்பிடமாகும்.
- இந்த பேச்சுவார்த்தை Shangri-La dialogue வரிசையில் வடிவமைக்கப்பட்டது.

❖ **உலக எதிர்கால ஆற்றல் உச்சிமாநாடு** (World Future Energy Summit) **ஜனவரி 16-ல் அபுதாபியில் தொடங்கியது.**

- இம்மாநாடு ஜனவரி 16 வரை நான்கு நாட்கள் கூட்டப்படும்.
- இம்மாநாட்டில் 170 நாடுகளைச் சேர்ந்த 33,500 பேர் பங்கேற்கின்றனர்.
- இம்மாநாட்டின் முக்கிய கருத்து 'உலக நுகர்வு, உற்பத்தி மற்றும் முதலீடு மீது மறுசிந்தனை (Rethinking Global Consumption, Production and Investment)' என்பதாகும்.
- இம்மாநாடு ஐந்து பிரதான தூண்கள் என்று சொல்லக்கூடிய ஆற்றல், நீர், சூரியசக்தி, கழிவு மற்றும் சீர்மிகு நகரங்கள் போன்றவற்றின் மீது கவனம் செலுத்துகிறது.
- இம்மாநாடு 2011 லிருந்து அபுதாபியில் ஒரு வருடாந்திர நிகழ்வாக நடத்தப்படுகிறது.

❖ **வர்த்தக மற்றும் தொழில்துறைக்கான மத்திய அமைச்சர் பியூஸ் கோயல், ஸ்விட்சர்லாந்தின் தாவோசில் நடைபெறும் 50வது உலகப் பொருளாதார அமைப்பில்** (World Economy Forum) **இந்திய பிரதிநிதிகளுக்கு தலைமை வகிப்பார்.**

- உலக பொருளாதார அமைப்பின் நான்கு நாள் நிகழ்வு ஜனவரி 21, 2020-ல் தொடங்குகிறது.
- அந்நிகழ்வு, 117 நாடுகளிலிருந்து 50-க்கும் மேற்பட்ட அரசுத்தலைவர்களின் பங்கேற்பு இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்த 2020 ஆம் ஆண்டின் உலகப் பொருளாதார அமைப்பின் மையக்கருத்து "ஒரு இணக்கமான மற்றும் நிலைநிறுத்து உலகிற்கான

பங்குதாரர்கள் (Stakeholders for a Cohesive and Sustainble World)"ஆகும்.

- இந்த உலகப் பொருளாதார அமைப்பு ஸ்விட்சர்லாந்தின் ஜெனிவாவில் அதன் தலைமையிடத்துடன் 1971-ல் ஏற்படுத்தப்பட்டது.

❖ **நேபாளம், சாகர்மாதா பேச்சுவார்த்தைக்காக மற்ற அரசாங்கங்கள் மற்றும் அரசுகளின் தலைவர்களுடன் இந்தியா மற்றும் பாகிஸ்தானிய பிரதமர்களை வரவேற்றுள்ளது.**

- ஏப்ரல் 2 லிருந்து தொடங்கும் மூன்று நாள் மிகப்பெரிய ராஜதந்திர பேச்சுவார்த்தை நேபாளில் நடைபெறவுள்ளது.
- இந்நிகழ்வு நேபாளின் சமீபத்திய வரலாற்றில் முக்கிய இடம் வகிக்கிறது.
- சார்க் அமைப்பு நாடுகளிலிருந்தும் பல தலைவர்கள் பங்கேற்பர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்நிகழ்வு, நவீன உலகத்திற்கு காலநிலை மாற்றத்தின் அச்சுறுத்தலின் மீதான கவனமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖ **உலக உருளைக்கிழக்கு தொடர்பான மாநாடு குஜராத்தில் ஜனவரி 28 மற்றும் ஜனவரி 31, 2020 –க்கிடையே நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.**

❖ **50வது உலகப் பொருளாதார அமைப்பு** (World Economic Forum - WEF) **ஜனவரி 21 முதல் 24 வரை ஸ்விட்சர்லாந்திலுள்ள டாவோசில் கூட்டப்பட்டது.**

- இந்த நிகழ்வில் உலகம் முழுவதுமுள்ள 117 நாடுகளிலிருந்து 50க்கும் மேற்பட்ட அரசுத்தலைவர்கள் பங்கேற்றார்கள்.
- அமெரிக்க ஜனாதிபதி டெனால்டு டிரம்ப், இளம் சுற்றுச்சூழல் ஆர்வலர் கிரிட்டா துன்பெர்க் மற்றும் ஐரோப்பிய ஆணையத்தலைவர் உர்சுலா வான் டர் லேயன் ஆகியோர் தொடக்கவிழாவில் உரையாற்றினர்.
- வர்த்தகம் மற்றும் தொழிலுக்கான மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் இந்திய பிரதிநிதிகளுக்கு தலைமை வகித்தார்.
- உலகப் பொருளாதார அமைப்பில் தொடங்கப்பட்ட ஒரு ட்ரில்லியன் மரங்கள் திட்டத்தில் அமெரிக்கா இணையும்.
- இந்த அமைப்பு ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தில் டாவோசில் வருடாந்திர கூட்டத்தை நடத்துகிறது.

❖ **ராஜஸ்தான் முதலமைச்சர் அசோக் கேலாட் ஜனவரி 23, 2020-ல் 2020 ஆம் ஆண்டின் ஜெய்ப்பூர் இலக்கியத் திருவிழாவை தொடங்கி வைத்தார்.**

- இது 13 ஜெய்ப்பூர் இலக்கியத் திருவிழாவாகும்.
- இந்த ஐந்துநாள் திருவிழாவில் நாட்டின் மற்றும் உலகின் பலபகுதிகளிலிருந்து 250-க்கும் மேற்பட்ட பேச்சாளர்கள் பங்கேற்றனர்.

❖ **கங்கா – வோல்கா பேச்சுவார்த்தை** (Ganga – Volga Dialogue) **சமீபத்தில் ரஷ்யா மற்றும் இந்தியா இடையே புதுடெல்லியில் நடத்தப்பட்டது.**

## உச்சநீதிமன்ற தீர்ப்பு

❖ **9 நீதிபதி அரசியலமைப்பு அமர்வு, ஜனவரி 13, 2020 லிருந்து சபரிமலை ஐயப்பன் கோவிலுக்குள் 10 முதல் 50 வரையுள்ள பெண்கள் நுழைவது தொடர்பான மறு ஆய்வு விண்ணப்பங்களை விசாரிக்க தொடங்கும்.**

- செப்டம்பர் 28, 2018-ல் 5 நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு அமர்வு சபரிமலைக் கோவிலுக்குள் அனைத்து வயது பெண்களும் நுழைவதற்கு அனுமதியளித்திருந்தது.
- முந்தைய தீர்பிற்கு எவ்வித தடையும் விதிக்காமல் 5 நீதிபதிகள் கொண்ட மற்றொரு அரசியலமைப்பு அமர்வு 3-2 என்ற பெரும்பான்மையில் நவம்பர் 14, 2019-ல் 7 நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாற்றியது.
- பின்னர், அது தற்போதுள்ள 9 நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு அமர்வுக்கு மாற்றப்பட்டுள்ளது.

❖ **டாட்டா சன்சின் செயல்தலைவராக சைரஸ் பல்லோன்ஜி மிஸ்ரியை மீண்டும் பணியமர்த்தலாம் என்ற தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் டிசம்பர் 18 மீதான தீர்ப்பிற்கு உச்சநீதிமன்றம் தடைவிதித்துள்ளது.**

- உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.ஏ.பாப்தே, நீதிபதிகள் பி.ஆர்.ஹாவை மற்றும் சூரிய காந்த் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரணைத் தொடங்கிய 10 நொடிகளில் தடையாணை வழங்கியது.

❖ **9 நீதிபதிகள் அடங்கிய உச்சநீதிமன்ற அமர்வு, சபரிமலை பெண்கள் நுழைவு வழக்கில் பெண்களின் அடிப்படை உரிமைகளை பாதிக்கும் நம்பிக்கை அடிப்படையான வழக்காறுகளின் பிரதான பிரச்சனையை ஆய்வு செய்யவுள்ளது.**

- இந்த அமர்வு, தலைமை நீதிபதி எஸ்.ஏ.பாப்தே மற்றும் நீதிபதிகள் ஆர்.பானுமதி, அசோக்பூஜன், எல்.நாகேஸ்வர ராவ், எம்.எம். சந்தானகவுடர், எஸ்.அப்துல் நஜீர், ஆர்.சுபாஷ் ரெட்டி, பி.ஆர். காவை மற்றும் சூர்யகாந்த் ஆகியோரை உள்ளடக்கியுள்ளது.
- உச்சநீதிமன்றம் தனது செப்டம்பர் 28, 2018 தீர்ப்பில் அனைத்து வயதுப் பெண்களும் சபரிமலை கோவிலில் நுழையலாம் என்று தீர்பளித்திருந்தது.
- நவம்பர் 14, 2019-ல் அப்போதைய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ரஞ்சன்கோஹாயால் தலைமை வகிக்கப்பட்ட ஐந்து நீதிபதிகள் அமர்வு 3-2 என்ற பெரும்பான்மையில் செப்டம்பர் 28, 2018-ன் தீர்ப்பை தொடரவும் மற்றும் இவ்வழக்கை 7 நீதிபதிகள் அமர்வுக்கு மாற்றவும் தீர்பளித்தது.
- பின்னர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.ஏ.பாப்தேவை தலைவராகக் கொண்ட ஏழு நீதிபதிகள் அமர்வு 9 நீதிபதிகள் அமர்விற்கு மாற்றியது.
- அதன் அடிப்படையில் தலைமை நீதிபதி எஸ்.ஏ.பாப்தே ஒரு 9 நீதிபதிகள் அமர்வை அமைத்துள்ளார்.

❖ **இணையதளம் பயன்படுத்தும் உரிமை என்பது அடிப்படை உரிமையாகும் என்று இந்திய உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.**

- ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் அரசியலமைப்பு விதி 370 எடுக்கப்பட்டதை தொடர்ந்து கடந்த ஐந்து மாதங்களாக அங்கே இணையதள சேவைகள் தடைசெய்யப்பட்டுள்ளது.
- அரசியலமைப்பு விதி 19 (1)-ன் கீழ் இணையதளம் என்பது அரசியலமைப்பு ரீதியாக பாதுகாக்கப்பட்டு பேச்சுரிமை மற்றும் நடைமுறை

உரிமை போன்றவற்றை உட்படுத்தியதாகும் என்று உச்சநீதிமன்ற அமர்வு தீர்ப்பளித்தது.

❖ **இந்திய உச்சநீதிமன்றம், பணியாளர்கள் சேமநல நிதிகள் மற்றும் இதர அம்சங்கள் சட்டத்தின்கீழ்** (Employees Provident Funds and Miscellaneous Provisions Act) **சமூக பாதுகாப்பு பயன்பாடுகளுக்கு தற்காலிக பணியாளர்கள் உரியவர்கள் ஆவர்.**

- அச்சட்டத்தின் பிரிவு 2 (f) ன் படி, பணியாளர்களை தற்காலிக அல்லது ஒப்பந்த பணியாளர்கள் என்றும் நிரந்தர பணியாளர்கள் என்றும் வேறுபடுத்தக்கூடாது என்று நீதிபதிகள் U U லலித் மற்றும் இந்து மல்கோத்ரா ஆகிய இருவரை உள்ளடக்கிய அமர்வு இவ்வாறு தீர்ப்பளித்துள்ளது.

❖ **உச்சநீதிமன்றம், ஜனவரி 20-ல் நிதிச்சிக்கலை சந்தித்துள்ள ரியல்எஸ்டேட் பூதாகர யூனிடெக் நிறுவனத்தை தனது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ளும் மத்திய அரசின் முன்மொழிவை ஏற்றுக்கொண்டுள்ளது.**

- மத்திய அரசு, 3000 மக்களுக்கு அதிகமாக முதலீடு செய்துள்ள வீட்டுவசதி திட்டங்களை மேலாண்மை செய்யும் அமைப்பை அதன் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர ஓய்வுபெற்ற IAS அலுவலர் யுத்வீர் சிங் மாலிக் என்பவரை தலைவராகக் கொண்ட ஒரு புதிய இயக்குநர்கள் குழுவை அமைப்பதற்கு முடிவு செய்துள்ளது.
- அதற்கு, உச்சநீதிமன்ற நீதிபதிகள் D.Y. சந்திரசூட் மற்றும் எம்.ஆர்.ஷா ஆகிய இருவர் அடங்கிய அமர்வு ஒப்புதலளித்தது.

❖ **உச்சநீதிமன்றம், கட்சித்தாவல் தடைச்சட்டத்தை பலப்படுத்தும் நோக்கத்தில், மனம் அல்லது அதிகாரத்திற்காக கட்சிமாறும் ஒரு** M.P **அல்லது** M.L.A **க்கு எதிரான தகுதியிழப்பு செயல்பாடுகளை முடிப்பதற்கு சபாநாயகருக்கான அதிகபட்ச காலக்கெடுவாக மூன்று மாதங்களை வரையறுத்துள்ளது.**

- உச்சநீதிமன்றம், 10வது அட்டவணையின்கீழுள்ள வழக்குகளை தீர்ப்பதற்கு ஒரு நிரந்தரமான தீர்ப்பாயத்தை அமைக்கும் அரசியலமைப்பு திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு பாராளுமன்றத்திற்கு பரிந்துரையும் செய்துள்ளது.
- இந்த தீர்ப்பாயம், கட்சிதாவியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய மக்களவை மற்றும் மாநிலச் சட்டசபைகளின் சபாநாயகர்களுக்கு துணையாகவும் மற்றும் ஒரு தலைமை சமரசவாதியாகவும் செயல்படும்.
- ஓய்வுபெற்ற உச்சநீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்ற நீதிபதிகள் இந்த நிரந்தர தீர்ப்பாயத்தின் தலைவராக நியமிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அச்செயல்பாடுகள் பாரபட்சமின்றி சுதந்திரமாக முடித்து வைக்கப்படும்.
- நீதிபதிகள் RF நாரிமான், அணிருதா போஷ் மற்றும் வி.ராமசுப்ரமணியம் ஆகியோர் அடங்கிய அமர்வு, தகுதி நீக்கத்திற்கு உரிய நபர்கள் அவையில் ஒருநாள் கூட அமர்வதற்கு அனுமதிக்கக்கூடாது என்று கூறியது.
- இந்த தீர்ப்பு 2017-ல், மணிப்பூர் காங்கிரஸ் MLA டி. சியாம்குமார் பி.ஜே.பி கட்சிக்கு மாறி மந்திரிப் பதவியை ஏற்றது தொடர்பாக வந்துள்ளது.

- உச்சநீதிமன்றம், தகுதியிழப்பு தொடர்பாக நான்கு வாரங்களுக்குள் முடிக்க வேண்டும், தவறினால் உச்சநீதிமன்றம் தலையிடும் என்று மணிப்பூர் சபாநாயகரை கேட்டுக் கொண்டுள்ளது.

❖ **உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அமர்வு, அரசியலமைப்பின் விதி 370-ன் கீழ் ஜம்மு மற்றும் காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து ஒழிக்கப்பட்டது மற்றும் அவற்றை இரண்டு யூனியன் பிரதேசங்களாக சீர்திருத்தியது ஆகிய சர்ச்சைக்குரிய அரசியலமைப்பு நிகழ்வுகளை ஏழு நீதிபதிகள் அமர்வுக்கு விடப்போவதாக அறிவித்துள்ளது.**

- நீதிபதிகள் N.V ரமணா, சஞ்சை கே.கவுல், பி.சுபாஷ் ரெட்டி, பி.ஆர்.காவை மற்றும் சூரியகாந்த் ஆகிய ஐவர் அடங்கிய அமர்வு இப்பிரச்சனைகளை முடிப்பதற்கு ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்விடம் ஒப்படைத்துள்ளது.

❖ **உச்சநீதிமன்றம், அரசாங்கத்தின் கருத்துகளை கேட்காமல் குடியுரிமை திருத்தச்சட்டத்திற்கு தடைவழங்க மறுத்துவிட்டது.**

❖ **உச்சநீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அமர்வு, நேரடி நியமனம் மற்றும் பதவி உயர்வில் இயலாத நபர்களுக்கு 3 சதவீத இடஒதுக்கீடு கொடுக்கப்பட வேண்டும் என்பதை ஊர்ஜிதம் செய்தது.**

- இந்த அமர்விற்கு நீதிபதி ஆர்.எ.ப். நாரிமான் தலைமை வகித்தார். நீதிபதிகள் அணிருதாபோஷ் மற்றும் வி.ராமசுப்ரமணியம் ஆகியோர் அந்த அமர்வின் உறுப்பினர்களாவார்.
- இயலாமையுடனான நபர்கள் சமவாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுபங்கேற்பு) சட்டம் 1995-ன்படி (The Persons with Disabilities (Equal Opportunities, Production of Rights and Full Participation) Act, 1995) அவர்கள் இந்த இடஒதுக்கீட்டிற்கு தகுதியானவர்கள் ஆவர் என்று அந்த அமர்வு தீர்ப்பளித்தது.

❖ **உச்சநீதிமன்றம், சோதனை அடிப்படையில் பொருத்தமான இந்திய வாழ்விடத்திற்குள் நமிபியாவிலிருந்து ஆப்பிரிக்க சிறுத்தைகளை அறிமுகப்படுத்துவதற்குரிய முன்மொழிதல் மீதான அதன் ஏழு வருட தடையை தளர்த்தியுள்ளது.**

- இந்த தீர்ப்பு, இந்திய சிறுத்தை எண்ணிக்கையை கூட்டுவதற்கான நோக்கத்தில் வழங்கப்பட்டுள்ளது.
- இந்த மிருகம் இந்தியாவில் அழிந்து வரும் மிருகமாக 1952-ல் அறிவிக்கப்பட்டது.

❖ **உச்சநீதிமன்றம், நாட்டில் சட்டத்திற்கு புறம்பான கைதுகள் இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கும் வேளையில், முன்ஜாமீன் வழங்கும் நீதிமன்றங்களின் தன்னிச்சை அதிகாரம் தடுக்கப்படக் கூடாது மற்றும் இவ்வித முன்ஜாமீன் விசாரணையின் முடிவுவரைகூட வழங்கப்படலாம் என்று ஜனவரி 29-ல் தீர்ப்பளித்தது.**

- நீதிபதி அருண் மிஸ்ராவை தலைவராகக் கொண்ட ஐந்து நீதிபதிகள் அரசியலமைப்பு அமர்வு இத்தீர்ப்பை வழங்கியது.

- அந்த அமர்விலுள்ள மற்ற நீதிபதிகள் பேனர்ஜி, வினீத் சரண், எம்.ஆர்.ஷா மற்றும் எஸ்.இரவீந்திர பட் ஆகியோர் தலைமையுடன் இணைந்து ஒருமனதாக தீர்ப்பளித்தனர்.
- இந்த முன்ஜாமீன் அம்சம், 1973-ல் குற்றநடைமுறைச் சட்டம் (Criminal Procedure Court – CrPC) திருத்தப்பட்ட போது, பிரிவு 438-ன் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்த அமர்வின் கருத்துப்படி, இவ்வித முன்ஜாமீன் விசாரணையின் முடிவு வரை தொடர்ந்து கொண்டிருக்கும்.

# இந்தியாவும் அண்டைநாடுகளும்

❖ **வெளி விவகாரங்களுக்கான மத்திய அமைச்சகம், இந்த வருடம் இந்தியாவில் கூட்டப்படும் சாங்காய் கூட்டுறவு அமைப்பின் (SCO) அரசுத்தலைவர்கள் கவுன்சில் கூட்டத்தில் பங்கேற்பதற்கு பாக்கிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் வரவேற்கப்படுவார் என்று அறிவித்துள்ளது.**

❖ **கானா நாடு, இந்திய அரசாங்கத்தின் உஜ்வாலா திட்டத்தைப் பின்பற்றி வாங்கக்கூடிய அளவில் ஏழை குடும்பங்களுக்கான தூய சமையல் எரிவாயுவை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளது.**

❖ **மாலத்தீவில் தேவைப்படும் ஒரு அவசர நிலைக்கு பொறுப்பளிக்கும் வகையில் ஜனவரி 23-ல் பூனேயிலுள்ள இந்திய சேரும் (Serum) நிறுவனத்திடமிருந்து ஆண்களுக்கான 30,000 அளவுகள் அம்மைநோய் தடுப்பு மருந்தை இந்தியா வழங்கியுள்ளது.**

- மாலத்தீவை அம்மைநோய் இல்லாத நாடு என்று உலக சுகாதார அமைப்பு அறிவித்தப்பின்பு, மூன்று வருடத்திற்குள் இந்த நிகழ்வு வெளிப்பட்டுள்ளது.
- கடந்தவாரத்தில் நான்கு நிகழ்வுகள் நேர்மறையானது என்று சோதனை செய்யப்பட்டுள்ளது.

❖ **இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பிரேசில் அதிபர் Jair Bolsonaro ஆகிய இருவரும் ஜனவரி 25-ல் நடத்திய பேச்சுவார்த்தையின் போது, இருநாடுகளுக்கிடையே 15 ஒப்பந்தங்கள் கையொப்பமாயின.**

- பிரேசில் அதிபர் ஜெய்ர் பால்சோனரோ ஜனவரி 26-ல் ராஜ்பாத்தில் நடைபெறும் குடியரசுதின அணிவகுப்பில் தலைமை விருந்தினராக இருப்பார்.
- இராணுவம் மற்றும் பாதுகாப்பில் கூட்டுறவு, வர்த்தகம் மற்றும் முதலீடு, விவசாயம் மற்றும் எரிசக்தி, சிவில் விமானப் போக்குவரத்து, எரிசக்தி, சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம் போன்றவற்றை பலப்படுத்தக் கூடிய சிறப்பு இலக்குகளுடனான ஒரு செயல்திட்டம் மற்றும் ஒரு கூட்டு அறிக்கையில் இரண்டு நாடுகளும் கையொப்பமிட்டன.
- இரு நாடுகளுக்கிடையேயான 15 ஒப்பந்தங்கள் பிரதானமாக எண்ணெய் மற்றும் எரிவாயு, கனிம வளங்கள், பாரம்பரிய மருத்துவம், கால்நடை பராமரிப்பு, உயிரி எரிசக்தி மற்றும் வர்த்தகம் மற்றும் முதலீடு போன்றவை உள்ளடங்கும்.

❖ **அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப், தேதிகள் முறையாக இன்னமும் அறிவிக்கப்படாவிட்டாலும், பிப்ரவரி 24 மற்றும் 26 இடையே இந்தியாவிற்கு விஜயம் செய்வதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.**

- இது அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பின் முதலாவது இந்திய விஜயமாகும்.
- அந்த விஜயத்தின் போது, இருதரப்புகளும் வர்த்தக ஒப்பந்தங்களை முடிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.
- முன்னதாக, 2015-ல் குடியரசுதின தலைமை விருந்தினராக முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை இந்திய பிரதமர் நரேந்திரமோடி வரவேற்றிருந்தார்.

❖ **இந்தியா மற்றும் பிரான்சு ஆகிய இரண்டு நாடுகளும் அருங்காட்சியகங்கள், கலாச்சார தன்மைகள் மற்றும் ஆராய்ச்சிகளில் இணைந்து செயல்படும்.**

❖ **ஐரோப்பிய பாராளுமன்றம் ஜனவரி 29-ல் விவாதத்திற்கு பின்புகூட இந்தியாவின் குடியுரிமை திருத்தச் சட்டத்தின் மீதான வாக்கெடுப்பை மார்ச் மாதத்திற்கு தள்ளிவைக்க முடிவு செய்தது.**

❖ **இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் நைஜீரிய அதிபர் முகமது இசா.ீபோ ஆகிய இருவரும் இணைந்து நைஜரிலுள்ள மகாத்மா காந்தி பன்னாட்டு மாநாட்டு மையத்தை தொடங்கி வைத்தனர்.**

- அம்மையம், 2019-ல் தேசத்தந்தை மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாள் விழாவைக் கொண்டாடியது.
- நைஜீருக்கு விஜயம் செய்த இந்தியாவின் முதல் வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஆவார்.

## குழுக்கள்

❖ **மத்திய லட்சஒழிப்பு ஆணையம்** (Central Vigilance Commission - CVC) **மாநிலஅரசு நடத்தும் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் ரூ.50 கோடிக்கு மேல் வங்கி மற்றும் நிதித் தில்லுமுல்லு வழக்குகளில் முதல்நிலை ஆய்வை மேற்கொள்ளும் ஒரு ஆலோசனை வாரியத்தை அமைத்துள்ளது.**

- இந்த ஐந்து உறுப்பினர் கொண்ட குழு, முன்னாள் இந்திய வங்கியின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மற்றும் முன்னாள் லட்ச ஒழிப்பு ஆணையர் T.M பாசினால் தலைமை வகிக்கப்படும்.

❖ **மத்திய அமைச்சரவை ஜனவரி 22-ல் மற்ற பின்நிலை வகுப்பினரின்** (OBC) **துணை பிரிவுகளை ஆய்வு செய்வதற்கு அமைக்கப்பட்ட ஆணையத்தின் பதவிக்காலத்தை ஆறுமாதம் நீட்டிப்பதற்கு ஒப்புதலளித்துள்ளது.**

- இந்த ஆணையம், டெல்லி உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி ஜி.ரோகினியால் தலைமை வகிக்கப்படுகிறது.
- பிரதமரை தலைவராகக் கொண்ட அமைச்சரவை இந்த ஆணையத்தின் பதவிக்காலத்தை ஜுலை 31, 2020 வரை நீட்டிப்பதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- அது, ஆணையத்தின் மற்ற கூறுகளுக்கும் ஒப்புதலளித்துள்ளது.

- இந்த ஆணையம் மத்திய அட்டவணையிலுள்ள OBC ன் பல்வேறு பிரிவுகளை ஆராய்ந்து அறிக்கை சமர்பிக்கும்.
- இந்த ஆணையம் முதன்முதலாக 12 வார காலத்துடன் 2017-ல் நியமிக்கப்பட்டது.

# நியமனங்கள்

❖ **பேராசிரியர் சுரேஷ் சந்திர ஷர்மா தேசிய மருத்துவ ஆணையத்தின்** (National Medical Commission – NMC) **தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

- அவர், தற்போது டெல்லியிலுள்ள மருத்துவ அறிவியல்கள் அகில இந்திய நிறுவனத்தில் (AIIMS) ENT துறையின் தலைவராக உள்ளார்.
- ஏற்கனவே, அவர் மத்திய அரசாங்கத்தால் ஜோத்பூரிலுள்ள AIIMS ன் தலைவராக நியமிக்கப்பட்டார்.
- மேலும், டாக்டர் ராகேஷ்குமார் வாட்ஸ் என்பவர் அந்த ஆணையத்தின் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவ்விருவரும் மூன்று வருடங்களுக்கோ அல்லது 70 வயது அடையும் வரையோ இதில் எது முதலில் வருகிறதோ அதுவரை அவர்கள் பதவி வகிக்கலாம்.
- இந்த தேசிய மருத்துவ ஆணையம், ஊழல் மிகுந்த இந்திய மருத்துவ கவுன்சிலை (Medical Council of India - MCI) எடுத்துவிட்டு நாட்டின் புதிய மருத்துவ முறைப்படுத்தும் அமைப்பாக திகழ்கிறது.
- இந்த தேசிய மருத்துவ ஆணையம், மத்திய சுகாதார அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட மற்றும் பேராசிரியர் ரஞ்சித்ராய் சௌத்ரியால் தலைமை வகிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.
- ஆகஸ்ட் 8, 2019-ல் தேசிய மருத்துவ ஆணைய மசோதா பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது, 1956 ஆம் ஆண்டின் இந்திய மருத்துவ கவுன்சில் சட்டத்தை எடுத்துவிடுகிறது.

❖ **ஹைதாம் பின் தாரிக் அல்-சேட், நீண்டகால ஆட்சியாளர் கபூஸ் பின் சயித் அல்-சேட் -ன் இறப்பிற்கு பின்பு ஓமனின் புதிய சுல்தானாக பதவி ஏற்றுக் கொண்டார்.**

- கபூஸ் பின் சயித் என்பவர் 1970 லிருந்து ஓமன் நாட்டின் சுல்தானாக ஆண்டார் மற்றும் அல்-சேட் அவையின் எட்டாவது சுல்தானாவார்.
- அவர் அரேபிய உலகின் மிகநீண்டகாலம் பணிபுரிந்த ஆட்சியாளராவார்.
- ஓமன் நாட்டின் சுல்தான் பதவி என்பது நாட்டின் உயர்மட்ட பதவியாகும் மற்றும் உயர்மட்ட முடிவுகளை எடுக்கக்கூடிய நிலையாகும். மற்ற நாடுகளின் பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், நிதியமைச்சர், வெளியுறவு அமைச்சர் மற்றும் நாட்டிலுள்ள முப்படைகளின் தலைவர் போன்ற பதவிகளுக்கு இவர் சமமானவராவார்.

❖ **மைக்கேல் தேபாப்ரட்டா பத்ரா என்பவர் இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய துணை ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

- மூன்று வருடத்திற்கான பத்ராவின் பதவிக்கு காபினெட்டின் நியமனக்குழு (Appointments Committee of the Cabinet – ACC) ஒப்புதலளித்துள்ளது.
- பத்ரா என்பவர் ஹார்வார்டு பல்கலைக்கழக ஆய்வாளர் ஆவார் மற்றும் அவர் 1985-ல் இந்திய ரிசர்வ் வங்கியில் சேர்ந்தார்.
- இந்திய ரிசர்வ் வங்கி தற்போது மூன்று துணை ஆளுநர்களைப் பெற்றுள்ளது.

❖ **மூத்த** IPS **அலுவலர் ஏ.பி.மகேஷ்வரி ஜனவரி 13-ல் மத்திய ரிசர்வ் காவல் படையின்** (CRPF) **ன் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

- இவர் 1984 ஆம் ஆண்டின் உத்திரபிரதேச மாநில IPS அலுவலராவார்.
- அவர் தற்போது உள்துறை அமைச்சகத்தின் தனி செயலராகப் (உள்நாட்டு பாதுகாப்பு) பணிபுரிந்துக் கொண்டிருக்கிறார்.
- அவர் பிப்ரவரி 28, 2021-ல் பணி ஓய்வுபெறவுள்ளார்.

❖ **மூத்த இந்திய வழக்கறிஞர் ஹரிஷ் சால்வ் என்பவர் இங்கிலாந்து மற்றும் வால்ஸ் ஆகியவற்றின் நீதிமன்றங்களுக்கான அரசியாரின் வழக்கறிஞராக** (Queen's Council-QC) **நியமிக்கப்பட்டுள்ளார்.**

❖ **பிரதமருக்கான முன்னாள் முதன்மைச்செயலர் நிரிபேந்திர மிஸ்ரா என்பவர் நேரு நினைவு அருங்காட்சியகத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

❖ **முன்னாள் சுகாதார அமைச்சர் ஜகத் பிரகாஷ் நட்டா என்பவர் 21 மாநிலங்களிலுள்ள கட்சி அலகுகள் மற்றும் பாராளுமன்ற கட்சி ஆதரவுடன் ஜனவரி 20-ல் பி.ஜே.பி –ன் 11வது தலைவராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

- அவர், 5 ½ வருடம் பி.ஜே.பி தலைவர் பதவி வகித்த உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் இடத்தில் தலைவராக வந்துள்ளார்.

❖ **வங்கி மற்றும் நிதி மோசடிகளுக்கான ஆலோசனை வாரியத்தில் ஒரு உறுப்பினராக** A.D.M. Chavali **யை மத்திய ஊழல் தடுப்பு ஆணையம்** (CVC) **நியமித்துள்ளது.**

- இவர், இந்திய ஓவர்சீஸ் வங்கியின் (IOB) ஓய்வுபெற்ற செயல்துறை இயக்குநராக இருந்தவர்.
- இந்த ஆலோசனை வாரியம், முன்னாள் லஞ்ச ஒழிப்பு ஆணையரும் மற்றும் முன்னாள் இந்திய வங்கியின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநருமான டி.எம்.பாசினால் தலைமை வகிக்கப்படுகிறது.

❖ **மத்திய அமைச்சர் அர்ஜுன் முன்டா இந்திய ஈட்டி எறிதல் கழகத்தின்** (Archery Association of India – AAI) **புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.**

- அவர் இப்பதவியில் நான்கு வருடங்களுக்கு பணிபுரிவார்.
- இந்த தேர்தல் மூன்று உற்றுநோக்கர்களின் முன்னிலையில் நடத்தப்பட்டது. அவர்கள், தலா ஒன்று வீதம் உலக ஈட்டி எறிதல் கழகம்,

விளையாட்டுத்துறை அமைச்சகம் மற்றும் இந்திய ஒலிம்பிக் கழகம் ஆகியவற்றிலிருந்து வந்தவர்களாவார்.

- இந்த தேர்தலில் ஒட்டுமொத்தமாக 26 மாநிலங்கள் பங்கேற்றனர்.
- இந்தியாவில் மொத்தம் 31 AAI –ன் மாநில கழகங்கள் உள்ளன.
- ஹிமாச்சல் பிரதேசம், பஞ்சாப், உத்திரபிரதேசம், பீகார் மற்றும் ஜம்மு மற்றும் காஷ்மீர் போன்ற மாநிலங்கள் இந்த தேர்தலில் பங்கேற்கவில்லை.
- அர்ஜுன் முன்டா என்பவர் ஜார்கண்ட் மாநிலத்தில் மூன்று முறை முதலமைச்சராக இருந்தவர்.
- AAI ன் செயற்குழுவானது தலைவர், பொதுச்செயலளர், மூத்ததுணைத்தலைவர், 8 துணைத்தலைவர்கள், 7 இணைச்செயலர்கள் மற்றும் ஒரு நிதியாளரைப் பெற்றுள்ளது.

❖ **மூத்த இராஜதந்திரி தரன்ஜிட் சிங் சாந்து அமெரிக்காவுக்கான அடுத்த இந்திய தூதுவராக இருப்பார்.**

- அவர் ஜனவரி 29 லிருந்து வெளியுறவுச் செயலராகப் பொறுப்பேற்கவுள்ள ஹர்ஷ் ஸ்ரீரிங்லாவை இடமாற்றுகிறார்.
- சாந்து தற்போது ஸ்ரீலங்காவுக்கான இந்திய தூதுவராக உள்ளார்.

## பாதுகாப்பு

❖ **இராணுவ விவகாரங்கள் துறை** (Department of Military Affairs – DMA) **என்பது பாதுகாப்பு அமைச்சகத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.**

- ஜனவரி 1, 2020-ல் பாதுகாப்பு அலுவலர் புதிய தலைவராக (Chief of Defence Staff - CDS) ஜெனரல் பிபின்ரவாத் பதவியேற்று இத்துறைக்கு தலைமை வகிப்பார்.
- CDS ஆன பிபின்ரவாத் பாதுகாப்பு அமைச்சகத்தில் ஒரு செயலராகவும் பணிபுரிவார்.
- சென்றவாரம் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட புதிய வழிகாட்டுதல்களின்படி, CDS பாதுகாப்பு அமைச்சருக்கு முதன்மை இராணுவ ஆலோசகராக செயல்படுவார் மற்றும் பணியாளர் தலைவர்கள் குழுவின் (Chiefs of Staff Committee) நிரந்தர தலைவராகவும் பணிபுரிவார்.
- CDS ஒரு புதிய உச்ச தொப்பி, தோல்பட்டை பதக்கங்கள், பெல்ட் பக்கில் மற்றும் ஒரு புதிய மகிழுந்து கொடியையும் பெற்றிருப்பார்.
- இந்த இராணுவ விவகாரத்துறை பாதுகாப்பு அமைச்சகத்தின் ஐந்தாவது துறையாகும். ஏற்கனவே, பாதுகாப்புத் துறை (Department of Defence), பாதுகாப்பு உற்பத்தித்துறை (Department of Defence Production), பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறை (Department of Defence Research and Development) மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலத்துறை (Department of Ex-serviceman Welfare) ஆகிய நான்கு துறைகள் பாதுகாப்பு அமைச்சகத்தில் உள்ளன.
- இந்த வழிகாட்டுதல்களின்படி, DMA மூன்று படைகளின் விவகாரங்களை கவனிக்கும்.

❖ **பாதுகாப்பு அலுவலர் தலைவர்** (Chief of Defence Staff – CDS) **ஜெனரல் பிபின் ரவாத், 5 லிருந்து 6 வருடங்களில் முதலாவது புதிய** theatre command **அமைக்கப்படுவதற்கான ஒரு சாலை வரைபடத்தை தயாரிக்கவுள்ளார்.**

- முன்மொழியப்பட்ட இந்த தியேட்டர் கமேண்ட் முப்படைகளையும் ஒருங்கிணைக்கக் கூடிய ஒரு அமைப்பாக உள்ளது.
- தற்போது, இந்தியாவின் இப்படிப்பட்ட ஒரே மையம் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் அமைந்துள்ளது.
- அது, ஒரு செயல்தலைவரின் கீழ் முப்பணிகளின் அனைத்து சொத்துகள் மற்றும் மனிதசக்தி போன்றவற்றை பெற்றிருக்கும்.
- அது 2001-ல் தொடங்கப்பட்டது. தற்போது, மேற்கு எல்லைப்பகுதியில் பாகிஸ்தானை ஒட்டியப் பகுதியில் ஒரு மையமும் மற்றும் சீன எல்லைப்பகுதியில் ஒரு மையமும் அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

❖ **பாதுகாப்பு அலுவலர் தலைவர்** (CDS) **ஜெனரல் பிபின் ரவாத், ஒரு வான் பாதுகாப்பு படை** (Air Defence Command – ADC) **உருவாக்கத்திற்கான ஒரு திட்டத்தை தயாரிப்பதற்கு அவருடைய முப்பணி ஒருங்கிணைந்த பாதுகாப்பு அலுவலர்களை** (Integrated Defence Staff- IDS) **வலியுறுத்தியுள்ளார்.**

- ADC –க்கான முன்மொழிவு ஜூன் 30, 2020-க்குள் தயாரிக்கப்பட வேண்டும்.

❖ **The Army – is on the process of creation of agile and self-contained integrated battle groups (IBGs) for better theatre commands**

❖ **7.5 லட்சத்திற்கும் அதிகமான** AK-203 **தாக்கு துப்பாக்கிகளின் கொள்முதலுக்காக வெகுவிரைவில் ரஷ்யாவுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா கையெப்பமிடவுள்ளது.**

❖ **இந்தியா ஜனவரி 7 லிருந்து கோவாவின் மேற்கத்திய கடற்கரையின் மீது ஓமன் நாட்டுடன்** "Naseem–Al-Bahr" **(கடல் காற்று) கப்பற்படை பயிற்சியை நடத்தவுள்ளது.**

❖ **மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப்படை** (Central Industrial Security Force-CISF) **படைகளின் நலனுக்காக 2020 ஆம் ஆண்டை நகர்வு ஆண்டு** (Year of Mobility) **என்று அனுசரிக்கிறது.**

- இப்படை, அரசு மற்றும் தனியார்வசமுள்ள விமான நிலையங்கள், அணுசக்தி நிலையங்கள், சுரங்கங்கள், தொழிற்சாலைகள், மின்னணு நிலையங்கள் போன்றவற்றை பாதுகாக்கிறது.
- இது, CISF சட்டத்தின்கீழ் 1968-ல் ஏற்படுத்தப்பட்டது. பின்னர், இச்சட்டத்தில் 1983-ல் திருத்தம் கொண்டுவரப்பட்டது.
- இது, 1,60,000 வீரர்களுக்கு அதிகமாகப் பெற்று உலகிலேயே மிகப்பெரிய பாதுகாப்பு முறைமையாக உள்ளது.

❖ **கடல் பாதுகாவளர்கள் என்ற ஒரு ஒன்பது நாள் கப்பற்படை பயிற்சி ஜனவரி 6, 2020-ல் சீனா மற்றும் பாக்கிஸ்தான் கப்பற்படைகள் இடையே வடக்கு அரபிக் கடலில் தொடங்கப்பட்டது.**

❖ **The naval variant of the Tejas light combat aircraft (LCA) – Mk1-successfully conducted an "arrested landing" for the first time on the deck of 44,000 – tonne aircraft carrier INS Vikramaditya on January 11.**

❖ **அன்னி பெசன்ட் மற்றும் அம்ரித் கௌர் எனப் பெயரிடப்பட்டுள்ள இரண்டு இந்திய கடலோரக் காவல்படை கப்பல்கள்** (Indian Coast Guard Ships – ICGS) **ஜனவரி 12-ல் கொல்கத்தாவில் பாதுகாப்பு செயலர் அஜய் குமாரால் தொடங்கி வைக்கப்பட்டது.**

- அன்னி பெசன்ட் என்பது சென்னையை அடிப்படையாகவும் மற்றும் அம்ரித் கௌர் என்பது ஹால்டியாவை அடிப்படையாகவும் பெற்றிருக்கும்.

❖ **ஒட்டுமொத்த மறுகட்டமைப்பின் பகுதியாக துணைத்தலைவர் (யுக்தி) என்ற புதிய பதவி உருவாக்குவதற்கு இந்திய இராணுவம் ஒப்புதலளித்துள்ளது.**

❖ **இந்திய கப்பற்படை, "High Flash High Speed Diesel" (HFHSD-IN512) என்று அழைக்கப்படுகின்ற உயர்நுணுக்க விவரக்குறிப்புகளுடன் ஒரு புதிய எரிபொருளைப் பயன்படுத்துவதற்கு முடிவுசெய்துள்ளது.**

❖ **The Cabinet Committee on Security – has cleared a deadly weapons and sensors package for the 4 guided – missile destroyers under construction at Mazagon Docks in Mumbai**

❖ **இந்திய கப்பற்படை சமீபத்தில் விசாகப்பட்டினத்தில் 'மிலன் 2020' என்றழைக்கப்படுகின்ற ஒரு பன்னாட்டு இராணுவப் பயிற்சியை நடத்தியுள்ளது.**

- MILAN என்பது "Multilateral Naval Exercise" (பலதரப்பட்ட கப்பற்படை பயிற்சி) ஆகும்.
- 2020 ஆம் ஆண்டின் மையக்கருத்து "Synergy Across the Seas" என்பதாகும்.
- வருடத்திற்கு இருமுறை நடத்தப்படும் இந்த மிலன் பயிற்சி 1995-ல் தொடங்கப்பட்டது.
- இந்த வருடம், இந்த பயிற்சி கிழக்கத்திய கப்பற்படை கமாண்டில் (Eastern Naval Command – ENC) நடத்தப்பட்டது.
- சென்ற வருடம், இந்த பயிற்சி அந்தமான் மற்றும் நிக்கோபார் கமாண்டில் (Andaman and Nicobar Cammand – ANC) நடத்தப்பட்டது.
- இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை பகிர்ந்து கொள்ளும் தெற்காசியா, தென்கிழக்கு ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பா போன்ற 30-க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து இப்பயிற்சியில் பங்கேற்றனர்.

❖ **இந்திய மற்றும் ஜப்பானிய கடலோர காவல்படைகள் சென்னை துறைமுகத்தில் ஜனவரி 16-ல் 'Sahyog-Kaijin' என்ற ஒரு கூட்டுப்பயிற்சியை நடத்தியுள்ளது.**

- முன்னதாக, இவ்விரு நாடுகளும் பல்வேறு கூட்டுப்பயிற்சிகளை நடத்துவதற்கு 2006-ல் ஒரு கூட்டுறவு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளன.
- அந்த வரிசையில் முதல்முறையாக அக்டோபர் 2019-ல் "Shinyuu Maitri" என்ற ஒரு கூட்டு விமானப்படை பயிற்சியை இரு நாடுகளும் நடத்தின.
- மேலும் முதல்முறையாக 2013-ல் "JIMEX" என்றழைக்கப்படும் ஒரு கூட்டு கப்பற்படை பயிற்சியை இருநாடுகளும் நடத்தின.
- அதேபோல, இருநாடுகளும் இணைந்து "Dharma Guardian" என்ற ஒரு கூட்டு இராணுவப்பயிற்சியை நடத்தி வருகின்றன.

❖ **லேட்டினன் ஜெனரல் எஸ்.கே.சைனி ஜனவரி 25-ல் புதிய இராணுவ துணைத்தலைவராக பொறுப்பேற்பார்.**

❖ **Defence Minister Rajnath Singh – flagged off the 51st unit of K-9 Vajra-T cannon at the Larsen & Toubro armored system complex at Hazira, Surat on January 16.**

- இந்த K-9 Vajra பீரங்கி தென்கொரிய இராணுவத்தாலும் பயன்படுத்தப்படுகிறது.
- இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு அடுத்து நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு செப்டம்பர் 25, 2014-ல் "Make in India"திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கினார்.
- இத்திட்டம், 2020 வாக்கில் 100 மில்லியன் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு நோக்கம் கொண்டுள்ளது.

❖ **இந்திய இராணுவம் சமீபத்தில்** "Winged Raider" **என்றழைக்கப்படும் மிகப்பெரிய காற்றடைத்த பயிற்சியை** (Largest Air Borne Exercise) **நடத்தியுள்ளது.**

- கிட்டத்தட்ட 50 படைகள் அதில் பங்கேற்றன. இப்பயிற்சி வடகிழக்கத்திய மையங்களில் நடத்தப்பட்டது.

❖ **The Indian Air Force (IAF) – to commission a new squadron of Sukhoi – 30 MKI fighter jets, named 'Tiger Sharks' at its Thanjavur airbase in Tamil Nadu on January 2020.**

❖ **ஆந்திர பிரதேசத்தின் கிழக்குக்கடற்கரையிலுள்ள கரையில் ஒரு நீருக்கடியிலான மேடையிலிருந்து ஜனவரி 19, 2020-ல்** K4 **என்ற ஒரு அணுசக்தி திறன் கொண்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.**

- இந்த K4 ஏவுகணை என்பது 3500 கிலோமீட்டர் அளவுக்கு தாக்கவல்லது மற்றும் அது அரிஹந்த் வகை நீர்மூழ்கிகளைப் போன்றதாகும்.

- இந்தியா ஏற்கனவே 750கிலோ மீட்டர் எல்லை அளவில் தாக்கக் கூடிய K15 அல்லது சகரிஹா ஏவுகணைகளையும் செயல்படுத்தியுள்ளது.
- இந்தியாவால் மேம்படுத்தப்பட்ட மற்ற நீருக்கடியிலான ஏவுகணை BO-5 ஆகும். இது, 700 கிலோமீட்டர் வரை தாக்கவல்லது.
- இதுவரையில் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய மூன்று நாடுகள் மட்டுமே 3500 கிலோமீட்டர் வரை தாக்கும் திறன் கொண்ட நீருக்கடியிலான கண்டம் விட்டு கண்டம் தாக்கும் ஏவுகணைகளைப் பெற்றிருந்தது.
- இந்த K வரிசை ஏவுகணைகள் முன்னாள் ஜனாதிபதி A.P.J அப்துல்கலாம் பேரிடப்பட்டதாகும்.
- இவை, அக்னி ஏவுகணைகளை மிகவும் வேகமானதாகும்.
- மற்ற K வரிசை ஏவுகணைகள் K15, K5 மற்றும் K6 ஆகும். இவற்றில் K5 மற்றும் K6 ஆகியவை DRDO வால் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.
- K15 ஏவுகணைகள் நில அடிப்படையிலான சௌரியா ஏவுகணையை பிரதிபலிப்பதாகும்.

❖ Chief of Defence Staff, General Bipin Rawat – dedicated the newly resurrected 222 Squadron with BrahMos – embedded Sukhoi – 30MKIs to the nation at the Air Force Station (AFS) in Thanjavur on January 20.

❖ The Ministry of Defence – has short – listed defence shipyard Mazagon Docks (MDL) and private ship-builder L&T to construct 6 new stealth submarines with foreign collaboration in the over Rs.50,000 crore deal.

❖ **இந்தியா ஜனவரி 24-ல் ஆறு நாட்களில் இரண்டாவது முறையாக நீர்மூழ்கிகப்பல் ஏவப்பட்ட கண்டம்விட்டு கண்டம்தாவும் ஏவுகணையான** (Submarine – Launched Ballistic Missile – SLBM) **அதன் அணுசக்தி திறன் கொண்ட** K-4 **ஐ சோதனை செய்தது.**

❖ **இந்திய ஜனாதிபதி, 71வது குடியரசுதின கொண்டாடத்தின் முதல்நாள் ஆயுதப்படை பணியாளர்கள் மற்றும் பிறருக்கு 409 வீரதீர மற்ற பாதுகாப்பு அலங்கரிப்பு விருதுகளுக்கு ஒப்புதலளித்துள்ளார்.**

❖ **இந்தியா, இந்த வருடம் நடத்தவுள்ள அமெரிக்க மற்றும் ஜப்பான் உடனான 24வது முத்தரப்பு மலபார் கப்பற்படை பயிற்சியில் பங்கேற்பதற்கு ஆஸ்திரேலியாவை வரவேற்க கருதிக் கொண்டிருக்கிறது.**

❖ **The Navy – launched operation Vanilla in support of the national disaster in Madagascar on January 28 and diverted a large amphibious ship to provide assistance in the Southern Indian Ocean.**

❖ **11வது** DefExpo – 2020 **–ன் பாதுகாப்பின் எண்ணியல் மாற்றத்தின்** (Digital transformation of defence) **மையக்கருத்துடன் பிப்ரவரி 5 லிருந்து 9 வரை லக்னோவில் நடத்தப்படும்.**

# பொருளாதாரம்

❖ **மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன், 2024-2025 வாக்கில் கட்டமைப்புத் திட்டங்களில் ரூ.102 லட்சம் கோடியைவிட கூடுதலாக முதலீடு செய்யும் திட்டங்களை விவரித்துள்ளார்.**

- நிதியமைச்சர் டிசம்பர் 31-ல் 2019-2025 –க்கான குழாய் மீது தேசிய கட்டுமானம் (National Infrastructure on Pipeline – NIP) மீதான பணிக்குழுவின் ஒரு அறிக்கையை வெளியிட்டார்.
- மத்திய அரசு, மாநிலங்கள் மற்றும் தனியார்துறை ஆகிய மூன்றும் மூலதன செலவினத்தை முறையே 39:39:22 என்ற விதிமுறையில் பகிர்ந்துக் கொள்ளும்.

❖ **டிசம்பர் 2019-ல் (நவம்பர் விற்பனைகளுக்காக) அரசாங்கத்தால் வசூலிக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி** (GST) **ரூ.1லட்சம் கோடியை கடந்தது.**

- இது, டிசம்பர் 2018-ல் வசூலிக்கப்பட்ட ரூ.94,726 கோடியைவிட கிட்டத்தட்ட 9 சதவீதம் அதிகமாகும்.

❖ **சிவாலிக் மெர்கன்டைல் கூட்டுறவு வங்கி, ஒரு சிறிய நிதி வங்கியாக** (Small Finance Bank – SFB) **மாற்றுவதற்கு இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து அனுமதி பெறுவதற்கு நாட்டிலுள்ள முதல் கூட்டுறவு வங்கியாக முன்வந்துள்ளது.**

- சஹாரன்பூரை தலைமையிடமாகக் கொண்ட சிவாலிக் மெர்கன்டைல் கூட்டுறவு வங்கி உத்திரபிரதேசம், டெல்லி, மத்தியபிரதேசம் மற்றும் உத்திரகாண்ட்டில் பன்மை முக்கியத்துவம் கொண்ட வங்கியாக உள்ளது.
- இந்த வங்கி ரூ.1051 கோடி இருப்புகளையும் ரூ.715 கோடி முன்பணத்தையும் மார்ச் 2019-ல் பெற்றிருந்தது.
- பொதுவாக, இந்திய ரிசர்வ் வங்கி கொள்கை அளவில் 18 மாதங்களுக்கு மட்டுமே இவ்வித அனுமதியைக் கொடுக்கும்.
- பொதுவாக, கூட்டுறவு வங்கிகள் மாநில சட்டங்கள் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி விதிமுறைகளின்கீழ் நிர்வகிக்கப்படும்.

❖ **ரப்பர் திறன் மேம்பாட்டுக் கவுன்சில்** (Rubber Skill Development Council-RSDC), **அரசாங்கத்தின் சமர்த் திறன் திட்டத்தின்** (Saamarth Skilling Project) **ஒரு பகுதியாக 2022 வாக்கில் 5 லட்சம் டயர் மெக்கானிக்குகளுக்கு பயிற்சி அளித்து சான்று வழங்கவுள்ளது.**

- அரசாங்கம் ஏற்கனவே 64,000 பேருக்கு பயிற்சியளித்துள்ளது மற்றும் மார்ச் 31, 2020 வாக்கில் மேலும் 1.5 லட்சம் பேருக்கு பயிற்சியளிக்க திட்டமிட்டுள்ளது.

❖ **நுகர்வோர் விளைக்குறியீட்டால்** (Consumer Price Index – CPI) **அளவிடப்பட்ட சில்லறை பணவீக்கம் டிசம்பரில் 7.4 சதவீதமாக அதிகரித்துள்ளது.**

❖ **கூகுளின் தாய் நிறுவனமான ஆல்.ஃபபெட்** (Alphabet) **ஜனவரி 16-ல் $ 1 ட்ரில்லியனுக்கு அதிகமான சந்தை மதிப்பை அடையும் நான்காவது அமெரிக்க நிறுவனமாக முன்வந்துள்ளது.**

- ஏற்கனவே ஒரு ட்ரில்லியன் டாலர் சந்தை மதிப்பைக் கடந்த நிறுவனங்கள் ஆப்பிள், அமேசான் மற்றும் மைக்ரோசாப்ட் ஆகியவையாகும்.
- 2018-ல் இந்த மைல்கல்லைக் கடந்த முதல் நிறுவனமாக ஆப்பிள் இருந்தது.
- அதைத்தொடர்ந்து மைக்ரோசாப்ட் நிறுவனமும், பின்னர் அமேசான் நிறுவனமும் அந்நிலையை அடைந்தன.

❖ **மற்ற நாடுகளிலிருந்து தங்கம் வாங்குவதில் உலகிலுள்ள மற்ற மத்திய வங்கிகளிடையே இந்திய ரிசர்வ் வங்கி ஆறாவதாக தரப்படுத்தப்பட்டுள்ளது.**

- அது, தற்போது 625.2 டன் தங்கத்தைப் பெற்றுள்ளது. இது, நாட்டின் வெளிநாட்டு பரிமாற்றத்தின் 6.6 சதவீதம் ஆகும்.
- இவ்வித தகவல்கள் உலக பொன் கவுன்சிலால் (World Gold Council - WGC) வெளியிடப்பட்ட "World Gold Outlook 2020" அறிக்கையின் பிரதிபலிப்பாகும்.
- இந்த அறிக்கையின்படி, 2010 லிருந்து தங்கத்தின் சிறந்த செயல்பாட்டை பெற்ற ஆண்டு 2019 ஆகும்.
- 2010 உடன் ஒப்பிடும்போது, 2019-ல் தங்க வர்த்தகம் 18.4 சதவீதம் அதிகரித்துள்ளது.
- இந்தியாவைவிட அதிகமான தங்கத்தைப் பெற்றுள்ள மற்ற ஐந்து நாடுகள் சீனா, ரஷ்யா, கஜகிஸ்தான், துருக்கி மற்றும் போலந்து போன்றவையாகும்.
- 2019-ல் உஸ்பெகிஸ்தான் 16.6 டன் தங்கத்தையும் வெனிசுலா 30.3 டன் தங்கத்தையும் விற்று உலகில் மிகப்பெரிய தங்கம் விற்பனையாளர்களாக இருந்தனர்.
- உலக பொன் கவுன்சிலின் (WGC) தலைமையிடம் லண்டனில் அமைந்துள்ளது.
- அதன் அலுவலகங்கள் சீனா, இந்தியா (மும்பை), அமெரிக்கா மற்றும் சிங்கப்பூரில் உள்ளன.

❖ **பன்னாட்டு பணநிதி** (International Monitary Fund – IMF), **வங்கிசாரா நிதித்துறையில் அழுத்தம் மற்றும் கடன்வளர்ச்சியில் பின்னடைவு உள்ளடக்கி உள்நாட்டுத் தேவையில் மெதுவாக செல்வதை சுட்டிக்காட்டி 2019-2020 ஆம் ஆண்டுக்கானஇந்தியாவின்** GDP **வளர்ச்சி மதிப்பீட்டை 4.8 சதவீதமாக குறைவாக மதிப்பிட்டுள்ளது.**

- 2019 ஆம் ஆண்டின் சில முக்கிய நாடுகளின் GDP பின்வருமாறு:
  1. இந்தியா - 4.8%
  2. சீனா - 6.1%

3. பிரேசில் - 1.2%
4. ரஷ்யா - 1.1%
5. தென்ஆப்பிரிக்கா - 0.4%
6. அமெரிக்கா - 2.3%
7. உலகம் - 2.9%

❖ **வர்த்தகம் மற்றும் மேம்பாடு மீதான ஐக்கிய நாடுகள் மாநாட்டால்** (United Nations Conference on Trade and Development – UNCTAD) **தயாரிக்கப்பட்ட உலக முதலீட்டு போக்குமதிப்பீட்டு** (Global Investment Trend Monitor) **அறிக்கையின்படி, 2019-ல் வெளிநாட்டு நேரடி முதலீட்டை அதிகம் பெற்ற முதல் 10 நாடுகளில் இந்தியா இடம் பெற்றுள்ளது.**

❖ **இந்தியாவில்** Uber Eats **வர்த்தகமான** Uber **ன் உணவு விநியோகிப்பதை பெற்று நடத்துவதற்கு** Zomato **அறிவித்துள்ளது.**

- அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்ட Uber ன் 9.99% பங்கு Zomato விடம் உள்ளது.

❖ **Tata Consultancy Services (TCS) அதன் 2020 உலகம் 500 அறிக்கையில் கடந்த 10 ஆண்டுகளில் மிகவும் வளரும் அமைப்பாக பெயரிடப்பட்டுள்ளது.**

- 2010 லிருந்து அதன் மதிப்பு 6 மடங்காகி 2019-ல் $13.5 பில்லியனாக உள்ளது.

❖ **இந்திய ரிசர்வ் வங்கி வாரியம், பணக்கொள்கை குழுவின்** (Monetary Policy Committee – MPC) **அதன் மூன்றாவது உட்புற உறுப்பினராக ஜனக் ராஜை நியமிப்பதற்கு முடிவு செய்துள்ளது.**

- ஜனக்ராஜ் தற்போது பணக் கொள்கை துறையின் செயல்துறை இயக்குனர் பொறுப்பில் உள்ளார்.
- வட்டி விகிதத்தை நிர்ணயிக்கும் இந்தக்குழு ஆறு உறுப்பினர்களைப் பெற்றுள்ளது மற்றும் அவர்களில் மூவர் இந்திய ரிசர்வ் வங்கியைச் சேர்ந்தவர்களாவார்.
- சட்டத்தின்படி, RBI ன் இரண்டு உட்புற உறுப்பினர்கள் ஆளுநர் மற்றும் பணக்கொள்கையின் துணை ஆளுநர் பொறுப்பில் உள்ளவர் ஆவர்.

## விளையாட்டுகள்

❖ Spain's Fernando Alonso – is set to become the first Formula One champion to complete in the Dakar Rally, which starts in Saudi Arabia on January 5.

❖ **உலக போதைத் தடுப்பு முகமைகள்** (World Anti-doping Agency – WADA) **2020-ல் தடைசெய்யப்படும் பொருட்கள் மற்றும் முறைகளின் அட்டவணையை வெளியிட்டது.**

❖ **ஒடிசா மாநிலத்தின் புவனேஷ்வரில் நடைபெற்ற இறுதி ஆட்டமான மூத்தோர் தேசிய கைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் இரயில்வே அணியை வென்று தமிழ்நாடு ஆண்கள் அணி மகுடம் சூடியது.**

- ஒட்டுமொத்தமாக இது தமிழ்நாட்டின் ஒன்பதாவது பட்டமாகும் மற்றும் ஆறு ஆண்டுகளுக்குப்பிறகு இது முதலாவது பட்டமாகும்.
- பெண்கள் அணியில் இரயில்வே அணியை கேரள அணி தோற்கடித்து பட்டத்தை வென்றது.

❖ **இந்திய டேபிள் டென்னிஸ் நட்சத்திரம் மானவ் தாக்கர் (19 வயது), சமீபத்திய பன்னாட்டு டேபிள் டென்னிஸ் கூட்டமைப்பு** (International Table Tennis Federation – ITTF) **தரங்களில் ஆண்களின் 21 வயதுக்குட்பட்ட ஒற்றையர்கள் பிரிவில் உலக எண் 9 லிருந்து உலக எண் 1 ஐ சாதித்தார்.**

❖ **ஹேலோ இந்திய இளைஞர் விளையாட்டுகளின்** (Khelo India Youth Games) **மூன்றாவது நிகழ்வுகள் அஸ்ஸாமின் கௌஹாத்தியில் பிப்ரவரி 10, 2020 மற்றும் பிப்ரவரி 22, 2020 இடையே நடத்தப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.**

- இதில், 17 வயதிற்கு குறைவான பள்ளி மாணவர்கள் மற்றும் 21 வயதிற்கு குறைவான கல்லூரி மாணவர்கள் ஆகிய இரு பிரிவினர் அடங்குவர்.
- இந்நிகழ்வு, 20 பிரிவுகளில் நடத்தப்படுகிறது. இந்த நிகழ்வின்கீழ், பன்னாட்டு விளையாட்டு நிகழ்வுகளுக்கு தங்களை தயார் செய்வதற்காக 1000 சிறுவர்களுக்கு வருடாந்தர உதவித்தொகையாக ரூ.5 லட்சம் கொடுக்கப்படுகிறது.
- இதன் முதல் நிகழ்வு புதுடெல்லியிலும் மற்றும் இரண்டாவது நிகழ்வு பூனேவிலும் நடத்தப்பட்டது.
- இந்த ஹேலோ இந்தியா விளையாட்டுகள் ஜனவரி 2018-ல் பிரதமர் நரேந்திர மோடியால் துவங்கப்பட்டன.
- தொடக்கவிழா விளையாட்டுகளில் ஹரியானா மாநிலம் அதிகப்பதக்கங்களைப் பெற்று முதலிடத்தில் இருந்தது.

❖ **நியூசிலாந்து கிரிக்கெட் வீரர் லியோ கார்டர் ஒரு ஓவரில் ஆறு சிக்சர்கள் அடித்து உலகில் ஏழாவது சாதனை கிரிக்கெட் வீரராக பதிவுசெய்துள்ளார்.**

- அந்த வரிசையில் 1. கேரி சோபர்ஸ் (மேற்கு இந்திய தீவுகள்), 2.ரவி சாஸ்திரி (இந்தியா) 3. ஹெர்செல்லி ஹிப்ஸ் (தென்னாப்பிரிக்கா) 4. யுவராஜ் சிங் (இந்தியா) 5. ரோஸ் விட்லே (இங்கிலாந்து) மற்றும் 6. ஹஸ்ரத்துல்லா ஸாஸை (ஆப்கானிஸ்தான்)
- லியோ கார்டர் T20 கிரிக்கெட்டில் ஒரு ஓவரில் ஆறு சிக்சர்கள் அடித்த நாலாவது வீரராவார். T20 கிரிக்கெட்டில் முதலாவதாக யுவராஜ் சிங் (2007), இரண்டாவதாக ரோஸ் விட்லே (2017) மற்றும் மூன்றாவதாக ஹஸ்ரத்துல்லா ஸாஸை (2018) ஆகியோர் உள்ளனர்.

❖ இந்தியாவின் பி.மகேஷ் சந்திரன் (36 வயது) இங்கிலாந்தின் ஹேஸ்டிங்கில் நடைபெற்ற பெருமைக்குரிய 95வது ஹேஸ்டிங் பன்னாட்டு சதுரங்க காங்கிரஸில் வெற்றி வாகைசூடியுள்ளார்.

❖ Indian star, Fouaad Mirza – has officially secured a berth for the country in equestrian at this year's Tokyo Olympics.

❖ இந்தியாவின் பி.இனியன் சமீபத்தில் ஜெர்மனியில் நடைபெற்ற ஸ்டா.ட்ப்பர் ஓப்பன் சதுரங்க போட்டியில் இரண்டாம் இடம் பெற்றார்.

❖ மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் கிரண் ரிஜ்ஜு மற்றும் அஸ்ஸாம் முதலமைச்சர் சர்பானன்தா சோனோவால் ஆகிய இருவரும் ஜனவரி 10-ல் அஸ்ஸாமின் கௌஹாத்தியில் மூன்றாவது ஹேலோ இந்திய இளைஞர் விளையாட்டுகளை தொடங்கிவைத்தனர்.

- அஸ்ஸாம் ஓட்டவீரர் ஹீமாதாஸ் விளையாட்டுகளின் தீபத்தை ஏந்திச்சென்றார்.
- 28 மாநிலங்கள் மற்றும் 9 யூனியன் பிரதேசங்களிலிருந்து இவ்விளையாட்டுகளில் 6800 வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்பார்கள்.

❖ இந்திய பெண்கள் ஹாக்கி அணி கேப்டன் இராணி ராம்பால் FIH ஹாக்கி ஆளுமை அமைப்பால் "வருடத்தின் உலக விளையாட்டுகள் வீராங்கனை" (World Games Athlete of the Year) என்று நியமிக்கப்பட்டுள்ளார்.

- இவ்விருதிற்கு உலகம் முழுவதும் 25 பேர் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

❖ செட்டேஷ்வர் புஜாரா, ராஜ்கோட்டில் நடைபெற்ற கர்நாடகாவிற்கு எதிரான சௌராஷ்டிராவின் ரஞ்சி கோப்பை குழு 'B' கிரிக்கெட் விளையாட்டின் போது தனது 50 வது முதல்தர 100 ரன்களை எடுத்துள்ளார்.

❖ கிரிக்கெட் ஜாம்போவானான சச்சின் டெண்டுல்கர் மிகச்சிறந்த லாரஸ் விளையாட்டு நிகழ்வு 2000-2020 விருதுக்கான 20 நபர்களில் ஒருவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

❖ இந்திய பளுதூக்கும் வீரர் ஸர்ப்ஜீத் கௌர், போதை மருந்து கொள்கையை மீறியதற்காக தேசிய போதை மருந்து தடுப்பு முகமையால் (NADA) 4 வருடங்களுக்கு விளையாடுவதிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளார்.

❖ கன்கையா குமார், பிரசாந்த் கிஷோர் மற்றும் மாகுவா மாய்ட்ரா ஆகிய மூவரும் "20 People to watch in the 2020s" ன் Forbes அட்டவணையில் பெயரிடப்பட்டுள்ளனர்.

❖ தமிழ்நாட்டின் செரின் அப்துல் கபூர் ஜனவரி 12-ல் ஹேலோ இந்திய இளைஞர் விளையாட்டுக்களில் நீளம் தாண்டுதல் நிகழ்வில் 21 வயதிற்குட்பட்டவர் பிரிவில் 6.30மீ தாண்டி வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.

❖ **ஜஸ்ப்ரித் பும்ரா ஜனவரி 12-ல் இந்திய கிரிக்கெட்டின் உயர்ந்தபட்ச விருதான போலி உம்ரிகர் விருதைப் பெற்றுள்ளார்.**

- **BCCI விருதுகள் - வெற்றியாளர்களின் முழு அட்டவணை:**
  1. **க்ரிஸ் ஸ்ரீகாந்த்:**
     காலனல் சி.கே.நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருது
  2. **ஜஸ்ப்ரித் பும்ரா:**
     சிறந்த பன்னாட்டு கிரிக்கெட்டருக்கான (ஆண்கள்) போலி உம்ரிகர் விருது
  3. **அன்சும் சோப்ரா:**
     பெண்களுக்கான BCCI வாழ்நாள் சாதனையாளர் விருது
  4. **பூனம் யாதவ்:**
     சிறந்த பன்னாட்டு கிரிக்கெட்டர் (பெண்கள்)
  5. **திலிப் ஜோசி:**
     BCCI சிறப்பு விருது
  6. **மாயங்க் அகர்வால்** :
     சிறந்த பன்னாட்டு அறிமுகம் (ஆண்கள்)
  7. **ஜஸ்ப்ரித் பும்ரா:**
     2018-2019 டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகளுக்கான திலிப் சர்தேசாய் விருது
  8. **செட்டேஸ்வர் புஜரா:**
     2018-2019 டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ரன்கள் பெற்றதற்கான திலிப் சர்தேசாய் விருது
  9. **ஷபாலி வர்மா:**
     BCCI சிறந்த பன்னாட்டு அறிமுகம் (பெண்கள்)
  10. **ஜுலன் கோஸ்வாமி**:
      2018-2019 ஒருநாள் பன்னாட்டுப் போட்டிகளில் (பெண்கள்) அதிக விக்கெட்டுகள்
  11. **சிவம் துபே**:
      ரஞ்சிக் கோப்பையில் சிறந்த ஆல்ரவுண்டருக்கான லாலா அமர்நாத் விருது
  12. **ஸ்மிர்த்தி மந்தனா** :
      2018-2019 ஒருநாள் பன்னாட்டு போட்டிகளில் பெண்கள் அதிக ரன்கள் பெற்றவர்
  13. **விதர்பா கிரிக்கெட் அசோசியேஷன்**:
      2018-2019 BCCI உள்ளாட்டுப் போட்டிகளில் சிறந்த செயல்பாடு
  14. **வீரேந்திர ஷர்மா:**
      2018-2019 உள்நாட்டு கிரிக்கெட்டில் சிறந்த நடுவர்
  15. **ஷபாலி வர்மா:**
      2018-2019 சிறந்த பெண்கள் கிரிக்கெட்டருக்கான (இளையவர் உள்நாடு) ஜக்மோகன் தால்மியா கோப்பை

❖ **Norway's Chess genius, Magnus Carlsen – sets a word record of 111 unbeaten classical games during the fourth round of Tata Steel Masters chess tournament at Wijk Aan Zee, Netherlands on January 14.**

❖ **Abhijeet Gupta – clinched a clinical win over aleksej Aleksandrov to regain the title in the Delhi International Open Grandmasters chess tournament in New Delhi.**

❖ இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் விராட் கோலி 2019 ஆம் ஆண்டின் பன்னாட்டு கிரிக்கெட் டெஸ்ட் மற்றும் ஒருநாள் விளையாட்டுகளுக்கான இரண்டு அணிகளின் கேப்டனாக அறிவிக்கப்பட்டுள்ளார் மற்றும் ICC – 2019 "Spirit of Cricket" விருதும் வழங்கப்பட்டுள்ளார்.

- ரோஹித் ஷர்மா 2019 ஆம் ஆண்டு விருதின் ICC ODI கிரிக்கெட்டர் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.
- Richard lllingworth 2019 ஆம் ஆண்டின் ICC நடுவர் விருதை வென்றுள்ளார்.

❖ **RP-Sanjiv Goenka Group and Mohun Bagan Football Club (India) Private Limited – have merged to establish a new football club.**

❖ இந்தியாவின் Greco-Roman பளுதூக்கும் வீரர் குர்ப்ரீத் சிங் இத்தாலியில் நடைபெற்ற ரோம் தரவரிசைகள் போட்டியில் 82கிலோ பிரிவின் இறுதியில் வென்றுள்ளார்.

❖ மூன்றுமுறை இரட்டையர் கிராண்ட் ஸ்லாம் வெற்றியாளரான சானியா மிஸ்ரா ஜனவரி 18-ல் WTA Hobart பன்னாட்டு இரட்டையர் இறுதியாட்டத்தில் 42வது WTA இரட்டையர் பட்டத்தை பெற்றுள்ளார்.

❖ நட்சத்திர பளுதூக்கும் வீராங்கனை விக்னேஷ் போகட் ரோம் தரவரிசைகள் நிகழ்வில் 53கிலோ பிரிவில் 2020-ன் முதல் தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார்.

❖ விளையாட்டுகளின் அகில இந்திய கவுன்சில் (All India Council of Sports – AICS) என்ற அரசு அமைத்துள்ள ஆலோசனைக் குழுவிலிருந்து சச்சின் டெண்டுல்கர் மற்றும் விஸ்வநாதன் ஆனந்த் ஆகிய இருவரும் விடுபட்டுள்ளனர்.

❖ பேட்மிட்டன் உலகக் கூட்டமைப்பு (Badminton World Federation – BWF), 2021 ஆம் வருடத்திலிருந்து எல்லா நிலைகளிலும் அதன் அனுமதிக்கப்பட்ட பன்னாட்டுப் போட்டிகளில் செயற்கை இறகு ஷட்டில்கார்க் பயன்படுத்துவதற்கான ஒப்புதல் வழங்கியுள்ளது.

❖ சிவாங்கி சர்மா, அஸ்ஸாமிலுள்ள கௌஹாத்தியில் நடைபெறும் ஹேலோ இந்திய விளையாட்டுகளில் ஐந்தாவது தனிநபராக நீச்சல் போட்டியில் தங்கம் வென்று மிகவும் வெற்றிகரமான தனிப்பட்ட தடகள வீராங்கனையாக முன்வந்துள்ளார்.

❖ மஹாராஷ்ரா மாநிலம், 78 தங்கப்பதக்கங்கள் உட்பட 256 பதக்கங்களைப் பெற்று கேலோ இந்திய இளைஞர் விளையாட்டுகள் சாம்பியன் கோப்பையை தக்கவைத்துக் கொண்டது.

- இரண்டாம் இடத்தில் ஹரியானாவும் (200 பதக்கங்கள்), மூன்றாம் இடத்தில் டெல்லியும் (122 பதக்கங்கள்), நான்காம் இடத்தில் கர்நாடகாவும் (80 பதக்கங்கள்), ஐந்தாவது இடத்தில் உத்திரபிரதேசமும் (87 பதக்கங்கள்) மற்றும் ஆறாவது இடத்தில் தமிழ்நாடும் (70 பதக்கங்கள்) உள்ளன.

❖ **மெய்ட்டன் கோப்பைக்கான பன்னாட்டு துப்பாக்கிச் சுடும் போட்டியில் பெண்களின் ஏர்ரைபில் நிகழ்வில் அபூர்வி ஷன்டேலாவும் மற்றும் ஆண்களின் ஏர் ரைபில் நிகழ்வில் திவ்யானேசிங் பன்வாரும் தங்கப்பதக்கங்களை வென்றனர்.**

❖ **ஆஸ்திரேலியா, இந்த வருடம் அக்டோபர் 10 லிருந்து 17 வரை உட்புற கிரிக்கெட் உலகக் கோப்பையின் 11வது போட்டியை நடத்துவதற்கு உள்ளது.**

❖ **மத்திய விளையாட்டுத்துறை அமைச்சகம் ஜனவரி 22-ல் இந்திய படகுத்துறை கூட்டமைப்பை** (Rowing Federation of India) **அங்கீகார ரத்து செய்துள்ளது.**

- இம்முயற்சி, சென்ற டிசம்பரில் நடத்தப்பட்ட தேர்தலில் 2011 ஆம் ஆண்டின் விளையாட்டுக்கள் விதிமுறையை மீறியதற்காக மேற்கொள்ளப்பட்டது.

❖ **இந்திய படகுத்துறை கூட்டமைப்பு ஜனவரி 23-ல் படகுத்துறை வீரர்** Dattu Bhokanal **ன் இரண்டு வருட தற்காலிக நிறுத்தத்தை தளர்த்தியுள்ளது.**

❖ **Chinese Grandmaster Ju Wenjun – defeated Russia's Aleksandra Goryachkina in tiebreaks 2.5-1.5 to retain her women's world title in Viadivostok, Russia on January 24**

❖ **எஸ். ஸ்ரீகிருஷ்ணா** (PSPB) **என்பவர் மானிஷா – வாஸ்கன் தேசிய பில்லியர்ட்ஸ் மற்றும் ஸ்னூக்கர் போட்டியில் 21 வயதிற்கு குறைந்தோருக்கான தேசிய பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப்ஐ தக்கவைத்துக் கொண்டார்.**

❖ **மேல்மட்டத்திலுள்ள ரஷ்ய கிரான்ட்மாஸ்டர் பாவல் பான்கிராடவ், ஜனவரி 25-ல் சென்னையில் நடைபெற்ற 2020 ஆம் ஆண்டுக்கான 12வது ஓப்பன் பன்னாட்டு ஜி.எம். சதுரங்க போட்டியில் பட்டம் வென்றார்.**

❖ **இந்தியாவின் பழம்பெரும் வாழும் முதல்தர கிரிக்கெட்டர் வசந்த் ராஜீ ஜனவரி 26-ல் தனது 100வது பிறந்தநாளைக் கொண்டாடினார்.**

- ராஜீ என்பவர் வலதுகை பேட்ஸ்மேன் ஆவார். இவர் 1940 களில் 9 முதல் தர விளையாட்டுகளில் மொத்தம் 277 ரன்களை எடுத்தார்.
- அதிகபட்சமாக 68 ரன்கள் எடுத்துள்ளார்.
- அவர் வரலாற்று ஆசிரியர் மற்றும் எழுத்தாளர் ஆவார்.
- அவர் தனது 13 வயதில் தெற்கு மும்பையிலுள்ள பாம்பே ஜிம்கானாவில் தனது முதலாவது டெஸ்டில் விளையாடினார்.

❖ **Former Karnataka captain Vinay Kumar – reached the rare milestone of 500 first-class wickets in a match for Puducherry against Chandigarh in the Plate Group Ranji Trophy match at Chandigarh on January 27**

❖ **தமிழ்நாட்டின் நேத்ரா குமணன், ஜனவரி 25-ல் அமெரிக்காவின் மியாமியில் முடிவுற்ற ஹெம்பல் உலக வரிசையின் இரண்டாவது சுற்றில் வெண்களப் பதக்கம் வென்ற பிறகு, படகோட்டும் உலகக் கோப்பையில் ஒரு பதக்கம் வென்ற முதல் இந்தியப் பெண்ணாக முன்வந்துள்ளார்.**

❖ **ஐந்து முறை சாம்பியனான விஸ்வநாதன் ஆனந்த்** Wijk Aan Zee **யில் நடைபெற்ற** Tata Steel Masters Chess **போட்டியில் ஆறாவது சமநிலையில் முடித்துள்ளார்.**

❖ **பங்கஜ் அத்வாணி பூனேயில் நடைபெற்ற 10வது தேசிய பில்லியாட்ஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் பட்டம் வென்றார்.**

- இவர், இந்த பட்டத்திற்காக இறுதி ஆட்டத்தில் 5-2 என்ற புள்ளி கணக்கில் சௌரவ் கொத்தாரியை தோற்கடித்துள்ளார்.
- இது, மொத்தத்தில் அத்வானியின் 33வது தேசிய பட்டமாகும் மற்றும் மூத்தோர் பிரிவில் பத்தாவதாகும்.

❖ **மணிப்புரி கால்பந்து வீராங்கனை பாலதேவி (29 வயது), வெளிநாட்டு மன்றத்திலிருந்து தொழில் ரீதியான ஒப்பந்தத்தைப் பெறும் முதலாவது இந்தியப் பெண் கால்பந்து வீராங்கனை என்று வரலாறு படைத்துள்ளார்.**

❖ **இந்திய கிரிக்கெட் வாரியத்தின்** (BCCI) **சிறப்பு திட்டமான சீர்மிகு புதிய மையத்தை** (Centre of Excellence – CoE) **கட்டுவதற்கு கிட்டத்தட்ட ரூ.500 கோடி செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.**

- அது, NCA இயக்குநர் இராகுல் திராவிட்டின் சுறுசுறுப்பான ஈடுபாட்டுடன் தேசிய கிரிக்கெட் கழகத்தை (National Cricket Academy - NCA) எடுத்துவிடும்.
- இத்திட்டம், அடுத்த இரண்டு வருடத்திற்குள் முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

❖ **நட்சத்திர ஈட்டி எறியும் வீரரான நீரஜ் சோப்ரா, தென்னாப்பிரிக்காவில் போட்செப்ஸ்ரோமில் நடைபெற்ற தடகள மத்திய வடகிழக்கு** (Athletics Central North East – ACNE) **விளையாட்டில் டோக்கியோ ஒலிம்பிக் தகுதிக் குறியீட்டை (85மீ) கடந்து அனைவரையும் ஈர்க்கக்கூடிய 87.86மீ எறிந்து சாதனை நிகழ்த்தினார்.**

❖ **இந்திய பெண்கள் அணி கேப்டன் இராணி ராம்பால், பெருமைக்குரிய வருடவிருதின் உலக விளையாட்டுகள் தடகளத்தை வென்றுள்ள முதலாவது ஹாக்கி வீராங்கனையாக முன்வந்துள்ளார்.**

# விருதுகள்

❖ **இந்திய வம்சாவளி எழுத்தர் ஜாஸ்பின்டர் பிலன் என்ற பெண், அவரது புதினம் "Asha and the Spirit Bird" என்பதற்காக இங்கிலாந்து குழந்தைகளின் புத்தக விருது வழங்கப்பட்டுள்ளார்.**

❖ **விவசாய விஞ்ஞானி பேராசிரியர் எம்.எஸ்.சுவாமிநாதன், ஜனவரி 14-ல் முதலாவது "சீர்மைக்கான முப்பவரப்பு வெங்கையா நாயுடு தேசிய விருது" வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.**

- அந்த விழாவின் போது, "பசுமைப்புரட்சியின் தந்தை மற்றும் விவசாய அறிவியலின் தலைவர்" என்ற பட்டமும் அவருக்கு வழங்கப்பட்டது.

❖ **துணை ஜனாதிபதி எம்.வெங்கையா நாயுடுவின் மகள் தீபா வெங்கட், முன்னாள் ஜனாதிபதி பிரனாப் முக்கர்ஜியால் "Champion of Change" விருது வழங்கப்பட்டுள்ளார்.**

- அவர், சமூகநல களத்தில் தனது சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கும் விதத்தில் இவ்விரு வழங்கப்பட்டுள்ளார்.
- அவர், கடந்த 20 வருடமாக பல்வேறு திறன் மேம்பாட்டு திட்டங்களை நடத்தும் ஸ்வர்ன பாரத் அறக்கட்டளை (Swarna Bharat Trust) ஐ நிர்வகித்து வந்துள்ளார்.

❖ **ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், ஜனவரி 22-ல் புதுடெல்லியிலுள்ள ராஜ்ட்ரபதி பவனில் 5 முதல் 18 வயதுள்ள 49 குழந்தைகளுக்கு Bal Shakti Puraskar விருதை வழங்கி பாராட்டினார்.**

- இந்த விருது, ரூ.1 லட்சம் ரொக்கம், ஒரு பதக்கம் ஒரு சான்றிதழ் மற்றும் ஒரு நினைவுப் பரிசு போன்றவைகளை உள்ளடக்கும்.

❖ **முன்னாள் IPS அலுவலர் குமார் முன்னன் சிங், தனிநபர் பிரிவில் பேரிடர் மேலாண்மை களத்தில் அவரின் சிறந்த பங்களிப்பிற்காக முதலாவது சுபாஷ் சந்திரபோஷ் Aapda Prabandhan Puraskar விருதுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**

- இந்த விருது ஒரு சான்றிதழுடன் ரூ.5 லட்சம் ரொக்கத்தையும் உள்ளடக்கியதாகும்.
- உத்திரகாண்ட் மாநிலத்தில் இயற்கை பேரிடர் களத்தில் பணிபுரியும் ஓர் அமைப்பான பேரிடர் குறைப்பு மற்றும் மேலாண்மை மையம் என்ற அமைப்பும் நிறுவன பிரிவின்கீழ் இவ்விருதிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- நிறுவன பிரிவுக்கான இவ்விருது 2006-ல் ஏற்படுத்தப்பட்டது.
- அந்த அமைப்பிற்கு ஒரு சான்றிதழுடன் ரூ.51 லட்சம் ரொக்கமும் வழங்கப்படும்.
- இந்த விருது, நேதாஜி சுபாஷ் சந்திரபோஷின் பிறந்தநாளான ஜனவரி 23-ல் ஒவ்வொரு வருடமும் அறிவிக்கப்படுகிறது.
- இவ்விருது, அரசாங்கத்தால் சென்ற வருடம் ஏற்படுத்தப்பட்டது.

❖ **தீபிகா படுகோன் என்பவர், சமீபத்தில் நடைபெற்ற உலகப் பொருளாதார அமைப்பின் ஆரம்பக் கூட்டத்தொடரின் போது 26வது வருடாந்தர** Crystal **விருது விழாவில் 2020 ஆம் ஆண்டுக்கான** Crystal **விருது வழங்கப்பட்டுள்ளார்.**

❖ **மத்திய அரசு, ஜனவரி 25-ல் இந்த வருட பத்ம விருதுகளின் வெற்றியாளர்கள் அட்டவணையை அறிவித்துள்ளது.**

- மத்திய அரசு, 7 பத்ம விபூஷன், 16 பத்ம பூஷன் மற்றும் 118 பத்மஸ்ரீ உள்ளடங்கிய 141 விருதுகளை வழங்குவதற்கு முடிவுசெய்துள்ளது.
- பி.ஜே.பி பிரபலங்கள் அருண்ஜெட்லி மற்றும் சுஷ்மா சுவராஜ் மற்றும் சமதர்மவாதி ஜார்ஜ் பெர்னான்டஸ் ஆகிய மூவருக்கும் இறப்பிற்கு பின் பத்மவிபூஷன் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- அருண்ஜெட்லி மற்றும் சுஷ்மா சுவராஜ் ஆகிய இருவரும் மத்திய அரசாங்கத்தின் முக்கிய அங்கம் வகித்தனர் மற்றும் பொதுவாழ்வில் சிறந்த மனிதர்களாகவும் மற்றும் சிறந்த பாராளுமன்றவாதிகளாகவும் திகழ்ந்தனர்.
- சுஷ்மா சுவராஜ் தேர்வாளர் அரசியலில் முக்கிய இடம் வகித்து ஒரு ஈர்ப்புத் தலைமையைப் பெற்று விளங்கினார்.
- அருண்ஜெட்லி சிறந்த வழக்கறிஞர்களாகவும் மற்றும் சிறந்த பாராளுமன்றவாதியாகவும் புகழப்பட்டவராவார்.

❖ **ஜம்மு காஷ்மீரில் மூத்த பத்திரிக்கையாளர் யூசுப் ஜமீல் என்பவர் ஜனநாயக கொள்கைக்கான 2019-2020** PEN **கௌரி லங்கேஷ் விருதுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**

- இந்த விருது, ரூ.1 லட்சம் ரொக்கத்தை உள்ளடக்கியதாகும்.

❖ **புகழ்பெற்ற இந்திய திரைக்கலைஞர் சஞ்சனா கபூர் என்பவர்** "Chevalier dans I'Ordre des Arts et des Lettres (Knight of the Order of Arts and Letters)" **என்ற பெருமைக்குரிய பிரெஞ்சு விருது வழங்கப்படவுள்ளார்.**

❖ **இந்திய சுற்றுச்சூழல் பொருளாதார நிபுணர் பவான் சுக்தேவ், பசுமைப் பொருளாதாரக் களத்தில் தனது தலைசிறந்த பணிக்காக ஜனவரி 27, 2020-ல் 2020 ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல் சாதனைக்கான டைலர் விருது** (Tyler Prize for Environmental Achievement) **வழங்கப்பட்டார்.**

- இவ்விருது, காலம் சென்ற ஜான் மற்றும் அலைஸ் டைலரால் 1973-ல் நிறுவப்பட்டது.

## அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்

❖ **ககன்யானுக்காக தேர்வு செய்யப்பட்ட இறுதியான நான்கு விண்வெளி வீரர்கள் இந்த மாதத்தின் மூன்றாம் வாரத்திலிருந்து ரஷ்யாவில் அவர்களின் பயிற்சியைத் தொடங்கவுள்ளனர்.**

- இப்பயிற்சி, மாஸ்கோவிலுள்ள Yuri Gagarin Cosmonaut Centre –ல் நடைபெறவுள்ளது.

- இது, ஜனவரி 1, 2020-ல் ISRO – வின் தலைவர் கே.சிவனால் அறிவிக்கப்பட்டது.
- ஏற்கனவே ககன்யான் திட்டத்திற்காக ஏழு இந்திய விமானப்படை சோதனை விமானிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு சென்ற நவம்பர் மாதத்தில் இந்தியா மற்றும் ரஷ்யாவில் பயிற்சியளிக்கப்பட்டது. மேலும், மற்ற ஐந்து நபர்கள் தேர்வு செய்யப்பட்டு டிசம்பரில் அவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.
- இந்த 12 நபர்களில் இறுதியாக நான்கு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு மட்டுமே இறுதி பயிற்சியளிக்கப்படவுள்ளது.

❖ **இந்திய வானியல் ஆராய்ச்சி அமைப்பு** (ISRO) **இந்த வருட முடிவில் சந்திராயன் - 3 ஐ ஏவவுள்ளது.**

- இந்த முகமை அதை ஏவுவதற்கு நவம்பர் 2020 ஐ இலக்காக நிர்ணயித்துள்ளது. ஆனால், அது அடுத்த ஆண்டின் ஆரம்பத்திற்கு தள்ளி வைக்கப்படலாம்.
- இந்த மூன்றாவது நிலவுத்திட்டத்திற்கு ரூ.600 கோடிக்குமேல் செலவு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
- அதன் lander, rover மற்றும் propulsion module ஆகிய மூன்றிற்கும் ரூ.250 கோடி செலவாகும். மேலும், அதை ஏவுவதற்கு GSLV Mark III என்ற ஏவுவாகனத்தின் சேவைச்செலவு ரூ.365 கோடியாகும்.
- சந்திராயன் - 3 என்பது lander, rover மற்றும் propulsion module ஆகிய மூன்று பகுதிகளைப் பெற்றுள்ளது.
- சந்திராயன் - 2 வின் திட்ட இயக்குநராக இருந்த எம்.வனிதா மாற்றப்பட்டு சந்திராயன் - 3 க்கு திட்ட இயக்குநராக பி.வீரமுத்து வேல் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்த வருடம் 25 செயற்கை கோள்களை ஏவுவதற்கு ISRO இலக்கு நிர்ணயித்துள்ளது.
- ISRO ஏற்கனவே, ரூ.120 கோடி செலவில் SSLV (Small Satellite Launch Vehicle) க்கான ஒரு புதிய ஏவுதளத்தை அமைப்பதற்கு வேண்டியிருந்தது.
- இது, தமிழ்நாட்டின் குலசேகரப் பட்டணத்தில் அமைக்கப்படும் ஏவுதளத்தின் ஒரு பகுதியாகும்.
- தமிழ்நாடு அரசாங்கம், ISRO வின் இரண்டாவது ஏவுதளத்திற்காக தூத்துக்குடி மாவட்டத்தில் 2300 ஏக்கர் நிலத்தை கையப்படுத்தத் தொடங்கியுள்ளது.
- தற்போது, செயற்கைக்கோள்கள் ஆந்திரப்பிரதேசத்திலுள்ள ஸ்ரீஹரிகோட்டா ஏவுதளத்திலிருந்து ஏவப்படுகின்றன.
- முதலாவது SSLV –வின் சோதனை இந்த வருடம் ஸ்ரீஹரிக்கோட்டாவில் நடைபெறும் மற்றும் ஆதித்யா திட்டம் 2020 ஆம் ஆண்டின் மத்தியில் நடப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
- இவ்வித SSLV க்கள் வானில் 500 கிலோ வரையான தரவுகளை மட்டுமே ஏவுவதற்கு பயன்படுத்தமுடியும்.

❖ **சீன தொலைபேசி உற்பத்தி செய்யும் நிறுவனமான** Xiaomi **இந்தியாவிற்குள் அதன் உற்பத்திகளில்** NaVIC chipsets **களை உள்ளடக்குவதற்கு** ISRO **அந்நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்துகிறது.**

❖ **இந்திய வானியல் ஆராய்ச்சி அமைப்பு** (ISRO), 'NETRA' **திட்டத்தின்கீழ் ஒரு ஒளியியல் தொலைநோக்கியை அமைப்பதற்கு வானியற்பியல் இந்திய நிறுவனத்துடன்** (Indian Institute of Astrophysics) **ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது.**

- இந்த 'NETRA' செப்டம்பர் 2019-ல் ISRO வால் தொடங்கப்பட்டது.
- இத்திட்டத்தின்கீழ், வட்டப்பாதைகளிலுள்ள தீங்குகளைப் பற்றி செயற்கைகோள்களுக்கு முன்னெச்சரிக்கைகளை வழங்குவதற்கு உற்றுநோக்கு வசதிகளை அமைக்க ISRO திட்டமிட்டுள்ளது.
- இத்திட்டம், பல்வேறு ரேடார்கள், தொலைநோக்கிகள், கட்டுப்பாட்டு மையங்கள் மற்றும் தகவல் ஏற்படுத்தும் அலகுகள் போன்றவற்றை பெற்றுள்ளது.
- தற்போது, இந்தியா 15 தகவல் தொடர்பு செயற்கைகோள்களையும், 13 தொலைவுணர்வு செயற்கைகோள்களையும் மற்றும் 8 வழிநடத்தும் செயற்கைகோள்களையும் இயக்குகிறது.
- இத்திட்டம் வான் குப்பைகளை அகற்றுவதற்கு நோக்கம் கொண்டுள்ளது.
- தற்போது, 7500 டன்னுக்குமேல் வானியல் குப்பைகள் உள்ளன.
- ISRO வை அடுத்து, DRDO வும் மற்றொரு "NETRA (Network Traffic Analysis)" திட்டத்தை செயல்படுத்துகிறது. குறிப்பாக, இணையதள போக்குவரத்தை சீர்படுத்தும் மென்பொருளை இது பெற்றுள்ளது.
- இது, ஆராய்ச்சி மற்றும் பகுத்தாய்வு பிரிவு (Research and Analysis Wing – RAW), புலனாய்வுக்கழகம் (Intelligence Bureau - IB) மற்றும் இந்திய அரசாங்கத்தின் மற்ற புலனாய்வு முகமைகளால் பயன்படுத்தப்படுகிறது.

❖ **இந்திய வம்சாவளி கோவாவில் பிறந்த விஞ்ஞானி வித்தால் தில்வி என்பவர் தற்போது** EGS77 **எனப் பெயரிடப்பட்டுள்ள இதற்கு முன் கண்டறியாத நட்சத்திரக் கூட்டத்தை கண்டுபிடித்துள்ளார்.**

❖ **Researchers at Monash University – have developed a new lithium-sulphur batteries that can replace lithium-ion batteries in the nearby future.**

❖ **பயிற்சி வானிலையாளர்களுக்கான இந்தியாவின் புதிய உலகத்தர வசதி, அடுத்த மூன்றாண்டுகளில் கர்நாடகாவின் சித்திரதுர்கா மாவட்டத்தில் பெங்களூரு-பூனே** NH4 **–ல் ஜல்லக்காரே என்ற இடத்தில் அமையவுள்ளது.**

- இந்திய வானியல் ஆராய்ச்சி அமைப்பு (ISRO) இத்திட்டத்திற்காக ரூ.2700 கோடியை முன்மொழிந்துள்ளது. அது, Human Space Flight Centre – HSFC என்ற மையத்தையும் உள்ளடக்கும்.
- அதற்காக, ஜல்லக்காரேவில் 400 ஏக்கர் நிலம் ஒதுக்கப்படவுள்ளது.

- இந்த HSFC ஜனவரி 2019 லிருந்து ISRO –வின் தலைமையிடத்தில் தற்காலிகமாக செயல்படுகிறது.
- ககன்யான் திட்டத்தின் நிறுவன இயக்குநராக எஸ்.உன்னிகிருஷ்ண நாயர் அறிவிக்கப்பட்டுள்ளார் மற்றும் திட்டஇயக்குநராக ஆர்.ஹட்டன் உள்ளார்.

❖ 'Pathanga Suchaka' **என்ற ஒரு புதிய செயற்கை நுண்ணறிவு** (AI) **அடிப்படையிலான முறைமை ஜனவரி 6-ல் 107வது இந்திய அறிவியல் காங்கிரசின் பக்கவாட்டுகளில் திறந்து வைக்கப்பட்டது.**

- இந்த முறைமை, செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி 800 வகை வண்ணத்துப்பூச்சிகள் மற்றும் 500 வகை அந்துப்பூச்சிகளைப் பற்றி குறிப்பிடுவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது, சுற்றுச்சூழல் அறிஞர் மற்றும் எழுத்தாளர் கே.என்.கணேஷையாவால் உருவாக்கப்பட்டதாகும். இவர், விவசாய அறிவியல் பல்கலைக்கழகத்துடன் (University of Agricultural Sciences - UAS) தொடர்புடையவர் ஆவார்.
- நாட்டில் கிட்டத்தட்ட 1600 வண்ணத்துப்பூச்சி வகைகளும் மற்றும் 800 அந்துப்பூச்சி வகைகளும் உள்ளன.

❖ **இந்தியா உள்ளடங்க பலநாடுகளைச் சேர்ந்த ஒரு விஞ்ஞானிகள் குழு இந்திய கோப்ராவின் மரபணுவை கண்டறிந்துள்ளனர்.**

- ஒவ்வொரு வருடமும் உலகில் விஷமுள்ள பாம்புகளால் கடிக்கப்படும் மக்கள் தோராயமாக 5 மில்லியனாவர். இதில் 4 லட்சம் பேர் ஊனமாகின்றனர் மற்றும் 1 லட்சம் பேர் இறந்து விடுகின்றனர்.
- இந்தியாவில், "Big 4 " கோப்ரா போன்ற பாம்புகள் கடித்து வருடத்திற்கு கிட்டத்தட்ட 46,000 பேர் இறக்கின்றனர் மற்றும் 1,40,000 பேர் இறந்து விடுகின்றனர்.
- உலகில் அதிக விஷமுள்ள பாம்பு இனங்களில் ஒன்றாக இந்திய கோப்ரா உள்ளது.

❖ **உலக சராசரி வெப்பநிலைப் பதிவை வருடம் வாரியாக ஒப்பிடும்போது, 2019 ஆம் ஆண்டு இரண்டாவது மிகவும் அதிகமான வெப்ப வருடமாக பதிவாகியுள்ளது என்பதை ஐரோப்பிய விஞ்ஞானிகள் நிச்சயித்துள்ளார்கள்.**

- 2016 ஆம் ஆண்டு உலகில் மிகவும் அதிகமான வெப்ப வருடம் ஆகும்.
- இரண்டாவதாக 2019 ஆண்டு உள்ளது.

❖ **இந்திய வானியல் ஆராய்ச்சி அமைப்பு** (ISRO), **வானில் இந்திய வானியலர்களை நிலையாக மதிப்பிடுதல் மற்றும் தொடர்பு கொள்வதற்கான அதன் சொந்த செயற்கைக்கோள் தகவல் தொடர்பு முறையை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளது.**

- ISRO ககன்யானின் முதல் மனிதனல்லா செயற்கைகோளை 2021-ல் ஏவவுள்ளது.
- ISRO 2022 வாக்கில் மனிதன் செல்லும் ககன்யானை ஏவவுள்ளது.

❖ **இந்திய வானியல் ஆராய்ச்சி அமைப்பு** (ISRO) **ஜனவரி 17, 2020-ல்** Ariane – 5 **என்ற ஏவு வாகனத்தில்** GSAT-30 **செயற்கைகோளை ஏவவுள்ளது.**

- அது, கௌரவ்விலுள்ள Ariane ஏவுதளத்திலிருந்து ஏவப்படும்.

- GSAT-30 என்பது ஒரு தகவல் தொடர்பு செயற்கைகோளாகும் மற்றும் அது INSAT-4A வை எடுத்துவிட முற்படுகிறது.
- இந்த GSAT-30 ன் ஆயுட்காலம் 15 வருடங்களாகும்.
- INSAT-4A என்பது பிரதானமாக தகவல் தொடர்பை வசதியாக்குவதற்கு 2005-ல் ஏவப்பட்டது.
- APPLE Experimental என்ற முதலாவது இந்திய 'சோதனை' செயற்கைகோள் Ariane வால் 1981-ல் ஏவப்பட்டது.
- அது, தொலைகாட்சி மற்றும் வானொலி தகவல் தொடர்புகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது.
- Ariane Space என்பது ஒரு வர்த்தக செயற்கைகோள் ஏவும் அமைப்பாகும். இது 1980-ல் நிறுவப்பட்டது. அதிலிருந்து அந்த அமைப்பு 23 இந்திய செயற்கைக்கோள்களை ஏவியுள்ளது.

❖ **US researchers – have developed the first-ever "living robot" or 'xenobot' by engineering bits of frog embryo to behave like "living, programmable organisms".**

❖ **உலக சுகாதார அமைப்பு** (WHO) **வருகின்ற வருடத்தின் உலக சுகாதார சவால்களின் அட்டவணையை வெளியிட்டுள்ளது.**

- இந்த அட்டவணை 13 உரிய அச்சுறுத்துதல்களை உள்ளடக்குகிறது.
- நுண்ணுயிர் எதிர்ப்பின் எதிர்ப்பு (Anti-Microbial Resistance - AMR) மற்றும் காலநிலை பிரச்சனை ஆகிய இரண்டும் 2019-ல் வெளியிடப்பட்ட 13 உரிய அச்சுறுத்தல்களில் முக்கியமானதாகும்.
- மலேரியா போன்ற தொற்றுநோய் பரவுவதன் பின்னணியில் மிக முக்கிய காரணமாக இருப்பது ஊட்டச்சத்து குறைவாகும். இந்த, ஊட்டச்சத்து குறைவை காலநிலை மாற்றம் அதிகரிக்கச் செய்கிறது.
- மாரடைப்பு, சுவாசப் பிரச்சனை, நுரையீரல் புற்றுநோய் போன்ற நோய்களின் காரணமாக உலகில் மொத்த இறப்புக்களின் கிட்டத்தட்ட 22 சதவீதம் நிகழ்கிறது.
- இந்த 13 அச்சுறுத்தல்களில் தடுப்பூசிகள் இருப்புக் குறைபாடு, நோய் அறியும் கருவிகள் மற்றும் மருந்துகளின் குறைபாடு போன்றவையும் முக்கிய இடம் வகிக்கின்றன.
- சுகாதார கவனப் பணியாளர்களின் குறைவான எண்ணிக்கையும் ஒரு முக்கிய உலக அச்சுறுத்தலாக உள்ளது.
- உலக சுகாதார அமைப்பின் கருத்துப்படி, 2030 வாக்கில் மருத்துவமனைகளில் பணிபுரிய கிட்டத்தட்ட 18 மில்லியன் சுகாதாரப் பணியாளர்கள் தேவைப்படுகின்றன.

❖ **இஸ்ரோவின் தகவல்தொடர்பு செயற்கைக்கோள்** GSAT-30, **ஜனவரி 17-ல் 2.35 முற்பகலில் பிரெஞ்சு கயானாவிலிருந்து ஐரோப்பிய வானியல் முகமையின் கனரக ஏவுவாகனம்** Ariane – 5 (VA 251) **ஆல் வெற்றிகரமாக ஏவப்பட்டது.**

- இது, இந்த ஆண்டின் நாட்டின் முதலாவது செயற்கைக்கோள் ஏவுதலாகும்.

❖ **Vyom Mitra, the prototype with feminine features – has been unveiled by ISRO for the first unmanned human spaceflight programme, Gaganyaan, slated for 2022.**

❖ **Researchers from Indian Institute of Technology (IIT), Madras and Karlsruhe Institute of Technology (KIT), Germany – have developed a new class of material for use as cathode or positive electrode that can increase the lifetime and the performance of lithium-ion (Li-ion) batteries.**

❖ **இந்தியாவின் முதலாவது** Super Fab Lab **ஜனவரி 25-ல் கேரளாவில் தொடங்கப்பட்டது.**

- இது, அமெரிக்காவிற்கு வெளியே (Massachusetts Institute of Technology – MIT) அமைந்துள்ள முதலாவது Fab Lab ஆகும்.
- எனவே, கேரளாவில் தொடங்கப்பட்ட Super Fab Lab இரண்டாவது ஆய்வுக்கூடமாகும்.

❖ **அறிவியலின் இந்திய நிறுவன** (IISc) **ஆராய்ச்சியாளர்கள் அரிசியைவிட சிப்பின் மீது ஒரு** through-the- wall radar (TWR) **கட்டப்பட்டதை மேம்படுத்தியுள்ளார்கள்.**

- அந்தக்குழு, மின்சார தகவல்தொடர்பு பொறியியல் துறையிலுள்ள இணைப்பேராசிரியர் கௌரப் பேனர்ஜியால் தலைமை வகிக்கப்பட்டது.

❖ **A team of Indian Institute of Science (IISc) and ISRO researchers – have developed "Space Bricks" using lunar soil simulant (LSS) to assist the construction of future settlements on Moon.**

❖ **India – has successfully 'phased – out' one of the most dangerous ozone – depleting chemical – Hydro Chloro Fluoro Carbon (HCFC) – 141 b as on January 1, 2020.**

## நூல்கள் மற்றும் ஆசிரியர்கள்

❖ **மத்திய உள்துறை அமைச்சர், அமித்ஷா சமீபத்தில் பிரதமர் நரேந்திரமோடியின் வாழ்க்கை அடிப்படையிலான** "Karmyodha Granth" **என்ற புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.**

- இந்தப்புத்தகம், பிரதம மந்திரி நரேந்திரமோடி தனது பதவிக்காலத்தின் பல்வேறு பணிகள் மற்றும் திட்டங்களை விலக்குகிறது.
- அது, பின்தங்கிய மக்களுக்கு சுகாதார வசதியை ஏற்படுத்தும் பிரதமர் நரேந்திரமோடியின் ஆயுஷ்மான் யோஜனாவை விளக்குகிறது.

## பிரபலங்கள்

❖ **ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்பு படையின்** (Islamic Revolutionary Guard Corps – IRGC's) **தலைவர் மேஜர் ஜெனரல் காசிம் சுலைமணி, ஈராக் தலைநகரான பாக்தாத்திலுள்ள பன்னாட்டு விமானம் நிலையம் அருகில் அமெரிக்க போர்விமானத் தாக்குதலால் கொல்லப்பட்டார்.**

- 62 வயதான ஜெனரல் காசிம் சுலைமணி ஈரான் நாட்டின் மிகப் பிரபலமானவராகவும் மற்றும் அந்நாட்டின் அடுத்த தலைவராக வருவதற்கு வாய்ப்புள்ளவராகவும் இருந்தார்.
- அவர், சிரியா லெபனான் மற்றும் ஈராக் போன்ற நாடுகளில் ஒரு நன்கறிந்த மாமனிதராகவும் இருந்தார்.

❖ **கேரளாவின் கத்தோலிக்க தேவாலயம், எர்ணாகுளம் பிராட்வேயிலுள்ள புனித பிரான்சிஸ் ஆசிஸி கேதிட்ரலில் ஜனவரி 21-ல் ஆர்ச்பிஷப் ஜோசப் அட்டிபெட்டியை இறைவனின் ஊழியனாக** (Servant of God) **அறிவிப்பதற்கு தீர்மானித்துள்ளது.**

- அவரின் ஐம்பதாவது நினைவுதினம் அனுசரிக்கப்படும் வேலையில் அவருக்கு இப்பதவியும் அறிவிக்கப்படவுள்ளது.
- இவர் கொச்சி துறைமுகம் குறுக்கேவுள்ள ''வைபீன்'' தீவில் ஜீன் 25, 1894-ல் பிறந்தார் மற்றும் ஜனவரி 21, 1970-ல் மறைந்தார்.

❖ **ஹைதராபாத்திலுள்ள ஒரு இந்திய-அமெரிக்கரான ராஜா ஜான் உர்புத்தூர் சாரி என்பவர் ஆரம்ப வானியலர் பயிற்சி பெற்ற 11 நாசா பட்டதாரிகளில் ஒருவராவார் மற்றும் நாசாவின் நிலவுத்திட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**

❖ **கேப்டன் தானியா ஜெர்கில் (பெண்) ஜனவரி 15, 2020-ல் இராணுவ தின அணிவகுப்பில் அணிவகுப்பு படைக்கு தலைமை வகிப்பார்.**

- தானியா இராணுவத்தில் பணிபுரியும் அவரது குடும்பத்தில் நான்காவது தலைமுறையாவார். அவர் 2017-ல் சென்னையிலுள்ள அலுவலர்கள் பயிற்சி கழகத்தில் பயிற்சி முடித்து அதிகாரியானார்.
- மேலும், இவர் ஜனவரி 26-ல் நடைபெறும் குடியரசுதின அணிவகுப்பில் ஒரு படைப்பிரிவிற்கு தலைமை வகிப்பார்.

❖ **உலகின் மிகவும் குள்ளமான மனிதன் என்று கின்னஸ் உலகப் பதிவில் இடம் பெற்ற ஹஜேந்திர தாபா மகர் என்பவர் ஜனவரி 17-ல் நேபாளில் மரணம் அடைந்தார்.**

- அவர், 67.08 செ.மீ உயரமுடையவர். அவர் முதன் முதலில் இப்பட்டத்தை 2010-ல் பெற்றர். மீண்டும் அதை அவர் 2015-ல் பெற்றுள்ளார்.

❖ **ரஷ்ய பிரதமர் டிமிட்ரி மெட்வெடவ் தனது அமைச்சரவையுடன் ஜனவரி 15, 2020-ல் ஜனாதிபதி விளாடிமிர் புட்டினிடம் தனது இராஜினாமாவை சமர்பித்தார்.**

- ஜனாதிபதி புட்டினின் கருத்திற்கிணங்க, மெட்வெடவ்வின் அமைச்சரவை அதன் இலக்குகளை சாதிப்பதில் தோல்வியடைந்துள்ளது.
- பின்னர், ஜனாதிபதி புட்டின் நாட்டின் புதிய பிரதமராக மிகாயில் மிஸ்ஹுஸ்டினின் பெயரை பரிந்துரைத்தார்.
- மிஸ்ஹுஸ்டின் நாட்டின் வரித்துறையின் தலைவராக இருந்தார்.

❖ **கேப்டன் தானியா சேர் கில் என்ற பெண் குடியரசுதின அணிவகுப்பில் 147 பணியாளர்கள் அடங்கிய ஒரு அனைத்து ஆண்கள் படைப்பிரிவிற்கு தலைமை வகிப்பார்.**

- கேப்டன் தானியா மூன்று தலைமுறைகளாக இராணுவத்தில் பணிபுரிந்த குடும்பத்தில் பிறந்தவராவார்.
- இவர் பஞ்சாப்பின் தானியா மாவட்டத்திலுள்ள கோசியார்பூரைச் சேர்ந்தவர் மற்றும் இராணுவத்தின் முதல் பெண் அதிகாரியாவார்.

❖ **45 வயதான மானிஷா மாஸ்கி, சென்ட்ரல் மத்திய இரயில்வேயில் தானே – பான்வால் வழித்தடத்தில் AC இரயில் ஓட்டுநராக உள்ளார். இவர் ஜனவரி 30 லிருந்து மத்திய இரயில்வேயில் AC இரயில் ஓட்டும் முதல் பெண்ணாக உள்ளார்.**

# இரங்கல்

❖ **துரம்ரானின் கடைசி மஹாராஜாவும் மற்றும் முதல் மக்கள் அவையின் கடைசியாக வாழ்ந்த உறுப்பினருமான கமல்சிங் தனது 94வது வயதில் காலமானார்.**

- 1952-ல் முதலாவது மக்களவைக்கு தனது 25 வயதில் நாட்டின் மிகவும் இளமையான MP ஆக கமல்சிங் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1962 வரை சுயேட்சையாக லோக்சபாவில் பக்சார் பாராளுமன்ற தொகுதி பிரதிநிதியாக அவர் இருந்தார்.
- அவர், 1989 மற்றும் 1991 பாராளுமன்ற தேர்தல்களில் பக்சார் தொகுதியில் போட்டியிட்டார். ஆனால், வெற்றி பெறவில்லை.
- அவர், பழைய ஷஹாபாத் பகுதியில் ஏழை மக்களுக்காக அதிக எண்ணிக்கையுள்ள கல்வி நிறுவனங்கள் மற்றும் சுகாதார வசதிகளை ஆரம்பித்தார்.

❖ **முன்னாள் தமிழ்நாடு தலைமைச்செயலர் டி.வி.ஆன்டனி தனது 86 வயதில் ஜனவரி 24-ல் சென்னையில் காலமானார்.**

# தேசியதினம்

❖ **ஜனவரி 9 – பிரவேசி பாரதிய திவாஸ் ஆகும்.**

- இந்தநாள், இந்திய மேம்பாட்டிற்கு வெளிநாடுவாழ் இந்தியர்கள் பங்களித்துள்ளதை அங்கீகரிக்கும் வண்ணம் கொண்டாடப்படுகிறது.
- இது, முதன்முதலில் 2003-ல் அனுசரிக்கப்பட்டது.
- இந்தநாள் 1915-ல் மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு வந்தார். அதனால், அந்த நாளை பிரவேசி பாரதிய திவாஸ் என்று அனுசரிக்கப்படுகிறது.
- 2019-ல் அந்த நாள் உத்திரபிரதேசத்திலுள்ள வாரணாசியில் இந்திய அரசாங்கத்தால் கொண்டாடப்பட்டது.
- 2018-ல் அந்த நாள் சிங்கப்பூரில் அனுசரிக்கப்பட்டது.

- இந்த நாளில் ஒவ்வொரு வருடமும் பிரவேசி பாரதிய சம்மன் விருதுகள் (Pravasi Bharatiya Samman Awards – PBSA) வழங்கப்படுகின்றன.
- இவ்விருதுகள் வெளிநாடுவாழ் இந்தியர்கள் அல்லது அவர்கள் ஏற்படுத்தியுள்ள அரசுசாரா நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன.

❖ **ஜனவரி 15, இந்திய இராணுவ தினமாகும்.**

- இந்தியா ஜனவரி 15-ல் 72வது இராணுவ தினத்தை கொண்டாடுகிறது.
- இந்தநாளில் டெல்லியிலுள்ள அணிவகுப்பு மைதானத்தில் இராணுவ தின அணிவகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்தநாள் 1949-ல் ஜெனரல் பிரான்சிஸ் பட்ஜரிடமிருந்து ∴பீல்டு மார்ஷல் கே.எம்.கரியப்பா பதவியேற்றுக்கொண்டார்.
- ஜெனரல் பட்ஜர் இராணுவ தலைமைப் பதவியில் ஜனவரி 1, 1948 லிருந்து ஜனவரி 15, 1949 வரை பணியாற்றினார்.
- கே.எம்.கரியப்பா 1947 ஆம் ஆண்டில் இந்தோ-பாக்கிஸ்தான் யுத்தத்தின்போது மேற்கத்திய எல்லைப்பகுதியின் இந்திய இராணுவத்திற்கு தலைமை வகித்தார்.
- அவருடைய பணி ஓய்வுக்கு பின்பு, 1956 வரை ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்திலுள்ள இந்திய தூதரகங்களில் பணியாற்றியுள்ளார்.
- இந்திய அரசாங்கம் 1986-ல் ∴பீல்டு மார்ஷல் என்ற பட்டத்தை வழங்கி பெருமைப்படுத்தியது.

❖ **இந்திய வானிலை ஆய்வுத்துறை** (Indian Meteorological Department – IMD) **ஜனவரி 15, 2020-ல் அதன் 145 வது நிறுவன தினத்தை கொண்டாடியது.**

- இத்தினம், புவியியல் அறிவியல்களின் மத்திய அமைச்சகத்தின் கீழுள்ள இந்திய வானியல் ஆராய்ச்சித்துறையால் கொண்டாடப்படுகிறது.
- இத்தினம் முதன் முதலில் 1875-ல் அனுசரிக்கப்பட்டது.
- உலக வானியல் ஆராய்ச்சி அமைப்பிடமிருந்து (World Meteorological Organization – WMO) இந்திய வானியல் ஆராய்ச்சித்துறையின் ஐந்து அமைப்புகள் சிறந்த அறிமுகத்தைப் பெற்றுள்ளன.
- அவை சென்னை, மும்பை, பூனே, திருவனந்தபுரம் மற்றும் பான்ஜிம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள வானியல் ஆராய்ச்சி மையங்களாகும்.
- உலக வானியல் ஆராய்ச்சி அமைப்பின் ஆறு பிராந்திய சிறப்பு மையங்களில் (IMD) யும் ஒன்றாகும்.
- IMD ன் தலைமையிடம் டெல்லியில் அமைந்துள்ளது.
- IMD தனது செயல்பாடுகளை இந்தியா மற்றும் அண்டார்டிக்காவில் அமைந்துள்ள நிலையங்கள் மூலமாக மேற்கொள்கிறது.

❖ **ஜனவரி 19 – தேசிய நோய்த்தடுப்பு தினமாகும்**

- இத்தினம் 2020 ஆம் ஆண்டின் பல்ஸ் போலியோ திட்டத்தின் ஒரு பகுதியாக நாடுமுழுவதும் அனுசரிக்கப்பட்டது.
- இந்தியா 2012-ல் போலியோவை முழுமையாக ஒழித்துள்ளது.

❖ **ஜனவரி 24 – தேசிய பெண் குழந்தை தினமாகும்.**

- இத்தினம் பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் இந்திய அரசாங்கத்தால் 2008-ல் முதன்முதலில் அனுசரிக்கப்பட்டது.
- இந்திய அரசாங்கம், சமூகத்தில் பெண்களை சமநிலைப்படுத்தும் நோக்கத்தில் இத்தினத்தை ஒரு இயக்கமாக ஆரம்பித்துள்ளது.
- பன்னாட்டு பெண் குழந்தை தினம் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 11-ல் கொண்டாடப்படுகிறது.

❖ **ஜனவரி 25 – தேசிய வாக்காளர்கள் தினம்**

- இந்நாளின் கொண்டாட்டம், நாட்டின் இளைஞர்களிடையே வாக்களிக்கும் விழிப்புணர்வை உருவாக்கும் நோக்கமாகும்.
- 2020 ஆம் ஆண்டின் மையக்கருத்து ‘‘பலமான ஜனநாயகத்திற்கான வாக்காளர் கல்வி’’ என்பதாகும்.
- தேசிய வாக்காளர் தினம் முதன்முதலாக ஜனவரி 25, 2011-ல் அனுசரிக்கப்பட்டது.
- அந்தநாள் தேர்தல் ஆணையத்தின் 61 வது நிறுவன தினமாகும்.
- இந்தியத் தேர்தல் ஆணையம் ஜனவரி 25, 1950-ல் ஏற்படுத்தப்பட்டது.
- தேர்தல் ஆணையத்தின் முக்கியமான பங்குப்பணி நாடுமுழுவதும் ஒவ்வொரு வருடமும் ஜனவரி 1-ல் 18 வயதை அடைந்த தகுதியுள்ள வாக்காளர்களை கண்டறிவதாகும்.
- தேர்தல் ஆணையம் வாக்காளர்களுக்கு அடையாள அட்டையை வழங்கியுள்ளது.
- தேர்தல் ஆணையம், நாட்டில் ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி பதவிகளுடன் இந்தியாவிலுள்ள மத்திய மாநில தேர்தல்களை நடத்தக் கூடிய பொறுப்பைக் கொண்ட ஒரு தன்னிச்சையான அரசியலமைப்பு ஆணையகமாகும்.

❖ **ஜனவரி 24 – பன்னாட்டு கல்வி தினமாகும்.**

- இந்த நாள், அமைதி மற்றும் மேம்பாட்டில் கல்வியின் பங்கை குறிப்பிடுவதாகும்.
- ஐ.நா சபை டிசம்பர் 3, 2018-ல் ஒரு தீர்மானம் கொண்டு வந்து ஜனவரி 24 ஐ பன்னாட்டு கல்வி தினமாக அறிவித்தது.
- இந்தவருடம் உலகம் முழுவதும் இரண்டாவது பன்னாட்டு கல்வி தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்தியாவில் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 11-ல் தேசிய கல்வி தினம் அனுசரிக்கப்படுகிறது.

# தரப்படுத்துதல்

❖ Economist **என பத்திரிக்கையின் சகோதரி நிறுவனமான** Economist Intelligence Unit (EIU) **வால் வெளியிடப்பட்ட மதிப்பீட்டின்படி, உலகில் மிகவேகமாக வளரும் முதல் 10 நகரங்களில் கேரளாவில் அமைந்துள்ள மூன்று நகரங்கள் இடம்பெற்றுள்ளன.**

- மலப்புரம், கேரளா - 44%

- காந்தோ, வியட்நாம் - 37%
- சுக்லான், சீனா - 37%
- கோழிக்கோடு, கேரளா - 35%
- அபுஜா, நைஜீரியா - 34%
- சுசௌ, சீனா - 33%
- ஜாரியா, UAE - 32%
- புட்டியான், சீனா - 32%
- மஸ்கட், ஓமன் - 31%
- கொல்லம், கேரளா - 31%

❖ **ஆற்றல் திறன் கழகம்** (Bureau of Energy Efficiency – BEE), **ஆற்றல் திறன் பொருளாதாரத்திற்கான கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் "மாநில ஆற்றல் சக்தி குறியீடு 2019" ஐ சமீபத்தில் தொடங்கியுள்ளது.**

- இந்தக் குறியீடு, நிலக்கரி, மின்சாரம், எரிவாயு மற்றும் எண்ணெய் போன்ற அடிப்படை ஆற்றல் தேவைகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கை 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்திலுள்ள ஆற்றல் சக்தி திட்டங்களில் வளர்ச்சியை மதிப்பீடு செய்கிறது.
- இந்த வருடம் ஒரு புதிய குறியீடாக ஆற்றல் பாதுகாப்பு கட்டுமான விதிமுறையை (Energy Conservation Building Code) இந்த BEE உள்ளடக்கியுள்ளது.
- அந்தக் குறியீட்டின்படி, கர்நாடகா, ஹிமாச்சலப் பிரதேசம், ஹரியானா மற்றும் புதுச்சேரி போன்ற மாநிலங்கள் சிறந்த செயல்பாட்டாளர்களாக கண்டறியப்பட்டுள்ளன.
- மணிப்பூர், ஜார்கண்ட், இராஜஸ்தான் மற்றும் ஜம்மு மற்றும் காஷ்மீர் போன்ற மாநிலங்கள் மிகக்குறைந்த செயல்பாட்டாளர்களாக உள்ளன.
- நாட்டில் இவ்வித முதல் குறியீடு ஆகஸ்டு 2018-ல் வெளியிடப்பட்டது.

❖ **பகுத்தாய்வு நிறுவனமான** AppAnnie **ன் சமீபத்திய** 'State of Mobile' **அறிக்கையின்படி, செயலி பதிவிறக்கங்களுக்கான உலகளவில் இரண்டாவது மிகப்பெரிய சந்தையாக இந்தியா தரப்படுத்தப்பட்டுள்ளது.**

❖ **சமீபத்தில் வெளியிடப்பட்ட ஹென்லே கடவுச்சீட்டு** (Passport) **குறியீட்டில் 84வது தரத்தை இந்தியா பெற்றுள்ளது.**

- கடந்த மூன்று வருடங்களாக ஜப்பான் முதல் தரத்தைப் பெற்றுவருகிறது.
- ஜப்பானின் கடவுச்சீட்டைப் பெற்றுள்ளவர்கள் விசா இல்லாமல் 191 நாடுகளை பார்வையிடலாம்.
- தர அடிப்படையில், சிங்கப்பூர் (2), ஜெர்மனி (3), தென்கொரியா (3), இத்தாலி (4), பின்லாந்து (4), ஸ்பெயின் (5), லக்சம்பர்க் (5) மற்றும் டென்மார்க் (5).
- 2006-ல், இந்த குறியீட்டின் தொடக்க ஆண்டில் இந்தியா 71வது தரத்தைப் பெற்றிருந்தது.
- தற்போது, இந்திய கடவுச்சீட்டுப் பெற்றிருப்போர்கள் விசா இன்றி 58 நாடுகளுக்கு போகலாம்.

❖ **மஹாராஷ்டிரா 373 பசுமை கட்டிடங்களுடன் தொடர்ந்து இரண்டாவது முறையாக அமெரிக்க பசுமை கட்டிடக்கவுன்சிலின் LEED பசுமைக் கட்டிட சான்றிதழைப் பெற்று முதலிடம் வகிக்கிறது.**

- மஹாராஷ்டிரா நாட்டில் முதலிடத்தைப் பெற்றதைத் தொடர்ந்து, இரண்டாவதாக கர்நாடகாவும், மூன்றாவதாக ஹரியானாவும், நான்காவதாக தமிழ்நாடும் மற்றும் ஐந்தாவதாக உத்திரபிரதேசமும் வந்துள்ளன.
- சென்ற வருடத்தைவிட இந்த வருடம் ஹரியானா தமிழ்நாட்டைப் பின்னுக்குத்தள்ளி மூன்றாம் இடம் பிடித்துள்ளது.

❖ **இந்தியா, நாட்டில் பிரதானமாக சிவில் உரிமைகள் பாதிக்கப்படுவதற்கிணங்க, 167 நாடுகளுக்கிடையேயான ஜனநாயக குறியீட்டில் சென்ற வருடத்தைவிட 10 இடங்கள் பின்னுக்குப் போய் 51 வது இடத்தைப் பெற்றுள்ளது.**

- இந்தியா 2018-ல் 7.23 புள்ளியை (10க்கு) பெற்று, 2019-ல் 6.9 புள்ளியை மட்டுமே பெற்றுள்ளது.
- இந்தியாவின் ஜனநாயக குறியீடு மிகவும் குறைவாக 2006-ல் பதிவானது.
- அதேபோல, இந்தியாவின் ஜனநாயக குறியீடு 7.91 என்று உயர்ந்தபட்சமாக 2014-ல் பதிவானது.
- இந்த ஜனநாயக குறியீட்டில் 167 நாடுகளிடையே நார்வே முதலிடத்தையும் (9.8 புள்ளிகள்) மற்றும் தென் கொரியா கடைசி இடத்தையும் (1.08 புள்ளிகள்) பெற்றுள்ளன.
- இரண்டாம் இடத்தை நியூசிலாந்தும் (9.58 புள்ளிகள்), மூன்றாம் இடத்தை ஸ்வீடனும் (9.39 புள்ளிகள்), நான்காம் இடத்தை நியூசிலாந்தும் (9.26 புள்ளிகள்) மற்றும் ஐந்தாம் இடத்தை பின்லாந்தும் (9.25 புள்ளிகள்) பெற்றுள்ளன.

❖ **இந்தியாவின் 2019 ஆம் ஆண்டுக்கான ஊழல் கருத்து குறியீட்டு தரத்தில் சென்ற வருடத்தோடு ஒப்பிடுகையில் 70 லிருந்து 80-க்கு குறைந்துள்ளது.**

- இந்த ஊழல் கருத்துக் குறியீடு, தாவோசில் உலகப் பொருளாதார அமைப்பின் வருடாந்தர கூட்டத்தின் போது, ஜனவரி 23-ல் "Transparency International" வெளியிடப்பட்டது.
- டென்மார்க் மற்றும் நியூசிலாந்து ஆகிய இருநாடுகளும் 87 புள்ளிகளுடன் முதலிடத்தையும் இந்தியா 41 புள்ளிகளுடன் 80வது இடத்தையும் பெற்றுள்ளன.
- சென்ற வருடத்தைப் போல இந்த வருடமும் இந்தியா 100-க்கு 41 புள்ளிகளைப் பெற்றுள்ளது.
- இந்தியாவைப் போலவே 80வது இடத்தைப் பெற்று பெனின், சீனா, மொராக்கா மற்றும் கானா போன்ற நாடுகள் உள்ளன.
- இந்தியாவின் அண்டை நாடான பாகிஸ்தான் அந்த அட்டவணையில் 120 வது இடத்தைப் பெற்றுள்ளது.
- அந்த அட்டவணையில் மேல்மட்ட இடங்களைப் பெற்றுள்ள நாடுகள் நியூசிலாந்து மற்றும் டென்மார்க் (ஒவ்வொன்றும் 87), பின்லாந்து (86), சிங்கப்பூர் (85), ஸ்வீடன் (85) மற்றும் ஸ்விட்சர்லாந்து (85) போன்றவையாகும்.

- கீழ்மட்டத்திலுள்ள நாடுகள் சிரியா, தெற்கு சூடான் மற்றும் சோமாலியா போன்ற நாடுகள் முறையே 13, 12 மற்றும் 9 புள்ளிகளைப் பெற்றுள்ளன.

❖ **உலகளவிலும் மற்றும் நாட்டளவிலும் அதிகப் போக்குவரத்து நிறைந்த நகரமாக பெங்களூரு அறிவிக்கப்பட்டுள்ளது.**

- டாம் டாம் (Tom Tom's) என்ற வாகன வழிகாட்டும் நிறுவனம் இந்த ஆய்வை மேற்கொண்டு அட்டவணை வெளியிட்டுள்ளது.
- ஆறு கண்டங்களிலுள்ள 57 நாடுகள் கணக்கில் எடுக்கப்பட்டு அவற்றில் 416 நகரங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
- உலகிலுள்ள அதிகம் போக்குவரத்து நிறைந்த நகரங்களில் முதல் 10 நகரங்களுக்குள் நான்கு இந்திய நகரங்கள் இடம்பெற்றுள்ளன.
- உலகில் போக்குவரத்து இடையூறு அதிகமுள்ள முதல் 10 நகரங்கள்:
  1. பெங்களூரு, 2.மனிலா, 3. போகாடா, 4.மும்பை, 5.பூனே, 6.மாஸ்கோ, 7. லிமா, பெரு, 8.டெல்லி, 9. இஸ்தான்புல் மற்றும் 10.ஜகார்த்தா

❖ **சமீபத்தில் உலகப் பொருளாதார அமைப்பின்** (WEF) **வருடாந்திர கூட்டத்தில் வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டின் உலக திறமை போட்டிக் குறியீட்டில்** (Global Talent Competitive Index – GTCI) **இந்தியா 8 தரங்கள் முன்னேறி 72வது தரத்தைப் பெற்றுள்ளது.**

- இதில் ஸ்விட்சர்லாந்து முதல் இடத்தையும், அமெரிக்கா இரண்டாம் இடத்தையும் மற்றும் சிங்கப்பூர் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.
- இந்தக் குறியீட்டில் முதல் 10 நாடுகள் மற்றும் மதிப்பெண்கள் பின்வருமாறு:

| எண் | நாடு | மதிப்பெண் |
|---|---|---|
| 1. | ஸ்விட்சர்லாந்து | 81.26 |
| 2. | அமெரிக்கா | 79.09 |
| 3. | சிங்கப்பூர் | 78.48 |
| 4. | ஸ்வீடன் | 75.82 |
| 5. | டென்மார்க் | 75.18 |
| 6. | நெதர்லாந்து | 74.99 |
| 7. | பின்லாந்து | 74.49 |
| 8. | லக்சம்பர்க் | 73.94 |
| 9. | நார்வே | 72.91 |
| 10. | ஆஸ்திரேலியா | 72.53 |
| 72. | இந்தியா | 40.42 |

❖ **கீன்பீஸ் இந்திய அறிக்கை** Airpocalypse IV **ன்படி, நாட்டிலுள்ள மிகவும் மாசடைந்த நகரங்களில் ஜார்கண்ட் மாநிலத்தின் நிலக்கரி அடிப்படைத் தொழில் நகரமான ஜாரியா உள்ளது.**

- தன்பாத் என்ற ஜார்கண்ட்டிலுள்ள மற்ற மாநிலம் இந்தியாவில் இரண்டாவது மிகவும் மாசடைந்த நகரமாக உள்ளது.
- தன்பாத் என்பது நிலக்கரி இருப்புகள் மற்றும் தொழிற்சாலைக்கான நகரமாக அறியப்படுகிறது.

## பன்னாட்டு தினம்

❖ **ஜனவரி 4, உலக பிரெய்லி தினமாகும்.**

- இத்தினம், கண்பார்வையற்றவர்களுக்கான 6 புள்ளிகள் வடிவமைப்பின் மொழியான பிரெய்லி முறையைக் கண்டுபிடித்தவரான லூயிஸ் பிரெய்லியின் பிறந்த தினமாக கொண்டாடப்படுகிறது.
- லூயிஸ் பிரெய்லி பிரான்சில் பிறந்தார் மற்றும் தனது மூன்றாவது வயதில் இரண்டு கண்களையும் இழந்தார்.
- இத்தினம், தகவல்துறையின் வழிமுறையான பிரெய்லியின் முக்கியத்துவத்தைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப்படுகிறது.
- அமெரிக்காவால் கொண்டாடப்பட்ட முதலாவது உலக பிரெய்லி தினம் 2019 லிலும் அனுசரிக்கப்பட்டது.
- இந்த பிரெய்லி முறை 6 புள்ளிகளைப் பெற்று அதற்கு ஒவ்வொன்றிற்கும் ஒரு எண் குறிப்பிடப்படுகின்றது. இதன் உதவியால் கண் பார்வையற்றோர் படிக்கவும் மற்றும் எழுதவும் முடியும்.
- இயலாத நபர்களின் உரிமைகள் மீதான ஒப்பந்தம் 2006-ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது, இயலாத நபர்களின் உரிமைகள் மற்றும் நலத்தைப் பாதுகாக்கும் நோக்கம் கொண்டுள்ளது.
- உலக சுகாதார அமைப்பின் கருத்திற்கிணங்க, உலகில் கிட்டத்தட்ட 36 மில்லியன் மக்கள் கண்பார்வையின்றி பாதிக்கப்பட்டுள்ளார்கள் மற்றும் 2016 மில்லியன் மக்கள் நடுத்தரநிலையிலிருந்து முழுவதும் கண்பார்வையற்ற நிலையைப் பெற்றுள்ளன.

❖ **ஜனவரி 10, உலக இந்தி தினமாகும்.**

- முன்னாள் இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் இந்த நாளை 2006-ல் அறிவித்தார்.
- உலகில் ஐந்தாவது அதிகமான மக்கள் பேசும் மொழியாக இந்தி உள்ளது.
- ஆனால், தேசிய இந்தி தினம் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 14-ல் கொண்டாடப்படுகிறது. ஏனென்றால், செப்டம்பர் 14, 1949-ல் அரசமைப்பு சபையால் இந்தி மொழிக்கு அலுவலக மொழி அந்தஸ்து கொடுக்கப்பட்டது.
- இத்தினம், பியோகர் ராஜேந்திர சிம்ஹாவின் பிறந்தநாளைக் குறிக்கிறது.
- அவரின் 50வது பிறந்தநாளில் இந்தியாவின் அலுவலக மொழியாக இந்தி ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இம்மொழி, உலகில் கிட்டத்தட்ட 43 கோடி மக்களால் பேசப்படுகிறது.
- இந்தி, தேவனாகிரி எழுத்தில் சமஸ்கிருதத்திலிருந்து பெறப்பட்டது என்று நம்பப்படுகிறது.

❖ **ஜனவரி 12 – தேசிய இளைஞர் தினம்**

- இத்தினம் சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாளில் கொண்டாடப்படுகிறது.
- மத்திய விளையாட்டுகள் மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சகம் இந்த வருடம் உத்திரபிரதேச மாநிலத்தை மையப்படுத்தி இந்நாளை கொண்டாடுகிறது.
- இத்தினம் 1985 லிருந்து நாடுமுழுவதும் அனுசரிக்கப்படுகிறது.

- இத்தினத்தில் 1995 லிருந்து நாடுமுழுவதும் தேசிய இளைஞர் திருவிழாவும் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த வருடம், இத்திருவிழாவின் 23வது நிகழ்வு உத்திரபிரதேசத்தின் லக்னோவில் ஜனவரி 12, 2020 முதல் ஜனவரி 16 வரை நடத்தப்படும்.
- 2020 ஆம் ஆண்டின் மையக்கருத்து "தகுதியான இளைஞர்கள், தகுதியான இந்தியா (Fit Youth Fit India)" என்பதாகும்.
- அந்த விழாவில், பரதநாட்டியம், ஒடிசி, மணிப்புரி மற்றும் குச்சிப்புடி உள்ளடங்கிய பல்வேறு தொன்மையான நாட்டிய திட்டங்களும் நடத்தப்படவுள்ளன.

# அறிக்கை

**தமிழ்நாடு ஊரக உள்ளாட்சி தேர்தல்கள் - முடிவுகள் மீதான ஒரு மேம்பாடு**

❖ **மாவட்ட பஞ்சாயத்து கவுன்லர்கள்:**

- தி.மு.க - 243 இடங்கள் (47.18%)
- ஆ.தி.மு.க - 214 இடங்கள் (41.55%)
- காங்கிரஸ் - 15 இடங்கள் (2.91%)
- பிஜேபி - 07 இடங்கள் (1.36%)
- சிபிஐ - 07 இடங்கள் (1.36%)
- தேமுதிக - 03 இடங்கள் (0.58%)
- சிபிஎம் - 02 இடங்கள் (0.39%)
- மற்றவர்கள் - 22 இடங்கள் (4.27%)
- அறிவிக்காதது - 02 இடங்கள் (0.39%)

❖ **ஊராட்சி ஒன்றிய கவுன்லர்கள்:**

- ன
- தி.மு.க - 2092 இடங்கள் (41.10%)
- ஆ.தி.மு.க - 1763 இடங்கள் (34.64%)
- காங்கிரஸ் - 131 இடங்கள் (2.57%)
- பிஜேபி - 97 இடங்கள் (1.91%)
- சிபிஐ - 84 இடங்கள் (1.65%)
- தேமுதிக - 62 இடங்கள் (1.22%)
- சிபிஎம் - 33 இடங்கள் (0.65%)
- மற்றவர்கள் - 795 இடங்கள் (15.62%)
- அறிவிக்காதது - 03 இடங்கள் (0.65%)

❖ **மொத்தம் முடிவுகள் அறிவிக்கப்பட்டவை:**

- மாவட்ட பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்கள் - 513/515
- ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் - 5087/5090

- கிராம ஊராட்சி தலைவர்கள் - 9586/9624
- கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் - 73187/76746

❖ **போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்:**

- கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் - 18137
- கிராம ஊராட்சி தலைவர்கள் - 410
- ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் - 23
- முதல் கட்ட தேர்தலில் 24,680 வாக்குச்சாவடிகளும் மற்றும் இரண்டாவது கட்ட தேர்தலில் 25,008 வாக்குச்சாவடிகளும் பயன்படுத்தப்பட்டன.
- ஒட்டுமொத்தத்தில் 27 மாவட்டங்களில் நடந்த ஊரக உள்ளாட்சி அமைப்பு தேர்தல்களில் 77.46 சதவீத வாக்குகள் பதிவாயின.

## இந்திய சுற்றுலா – ஓர் அறிக்கை

❖ **இரண்டாவது வருடமாக (2018) தமிழ்நாடு, இந்திய சுற்றுலாவில் முன்னிலை வகிக்கிறது.**

- 2018-ல் சுற்றுலாப் பயணியர் வருகைபுரிந்த முதல் ஐந்து மாநிலங்கள்
  1. தமிழ்நாடு - 39.2 கோடி
  2. உத்திரபிரதேசம் - 28.8 கோடி
  3. கர்நாடகா - 21.5 கோடி
  4. ஆந்திரபிரதேசம் - 19.5 கோடி
  5. மகாராஷ்டிரா - 12.5 கோடி
- 2018-ல் பன்னாட்டு சுற்றுலாப் பயணியர் வருகைபுரிந்த முதல் 5 மாநிலங்கள்
  1. தமிழ்நாடு - 60.7 லட்சம்
  2. மகாராஷ்டிரா - 50.8 லட்சம்
  3. உத்திரபிரதேசம் - 37.8 லட்சம்
  4. டெல்லி - 27.4 லட்சம்
  5. ராஜஸ்தான் - 17.5 லட்சம்

## குடியரசுதின அட்டவணை எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறது? – ஓர் அறிக்கை

❖ **எந்த அட்டவணை முன்மொழிவுகள் குடியரசு தினம் 2020-காக தேர்வு செய்யப்பட்டன?**

- 15 மாநிலங்கள், 1 யூனியன் பிரதேசம் மற்றும் 6 அமைச்சகங்கள் அல்லது துறைகள் (ஒட்டுமொத்தம் - 22) போன்றவை இந்த வருட குடியரசுதினத்தின் அட்டவணையாக தேர்வுசெய்யப்பட்டன.
- மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிடமிருந்து 32 முன்மொழிவுகள் மற்றும் அமைச்சகங்கள் மற்றும் துறைகளிடமிருந்து 24 முன்மொழிவுகள் ஆக மொத்தம் 56 முன்மொழிவுகள் பெறப்பட்டதில் 22 முன்மொழிவுகள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டன.

❖ **எவ்வாறு அட்டவணைகள்** (Tableaux) **தேர்வு செய்யப்படுகின்றன?**

- மத்திய பாதுகாப்பு அமைச்சகம் இந்த அட்டவணைக்கான தேர்வு முறைகளை நடத்துகிறது.

- ஒரு நிபுணர்குழு, மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், அமைச்சகங்கள் மற்றும் துறைகளிடமிருந்து முன்மொழிவுகளை பல்வேறு களங்களில் வரவேற்கிறது.
- 2020 குடியரசுதின அணிவகுப்புக்கான முன்மொழிவுகளை சமர்பிப்பதற்கு ஆகஸ்ட் 31, 2019 ஐ காலக்கெடுவாக வைக்கப்பட்டது.
- இந்தக்குழு இரண்டு சுற்றுக்களில் தனது முடிவுகளை மேற்கொள்கிறது.
    1. முதல் சுற்றில் அக்குழு அட்டவணைகளின் வடிவமைப்புகளை மதிப்பீடு செய்கிறது மற்றும் தேவைப்பட்டால் மாற்றங்கள் செய்வதற்கு பரிந்துரைகளை வழங்குகிறது.
    2. இரண்டாவது சுற்றில், மூன்று தர மாதிரிகளை வளர்த்துக் கொள்வதற்கு பங்கேற்போர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- இறுதியாக இவ்வித மாதிரிகள் நிபுணர் குழுவினால் தீர்மானிக்கப்படுகின்றன.

### ❖ அட்டவணைத் தேர்வுக்கான அடிப்படைகள் யாவை?

- அட்டவணை பரந்த கருத்துக்களை உள்ளடக்கி மேம்படுத்தப்பட வேண்டும் என்று மத்திய பாதுகாப்பு அமைச்சகம் பரிந்துரைக்கிறது.
- அதாவது, மாநிலங்கள் அல்லது யூனியன் பிரதேசங்களின் வரலாறு, திருவிழாக்கள், பண்பாடு அல்லது கட்டிடக்கலை பாரம்பரியம், மேம்பாட்டுத்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் போன்ற பரந்த கருத்துக்களில் அட்டவணை உருவாக்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு பங்கேற்போரும் ஒரு அட்டவணை மட்டுமே வடிவமைக்க அல்லது பங்கேற்க அனுமதிக்கப்படுவார்.
- அட்டவணையின் மாதிரிகள் மற்றும் வடிவமைப்புகளை செய்வதற்கான செலவை பங்கேற்போர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- பங்கேற்போர்கள் நிபுணர்குழு கூட்டத்தில் கலந்துகொள்ள தவறினால், அவர்கள் தகுதிநீக்கம் செய்யப்படுவர்.
- வழிகாட்டுதல்களின்படி, கூடிய அளவிற்கு அட்டவணையில் சில இயக்கம், ஒலி மற்றும் இயங்குபடம் இடம்பெறவேண்டும்.
- அட்டவணை எவ்வித லோகோவையும் பெற்றிருக்க கூடாது மற்றும் மாநிலம் அல்லது முகமையின் பெயர் முன்பக்கத்தில் இந்தியிலும், பின்பக்கத்தில் ஆங்கிலத்திலும் மற்றும் பக்கங்களில் தேவைப்பட்டால் பிராந்திய மொழிகளும் இடம் பெற வேண்டும்.
- அட்டவணைக்கு தேர்வுசெய்யப்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள்: ஆந்திரபிரதேசம், அஸ்ஸாம், சத்தீஸ்கர், கோவா, குஜராத், ஹிமாச்சலபிரதேசம், ஜம்மு மற்றும் காஷ்மீர், கர்நாடகா, மத்திய பிரதேசம், மேகாலயா, ஒடிசா, பஞ்சாப், ராஜஸ்தான், தமிழ்நாடு, தெலுங்கானா மற்றும் உத்திரபிரதேசம்
- அட்டவணைக்கு தேர்வுசெய்யப்பட்ட அமைச்சகங்கள் மற்றும் துறைகள்: தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தின் மேம்பாட்டிற்கான துறை, குடிநீர் மற்றும் சுகாதாரத்துறை, நிதிச்சேவைகள் துறை, NDRF (உள்துறை அமைச்சகம்), CPWD (வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்) மற்றும் கப்பல்துறை அமைச்சகம்

❖ **சிறந்த நடிகர்கள்:**

- Joaquin Phoenix – Joker
- Adam Driver – Marriage Story
- Leonardo DiCaprio – Once Upon a Time in Hollywood
- Antonio Banderas – Pain and Glory
- Jonathan Pryce - The Two Popes

❖ **சிறந்த நடிகைகள்:**

- Renee Zellweger Judy
- Charlize Theron Bombshell
- Scarlett Johanson – Marriage Story
- Saoirse Rann – Little Women
- Cynthia Erivo – Harriet

## ஆந்திரபிரதேசின் மூன்று தலைநகரம் - ஓர் அறிக்கை

❖ **ஆந்திரபிரதேச மாநில அரசாங்கம், வடக்கு கடற்கரை, தெற்கு கடற்கரை மற்றும் இராயல் சீமா ஆகிய மூன்று பிராந்தியங்களில் பரவலாக்கப்பட்ட மேம்பாட்டுடன் மூன்று தலைநகரங்களை உருவாக்குவதற்கு தீர்மானித்துள்ளது.**

- இம்முயற்சி ஜனவரி 20-ல் சட்டசபையின் சிறப்பு கூட்டத்தொடரில் இறுதிநிலைப்படுத்தப்படும்.
- இத்திட்டம், ஆந்திர முதலமைச்சர் ஒய்.எஸ்.ஜெகன்மோகன் ரெட்டியின் சிந்தனையில் உருவானதாகும்.
- இத்திட்டம், மூன்று பிராந்தியங்களிலும் நியாயமான மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கு நோக்கம் கொண்டுள்ளது. நிர்வாக அல்லது செயல்துறை தலைநகரம், நீதித்துறை தலைநகரம் மற்றும் சட்டத்துறை தலைநகரம் ஆகிய மூன்று தலைநகரங்களை இத்திட்டம் ஏற்படுத்துகிறது.
- இதன் பொருள் தற்போது தலைநகரமாக உள்ள அமராவதியின் மாநில நிர்வாகத்தை மாற்றுவதாகும்.
- இத்திட்டத்தின்படி, முதலமைச்சர் அலுவலகம், ராஜ்பவன் மற்றும் செயலகம் உள்ளடக்கி பெரும்பாலான அரசாங்க அலுவலகங்கள் விசாகப்பட்டினத்திற்கு மாற்றப்படும்.
- மாநில உயர்நீதிமன்றம் கர்னூலில் அமைக்கப்படும்.
- அமராவதி மாநிலத்தின் சட்டத்துறை செயலகமாக இருக்கும் மற்றும் சட்டச்சபை கூட்டத்தொடர் அங்கு நடக்கும்.

## ராஜஸ்தானில் வெட்டுக்கிளி தாக்குதல் - ஓர் அறிக்கை

❖ **ராஜஸ்தானில் கடந்த 60 ஆண்டுகளில் மாநிலத்தின் 10 மேற்கத்திய மாவட்டங்களில் தற்போது வெட்டுக்கிளி தாக்கத்தினால் குறைந்தது 3.6 லட்சம் ஹெக்டேர் நிலத்தின் விவசாயப் பயிர் நாசமடைந்துள்ளது.**

- ஸ்ரீகங்கா நகர் மாவட்டத்தில் அதிகபட்சமாக 75சதவீத விவசாயப் பயிர்கள் வெட்டுக்கிளி தாக்கத்தினால் பாலடைந்துள்ளது.
- மற்ற ஒன்பது மாவட்டங்கள் ஹனுமன்கார்க், பிகானர், ஜெய்சல்மர், பார்மர் ஜோத்பூர், ஜாலூர், சிரோஹி, நாகர் மற்றும் சுரு போன்றவைகளாகும்.
- இதனால் கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்த வருடம் வெட்டுக்கிளி தாக்கத்தினால் விவசாயப்பயிர் நாசமடைந்து விவசாயிகள் துன்பத்திற்கு உள்ளாயினர்.

**அமேசானின் இந்திய முதலீடுகள் - ஓர் அறிக்கை**

❖ **மின்னணு வர்த்தக ஜாம்பவ நிறுவனமான அமேசானின் நிறுவனர் மற்றும்** CEO Jeff Bezos, **சிறிய இந்திய விற்பனையாளர்களை எண்ணியல் படுத்துவதற்கு** $1 **பில்லியன் (ரூ.7000 கோடி) முதலீட்டை அறிவித்துள்ளார்.**

**அழங்காநல்லூர் ஜல்லிக்கட்டு – ஓர் அறிக்கை**

❖ **தமிழ்நாட்டின் மிகவும் பிரபலமான அழங்காநல்லூர் ஜல்லிக்கட்டு ஜனவரி 17-ல் பாரம்பரிய முறையுடன் நடத்தி முடிக்கப்பட்டது.**

- இதில் 739 காளைகளும் மற்றும் 688 மாடுபிடி வீரர்களும் பங்கேற்றனர்.
- பார்வையாளர்களாக 15,000 பேர் கலந்து கொண்டனர்.
- அதிக எண்ணிக்கையுள்ள மாடுகளை அடங்குபவருக்கு முதல் பரிசாக ஒரு மகிழுந்து வழங்கப்பட்டது.
- இரண்டாவது பரிசாக மோட்டார் இருசக்கரவாகனமும் மற்றும் மூன்றாவது பரிசாக ரூ.10000 ரொக்கமும் வழங்கப்பட்டன.
- அழங்காநல்லூரை சேர்ந்த ரஞ்சித் குமார் என்பவர் 16 காளைகளை பிடித்து இந்த வருடத்தின் சிறந்த மாடுபிடி வீரராக அறிவிக்கப்பட்டார்.
- ரஞ்சித் குமாருக்கு ஒரு ஹுண்டான் சான்ரோ மகிழுந்து மற்றும் ரூ.7 லட்சம் மதிப்புள்ள 4 பசு மாடுகளை தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி.கே.பழனிச்சாமி வழங்கினார்.
- வியக்கத்தக்க வகையில் ரஞ்சித்குமாரின் சகோதரர் ராம் குமார் சென்ற வருடம் சிறந்த மாடுபிடி வீரர் விருது பெற்றார்.
- இரண்டாவது பரிசாக அழகர்கோவிலை சேர்ந்த 14 காளைகளைப் பிடித்த கார்த்திக் என்பவருக்கு ஒரு மோட்டார் இருசக்கர வாகனம் வழங்கப்பட்டது.
- மூன்றாவது பரிசாக 13 காளைகளை அடக்கிய அரித்தாம்பட்டியைச் சேர்ந்த கணேஷன் என்பவருக்கு ரூ.10000 ரொக்கம் வழங்கப்பட்டது.
- ஜனவரி 2017-ல் உச்சநீதிமன்றத்தால் ஜல்லிக்கட்டுக்கு தடைவிதித்ததை தொடர்ந்து தமிழ்நாட்டில் பேரளவு எதிர்ப்புக்கள் ஏற்பட்டது.
- அந்த எதிர்ப்புகளைத் தொடர்ந்து, 1960 ஆம் ஆண்டின் கால்நடைகளின் கொடூரத்தை தடுக்கும் சட்டத்தை (Prevention of Cruelty to Animals Act, 1960) சட்டத்தை திருத்துவதற்கு ஜனவரி 23, 2017-ல் தமிழ்நாடு சட்டசபையால் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மசோதா அறிமுகப்படுத்தப்பட்டு சட்டமாக்கப்பட்டது.

**உலக ஜனநாயக குறியீடு – ஓர் அறிக்கை**

❖ **இந்த 2019-க்கான உலக ஜனநாயக குறியீடு என்பது பொருளாதார உளவுத்துறை அலகால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.**

- இதில் முதல் 10 நாடுகள் - நார்வே, ஐஸ்லாந்து, சுவீடன், நியூசிலாந்து, பின்லாந்து, அயர்லாந்து, டென்மார்க், கனடா, ஆஸ்திரேலியா மற்றும் ஸ்விட்சர்லாந்து ஆகும்.
- இதில் இந்தியாவின் தரம் அல்லது இடம் 51 ஆகும்.
- ஸ்ரீலங்கா 69வது இடத்திலும், வங்காளதேசம் 80 வது இடத்திலும், நேபாள் 92 வது இடத்திலும் மற்றும் பாகிஸ்தான் 108 வது இடத்திலும் உள்ளன.
- கடைசி 10 நாடுகள் - தென்கொரியா, காங்கோ, மத்திய ஆப்பிரிக்க குடியரசு, சிரியா, சாத், துர்மெனிஸ்தான், ஈகோடெரியல் கெய்னியா, டஜகிஸ்தான், சவுதி அரேபியா மற்றும் ஏமன் ஆகும்.

**பத்ம விருதுகள் வெற்றியாளர்கள் - ஓர் அறிக்கை**

❖ **பத்ம விபூஷன் வெற்றியாளர்கள் - 7:**

| எண் | பெயர் | களம் | மாநிலம் (அ) நாடு |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ ஜார்ஜ் பெர்னான்டஸ் (இறப்பிற்கு பின்) | பொது விவகாரம் | பீகார் |
| 2. | ஸ்ரீ அருண் ஜெட்லி (இறப்பிற்கு பின்) | பொது விவகாரம் | டெல்லி |
| 3. | சர் அனிரூத் ஜுகுனாத் | பொது விவகாரம் | மாரிடஸ் |
| 4. | ஸ்ரீமதி எம்.சி. மேரி கோம் | விளையாட்டுகள் | மணிப்பூர் |
| 5. | ஸ்ரீ சானுலால் மிஸ்ரா | கலை | உத்திரபிரதேசம் |
| 6. | ஸ்ரீமதி சுஷ்மா சுவராஜ் (இறப்பிற்கு பின்) | பொது விவகாரம் | டெல்லி |
| 7. | ஸ்ரீ விஸ்வதீர்த்த சுவாமி ஜி ஸ்ரீ பெஜாவாரா அதோகஜா மாதா உடுப்பி (இறப்பிற்கு பின்) | மற்றவை – ஆன்மிகம் | கர்நாடகா |

❖ **பத்ம பூஷன் வெற்றியாளர்கள் - 16 பேர்**
❖ **பத்மஸ்ரீ வெற்றியாளர்கள் - 118 பேர்**
❖ **மொத்த பத்ம விருது வெற்றியாளர்கள் - 141 பேர்** (7+16+118)

**அறிக்கை**

❖ **தேசிய கூடைப்பந்து கழக** (National Basketball Association – NBA) **ஜாம்போவானான அமெரிக்காவைச் சேர்ந்த** Kobe Bryant **(41 வயது), ஜனவரி 26-ல் கலிபோர்னியாவில் தனது மகள்** Gianna **(வயது 13) மற்றும் ஏழு பேருடன் ஹெலிக்காப்டர் விபத்தில் காலமானார்.**

- இவர் ஐந்து முறை NBA சாம்பியன் பட்டத்தையும், ஒலிம்பிக் தங்கப்பதக்கத்தையும் மற்றும் ஆஸ்கார் பரிசையும் வென்றுள்ளார்.

**தமிழ்நாடு காவல் கருவிகள் - ஓர் அறிக்கை**

❖ **தமிழ்நாடு காவல்துறை, களவரங்களின் போது, வாழ்வை அச்சுறுத்தும் காயங்களிலிருந்து அதன் பணியாளர்களை பாதுகாப்பதற்கு கலக கியர் மற்றும் சாதனங்களை வாங்குவதற்கு முடிவுசெய்துள்ளது.**

- தேசிய குற்றப்பதிவுகள் கழகத்திடமிருந்து (National Crime Records Bureau – NCRB) பெற்ற தகவலின்படி, களவரத்தை அடக்குவதற்கு காவலர்கள் ஈடுபடும்போது, 2014-ல் 24 காவலர்கள் காயமுற்றனர் மற்றும் அதன் எண்ணிக்கை 2018-ல் 100 ஆக உயர்ந்தது.
- இந்த பிரச்சனை முதன்முதலில் காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கழகத்தால் (Bureau of Police Research and Development – BPRD) நிதியளிக்கப்பட்ட ஓர் ஆய்வால் வலியுறுத்தப்பட்டது.

APPOLO STUDY CENTRE